# வ.உ.சி. : வழங்கியவர்கள்

செ.திவான்

# வ.உ.சி. : வழங்கியவர்கள்

செ.திவான்

## வ.உ.சி. குறித்து ஆசிரியரின் 20வது நூல்

| | | |
|---|---|---|
| நூலின் தலைப்பு | : | வ.உ.சி. : வழங்கியவர்கள் |
| பொருள் | : | வரலாறு |
| நூலின் ஆசிரியர் | : | செ. திவான் |
| மொழி | : | தமிழ் |
| பதிப்பு ஆண்டு | : | 2021, செப்டம்பர் 5<br>வ.உ.சி.யின் 150வது பிறந்த தின வெளியீடு |
| உரிமை | : | ஆசிரியருக்கே |
| பக்கங்கள் | : | 120 |
| அச்சிட்டோர் | : | நியூஸ் மேன் பப்ளிகேஷன்ஸ், மதுரை<br>போன்:0452-4396667, 90803 30200 |
| வடிவமைப்பு | : | அப்துல் நசீர், 9489115236 |
| விலை | : | ரூ. 120/- |
| ISBN No. | : | 978-93-92351-03-7 |

**காணிக்கை!**

தேசபக்தச் செம்மல் வ.உ.சி.யின் புகழினை
தினமும் போற்றிவரும்
தூயவர்களுக்கு

-செ.திவான்

ரெகான் சுலைமான் பதிப்பகம்

# உள்ளே......


1. வீரத்தலைவர் வ.உ.சி.யின் வாழ்க்கை நிகழ்ச்சிகள் 04
2. சுதேசி ஸ்டீம் நேவிகேஷன் கப்பல் கம்பெனிக்கு வழங்கியவர்கள் 07
3. வ.உ.சி.யின் நூல்கள் வெளிவர வழங்கியவர்கள் 24
4. வ.உ.சி. : வழங்கியவர்கள் 91





சுதேசி நீராவிக் கப்பல்

# வீரத்தலைவர் வ.உ.சி.யின் வாழ்க்கை நிகழ்ச்சிகள்

உலகெலாம் வாழும் தமிழர்கள் நினைத்து நினைத்துப் பெருமை கொள்ளவும், போற்றிப் பாராட்டிடும் வகையிலும் தரணியில் தனக்கெனத் தனிச் சிறப்புப்பெற்ற உத்தமத் தலைவர் வ.உ.சி.யின் வாழ்க்கை நிகழ்ச்சிகள்.

## பிறப்பு

இன்றைய தூத்துக்குடி மாவட்டம், ஓட்டப்பிடாரத்தில் 1872ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் 5 ஆம் நாள் வியாழக்கிழமையன்று, உலகநாதப்பிள்ளைக்கும் பரமாயி அம்மையாருக்கும் மகனாகத் தோன்றினார் வ.உ.சி. இவருக்கு உடன்பிறந்தோர் எழுவர். தந்தை உலகநாதப் பிள்ளையின் தமையன் சிதம்பரம் என்பவரின் நினைவாக சிதம்பரம் என்ற பெயர் சூட்டப்பட்டது.

## கல்வி

வீரப்பெருமாள் அண்ணாவியிடம் தொடக்கக் கல்வியையும், கிருட்டிணன் என்பவரிடம் ஆங்கிலமும், ஓட்டப்பிடாரத்தில் நடுத்தரக் கல்வியையும், திருநெல்வேலி ம.தி.தா. உயர்நிலைப் பள்ளியிலும், தூத்துக்குடியிலும் உயர்நிலைக் கல்விபெற்று, திருச்சிராப்பள்ளியில் சட்டக்கல்வியும் பயின்று தேறினார். கஸ்தூரி ஐயங்கார், அண்ணாத்துரை ஐயர், சவரிராயப் பிள்ளை ஆகியோரிடமும் ஆங்கில தமிழ் மொழியையும் சிறப்பாகக் கற்றறிந்தார்.

## திருமணம்

ஒட்டப்பிடாரத்தில் வட்டார அலுவலகத்தில் எழுத்தராகப் பணியினைத் துவங்கிய வ.உ.சி. 1895இல் தூத்துக்குடியில் வழக்குரைஞர் தொழிலைத் தொடங்கலானார். 1895 இல் திருச்செந்தூர் சுப்பிரமணியம்பிள்ளையின் மகள் வள்ளியம்மையை மணந்தார். கி.பி. 1900 ஆம் ஆண்டில் அவர் மறைந்ததும், மீனாட்சி என்னும் அம்மையாரைத் திருமணம் செய்து கொண்டார்.

## கப்பலோட்டிய தமிழன்

1905 முதல் 1908 வரை நான்கு ஆண்டுகள் வ.உ.சி.யின் அரசியல் வாழ்வில் எழுச்சிமிகு ஆண்டுகளாகும். 1906 அக்டோபர் 16இல் (வீரபாண்டிய கட்டபொம்மனை வெள்ளையர் தூக்கிலிட்ட அதே நாளில்) தூத்துக்குடியில் 'சுதேசிக் கப்பல் கம்பெனி'யைக் துவங்கினார். 1907இல் சூரத் காங்கிரஸிலும் 1908இல் தேசாபிமான சங்கம் நெல்லையில் அமையவும் வ.உ.சி. ஆற்றிய பணிகள் குறிப்பிடத்தக்கது.

## வீரமுரசு சுப்பிரமணியசிவா

1908 பிப்ரவரி 3 முதல் மார்ச் 9 வரை வீரமுரசு சுப்பிரமணிய சிவாவுடன் இணைந்து வ.உ.சி. ஆற்றிய தொடர் சொற்பொழிவுகள் தமிழக அரசியலில் விடுதலைத்தீயை வளர்த்தது. ஆத்திரங்கொண்ட ஆங்கிலேய அரசினரால் 1908 மார்ச் 12 இல் கைது செய்யப்பட்டார். 1908 ஜூலை 7இல் வெள்ளையர் அரசு வ.உ.சி.க்கு இரட்டை ஆயுள்தண்டனை வழங்கியது.

## செக்கிழுத்த செம்மல்

பாளையங்கோட்டைச் சிறையிலும், கோவைச் சிறையிலும், கண்ணனூர் சிறையிலும் வாடிய வ.உ.சி. 4 வருடம், 11 மாதங்கள், 12 நாட்கள் சிறைவாசத்திற்குப் பின் 24-12-1912இல் விடுதலையானார்.

## சென்னை - கோவை - கோயிற்பட்டி வாழ்க்கை

சென்னை சிந்தாதிரிப்பேட்டையில் அருணாச்சல நாயகன் வீதியிலும், திருமயிலையிலும், பெரம்பூரிலும் வாழ்ந்த வ.உ.சி. (19-12-1919) குடும்பத்தை நடத்தும் பொருட்டு அரிசி வியாபாரமும், நெய் வியாபாரமும் செய்தார்.

சென்னையில் தொடர்ந்து வாழமுடியாமல் நண்பர்களின் வேண்டுகோளை ஏற்று கோவையில் வாழத் துவங்கினார் (1919 – 1922) அப்போது அரசியலிலிருந்து முழுமையாக விலகினார். காங்கிரசில் மிதவாதிகளின் செல்வாக்கினால் தீவிரவாதியான வ.உ.சி. காங்கிரஸ் இயக்கத்திலிருந்தும் தம்மை விடுவித்துக் கொண்டார்.

வ.உ.சிதம்பரம் பிள்ளை



அவரது வீடு

பின்னர், 1922 இல் கோவில்பட்டியில் குடியேறி வழக்குரைஞர் தொழிலை நடத்தி வந்த வ.உ.சி. 1927இல் அரசியலில் திரும்பவும் தம்மை உட்படுத்திக்கொண்டு, சேலத்தில் நிகழ்ந்த மாநாட்டில் தலைமையேற்றுச் சிறப்பித்தார். தந்தை பெரியார் ஈ.வெ.ரா. அவர்களுடன் நட்பை வளர்த்துக்கொண்டார்.

## தூத்துக்குடி-இறுதி

1932இல் மாவட்டஆட்சித் துணைத்தலைவரின் தலைமையிடம் கோவில்பட்டியிலிருந்து தூத்துக்குடிக்கு மாற்றப்பட்டதால் வ.உ.சி.யும் தூத்துக்குடியில் குடியேறினார்; அங்கு உடல் நலிவிற்கிடையில் வழக்குரைஞர் தொழிலை நடத்தி வந்தார். 1936 நவம்பர் 18 இரவு 11.30 மணியளவில் பூதவுடல் நீத்துப் புகழுடம்பு எய்தினார்.

# சுதேசி ஸ்டீம் நேவிகேஷன் கப்பற் கம்பெனிக்கு வழங்கியவர்கள்

வானம் பொழியுது; பூமி விளையுது; மன்னவன் காணிக்கு ஏது கிஸ்தி? என முழக்கமிட்ட வீரபாண்டிய கட்டபொம்மன் தூக்குமரத்தை முத்தமிட்ட அக்டோபர் 16 ஆம் நாளன்று, 85, பெரிய காட்டன் ரோடு, தூத்துக்குடியில் தேசபக்தச் செம்மல் வ.உ.சி. சுதேசி ஸ்டீம் நேவிகேஷன் கம்பெனியை 1906இல் துவக்கினார்.

## சுதேசிக் கப்பல் கம்பெனி

கம்பெனியின் மூலதனம் 10,00,000 ரூபாய் (பத்து இலட்சம்) பங்கு ஒன்று 25 ரூபாய், 40000 பங்குகள் (40000 x 25 = 10,00,000) பங்குத் தொகை இந்தியர், ஆசியக் கண்டத்தினரிடமிருந்து பெறுவது என்று முடிவு செய்யப்பட்டது.

## 1906 ஏப்ரல்

தூத்துக்குடி – இலங்கை கடல்வழி வாணிபம் இன்றியமையாதது என உணர்ந்த வ.உ.சி. 1906 இல் கொழும்பு சென்றார்.

## சிலோன் அப்சர்வர்

அங்கிருந்து வெளிவரும் சிலோன் அப்சர்வர் (CEYLON OBSERVER) பத்திரிகைக்கு பேட்டி தந்தார் வ.உ.சி. 6.4.1906 வெள்ளிக்கிழமை மாலையில் வெளியான அந்த இதழில் ஆங்கிலத்தில் வ.உ.சி. இலங்கைக்கும் தூத்துக்குடிக்கும் புதிய சுதேசிக் கப்பலை இயக்க இருக்கும் செய்தியை அறிவித்தார். (A New Steamer Service between Colombu and Tuticorin).

## உதய தாரகை 12.04.1906

1841 இல் யாழ்ப்பாணம் அமெரிக்கன் மிஷன் சார்பில் தொடங்கப்பட்ட தமிழ் – ஆங்கில இருமொழி இதழ் உதயதாரகை. 12.4.1906 வியாழக்கிழமை இதழில் வ.உ.சியின் சுதேசிக்கப்பல் முயற்சி குறித்து தலையங்கம் தீட்டியது. (14.2.1907 இல் இந்திய சுதந்திரப் போரை எதிர்த்தும் எழுதத் துவங்கியது)

## பெட்டா பகுதி மக்கள்

கொழும்பு பெட்டா பகுதியில் வசிக்கும் தமிழ் வர்த்தகர்கள் செல்வாக்குப் பெற்றவர்கள். இவர்களது ஆதரவைப் பெற்றிடவே வ.உ.சி. இலங்கை சென்றார்.

## பெ.சு. மணி - என். சம்பத்

*இந்திய அரசு செய்தி ஒலிபரப்பு அமைச்சகம் பப்ளிகேஷன்ஸ் டிவிஷன் நவபாரதச் சிற்பிகள் வ.உ.சிதம்பரம் பிள்ளை என்ற நூலை ஆர்.என்.சம்பத், பெ.சு. மணி இருவரும் எழுதி ஆங்கிலத்தில் 1992 மார்ச்சில் 28 ரூபாய் விலையியல் 142 பக்கங்களில் வெளியிட்டது. அதன் தமிழாக்கம் மறைந்த எனது மதிப்பற்குரிய நண்பர் பெ.சு.மணியால் செய்யப்பட்டு ஆகஸ்ட் 1995 இல் 70 ரூபாய் விலையில் 274 பக்கங்களில் வெளிவந்தது.*

## வரலாற்றுப் பிழை

*தேசியத்தைத் தீவிரமாக ஆதரித்து தமிழறிஞர்களால் நடத்தப்பெற்ற ஓர் உயர்தர இலக்கியப் பத்திரிகை 'விவேக பாநு'.* **1902 செப்டம்பர் 1 இல் வெளிவந்தது என்று பெ.சு.மணியும், என்.சம்பத்தும்** *அந்த நூலில் (தமிழ் பக்கம் 64, ஆங்கிலம் பக்கம் 31) குறிப்பிட்டுள்ளது வரலாற்றுப் பிழையாகும்.*

## விவேகபாநு

*தூத்துக்குடி அருணோதயம் அச்சியந்திரசாலையில் பதிப்பிக்கப்பட்டு 1900 செப்டம்பர் 1 முதல் பத்திரிகை 1க்கு விலை அணா 2 என்று வெளிவந்த மாதாந்திரத் தமிழ்ப் பத்திரிகை விவேகபாநு.*

## கணபதியானந்த சுவாமி

*விவேகபாநுவின் ஆசிரியர் கணபதியானந்தசுவாமி, தனது முதல் இதழிலேயே வ.உ.சி.யின் கட்டுரையை வெளியிட்டுள்ளார்.*

## கடவுளும் பக்தியும்

1900 செப்டம்பர் விவேகபாநு இதழில் பக்கம் 7 முதல் 16 வரை வ.உ.சி.யின் கடவுளும் பக்தியும் கட்டுரை வெளிவந்துள்ளது. அக்டோபர் இதழில் 'விதி அல்லது ஊழ்' என்ற கட்டுரை தலைப்புக் கட்டுரையாக 27 முதல் 31 வது பக்கங்கள் வரை வந்துள்ளது. 3வது இதழில் வ.உ.சி கட்டுரை ஏதும் இல்லை.

## ஈகை

1900 டிசம்பர் இதழில் வ.உ.சி.யின் 'ஈகை' கட்டுரை 75 வது பக்கம் முதல் 80 வது பக்கம் வரை வந்துள்ளது. 5 வது இதழில் வ.உ.சி. கட்டுரை ஏதுமில்லை.

## கடவுள் ஒருவரே

விவேகபாநு 1901 பிப்ரவரியில் வெளிவந்த ஆறாவது இதழில் வ.உ.சியின் 'கடவுள் ஒருவரே' கட்டுரை 125 வது பக்கம் முதல் 128 பக்கம் வரை வந்துள்ளது.

## நூருல் இஸ்லாம் அச்சியந்திர சாலை

1901 மார்ச் முதல் நாள் முதல் திருநெல்வேலி நூருல் இஸ்லாம் அச்சியந்திரசாலையில் பதிப்பிக்கப்பட்டு தூத்துக்குடியில் பிரசுரிக்கப்பட்டது விவேகபாநு.

## வள்ளிநாயக சுவாமி

1901 மார்ச்சிலிருந்து விவேகபாநுவின் ஆசிரியர் வள்ளிநாயக சுவாமி.

## குற்றாலம் அகஸ்தியர் ஆசிரமம்

1901 ஆகஸ்ட் விவேகபாநு இதழ் 12 திருநெல்வேலி நூருல் இஸ்லாம் அச்சியந்திரசாலையில் பதிப்பிக்கப்பட்டு, குற்றாலம் அகஸ்தியர் ஆசிரமத்திலிருந்து பிரசுரிக்கப்பட்டது.

## எம்.ஆர். கந்தசாமிக் கவிராயர்

அதன்பின் வெளிவந்த விவேகபாநு இதழ்கள் வெள்ளை அரசு ஆவணக்காப்பகத்தில் அடியேன் பார்வைக்குக் கிடைக்கவில்லை. 1905 மே மாத இதழில் புரொப்ரைட்டர் எம்.ஆர். கந்தசாமிக் கவிராயர் என்றும், பத்திராதிபர் எஸ்.சாமி

நாதையர், எம்.ஆர். கந்தசாமிக் கவிராயர் என்றும் வந்துள்ளது. மதுரை ஸ்ரீமீனாம்பாள் அச்சகத்தில் பதிப்பிக்கப் பெற்று வருடச் சந்தா ரூபாய் இரண்டு பத்திரிகை 1க்கு விலை அணா ஐந்து.

## வந்தே மாதரம்

1906 ஆகஸ்ட், செப்டம்பர், அக்டோபர், நவம்பர் மாதங்களுக்கான விவேகபாநு வால்யூம் 6, புஸ்தகம் 8,9,10,11 வந்தே மாதரம் எனும் தலையங்கத்துடன் வெளிவந்தது. அதில் பத்திராதிபர் கந்தசாமிக் கவிராயர் எழுதுகிறார் (பக்கம் 285).

தூத்துக்குடி வக்கீல் ஸ்ரீமான் வ.உ.சிதம்பரம்பிள்ளையவர்கள் இம்மதுரை மாநகரில் வந்து பிரசங்கமாரி பொழிகின்றார்கள். இவர்களது முயற்சித்திறமும் ஊக்கமும் அன்பும் நம்மவர் மனதைக் கவர்கின்றன. ஒரு நாள் மதுரை கீழ மாசி வீதியில் நாடார்கள் பேட்டையில் வர்த்தகர்கள் பலர் கூடிய சபையில் வ.உ.சிதம்பரம் பிள்ளையவர்கள் பிரசங்கித்தார்கள். அப்பொழுது அக்கிராசனம் (தலைமை) வகித்த சே.ரா. சுப்பிரமணியக்கவிராயர் பேசிய விஷயங்களை சுதேசிய முயற்சி என்று தந்துள்ளோம் என்று குறிப்பிட்டுள்ளார்.

## சேற்றூர் ரா.சுப்பிரமணியக் கவிராயர்

திருவாடுதுறை ஆதின வித்துவானும் மதுரைத் தமிழ்ச்சங்கத்துச் சைவ நூல்பரிசோதகருமாகிய சேற்றூர் ரா.சுப்பிரமணியக் கவிராயரின் சுதேச முயற்சிக் கட்டுரையில் சில பகுதி இதோ.

"இப்பொழுது தூத்துக்குடியிலே வக்கீல் உத்தியோகம் பெற்றிருக்கும் மகாகனம் தங்கிய நண்பர் சிதம்பரம் பிள்ளை அவர்கள் எல்லோருக்கும் பயனாகும்படி சுதேச ஸ்டீம் நேவிகேஷன் கம்பெனி ஏற்படுத்தி அதற்கு வேண்டிய பெருமுயற்சியுஞ் செய்து வருகிறார்கள். இந்தக் கம்பெனிக்கு **ஐந்து லட்ச முதலுக்குக் கிடைக்கக்கூடிய** லாபம் பத்து லட்ச ரூபாயென்று விளம்பர மூலமாகத் தெரிவித்திருக்கிறார்கள். இந்த பத்து லட்ச ரூபாயும் அந்நிய தேசத்தவர்கள் கொண்டு போகிறார்கள் என்று பரிதாபமுற்று நமது சுதேசிகளே அனுபவிக்க வேண்டுமென்று எண்ணிய இதுவன்றோ அறிவுடைமையும், பொது நன்மையும் என்று சேற்றூர் ரா.சுப்பிரமணியக் கவிராயர் எழுதினார்.

## சுதேச ஸ்டீமர் விக்ஞாபனம்

விவேகபாநு மேற்சொன்ன இதழில் பக்கம் 294 முதல் 297 வரை 4.10.1906 நாளிட்ட அறிக்கையில் வ.உ.சி சுதேசி கப்பல் கம்பெனி குறித்து விரிவாகத் தந்துள்ளார்.

## ம.ரா. அரசு

வ.உ.சி கட்டுரைகள் நூல் முதல் எளியேன் நூல் வரை பல நூல்களில் அந்த அறிக்கை வெளிவந்துள்ளது எனவே அதனை இங்கு மறுபடியும் குறிப்பிடவில்லை.

## முதல் ஐந்து லட்சம் லாபம் பத்து இலட்சம்

வ.உ.சியின் அறிக்கையின் சாரம் சுதேசிக் கப்பல் கம்பெனிக்கு முதலீடு ஐந்து லட்சம் என்றால் ஆண்டு வருமானம் பத்து இலட்சம் என்பதுதான்.

## வ.உ.சி.யின் வேண்டுகோள்

‘ஒவ்வொரு சுதேசாபிமானியும் இக்கம்பெனியில் பங்காளியாகி இலாபத்தை அடைந்து நமது சுதேசியத்தை மேன்மையான நிலைமைக்கு கொண்டுவரும்படி பிரார்த்திக்கிறேன்’ என்று வீரத்தலைவர் வ.உ.சி. வேண்டுகோள் விடுத்தார்.

## பாண்டித்துரைத்தேவர்

பாலவநத்தம் ஜமீன்தார் பாண்டித்துரைத் தேவர் 2000 பங்குகளை 50,000 ரூபாய்க்கு வாங்கினார். சென்னை, தஞ்சாவூர், மதுரையில் சுதேசிப் பங்குகளை வாங்கிட முயற்சிகளையும் செய்தார்.

## கே.வி.ராமாச்சாரி

மதுரை சௌராஷ்டிரா சபையின் தலைவர் கே.வி.ராமாச்சாரி 50 பங்குகளை ரூ.1,250க்கு வாங்கினார்.

## சென்னையில் அலுவலகம்

டபிள்யூ. சீனிவாசன் என்பவரை தலைமை முகவராகக் கொண்டு சென்னையில், ஜார்ஜ் டவுன், 42, மண்ணடி தெருவில் சுதேசிக் கப்பல் கம்பெனியின் அலுவலகம் இயங்கியது.

மேலும் நான்கு துணை ஏஜெண்டுகளும் கப்பல் கம்பெனியில் பணியாற்றினார்கள்.

## சண்முககசுந்தரம் பிள்ளை - கலியாண சுந்தரம் அய்யர்

தஞ்சாவூர் மாவட்டத்தில் சுதேசிக் கப்பல் கம்பெனியின் பங்குகளை விற்பதற்கு வந்தே மாதரம் பிள்ளை என்று அழைக்கப்பட்ட சண்முகசுந்தரம் பிள்ளையும், கல்யாண சுந்தரம் அய்யரும் பணியாற்றினார்கள்.

## முத்தையா பிள்ளை

மதுரையில் முத்தையா பிள்ளை சுதேசிக் கப்பல் கம்பெனிக்கு பங்குகளைத் திரட்டினார்.

## சி.விஜயராகவாச்சாரியார்

சேலத்தில் வழக்கறிஞர் சி.விஜயராகவாச்சாரியார், நஞ்சுண்ட அய்யர், பி.வி.நரசிம்ம அய்யர் பங்குகளைத் திரட்டும் பணியில் ஈடுபட்டார்கள்.

## கந்தசாமிக்கவிராயர் - நடராஜ் அய்யர்

சேலத்தில் கவிஞர் மு.ரா.கந்தசாமிக் கவிராயர், பண்டிதர் நடராஜ் அய்யர் இருவரும் சுதேசிக் கப்பல் கம்பெனியின் பங்குகளை விற்றனர்.

## எஸ்.டி.கிருஷ்ண அய்யங்கார்

*1907* ஆகஸ்ட்டில் கப்பல் கம்பெனிக்கு நிதி திரட்டிட வ.உ.சி. சேலம் சென்றார். அழகப்ப செட்டி, திருமலை அய்யர் ஆகியோரைச் சந்தித்தார். சுதேசிக் கப்பல் கம்பெனியில் பணியாற்றிய எஸ்.டி.கிருஷ்ண அய்யங்கார் வ.உ.சி.யுடன் சேலம் பயணத்தின்போது உடனிருந்து உதவினார்.

## அப்பாத்துரை அய்யர்

தேசியக் கவி பாரதியின் மாப்பிள்ளையான கே.ஆர். அப்பாத்துரை அய்யர் ஊர் ஊராகச் சென்று கப்பல் கம்பெனிக்கு பங்குகளைத் திரட்டினார்.

## மகாகவி பாரதி

*1907 மார்ச் 17இல் சென்னையில் வ.உ.சி.யும், மகாகவி பாரதியும் கப்பல் கம்பெனிக்கு பங்குகளைத் திரட்டினார்கள். கடலூரிலும் வ.உ.சி. கம்பெனியின் பங்குகளை விற்று வந்தார்.*

*1907ல் ஜூலையில் வ.உ.சி. கொழும்பு சென்றார். தமிழகத்திலும், ஆந்திரப் பிரதேசத்திலும், பர்மாவிலும், இலங்கையிலும் பங்குகள் விற்கப்பட்டன.*

*தமிழகத்தில் 1907 இறுதிவரை சுதேசிக் கப்பல் கம்பெனிக்கு கிடைத்த பங்குகள் 4000 மட்டுமே*

*(4000 x 25 = ரூ.1,00,000)*

## கல்கத்தா 15,000 பங்குகள்

*கல்கத்தாவைச் சேர்ந்த தொழிலதிபர்கள் 15,000 பங்குகளை வாங்கினார்கள்.*

*(15,000 x 25 = ரூ.3,75,000)*

## பம்பாய் (மும்பை) 10,000 பங்குகள்

*பம்பாய் (மும்பை) சேர்ந்த தொழிலதிபர்கள் 10,000 பங்குகளை வாங்கினார்கள்.*

*(10,000 x 25 = ரூ.2,50,000)*

## மும்பை கே.ஜே. முகம்மது பக்கீர் சேட்

*சுதேசிக் கப்பல் கம்பெனியின் பங்குகள் விற்கப்பட்டதின் மூலம் கிடைத்த தொகை ஆறு லட்ச ரூபாய். அதில் தான் கப்பல்கள் வாங்கப்பட்டது. மும்பையைச் சேர்ந்த வணிகர் கே.ஜே.முகம்மது பக்கீர் சேட் கப்பல் கம்பெனியின் 8000 பங்குகளை வாங்கினார்.*

*(8000 x 25 = ரூ.2,00,000)*

*அதாவது இரண்டு லட்ச ரூபாய்க்கு பங்குகள் வாங்கினார்.*

*சுதேசிக் கப்பல் கம்பெனியின் நிர்வாகிகள் பட்டியல் இதோ;*

## எஸ்.எஸ்.காலியோ

## சுதேசி ஸ்டீம் நேவிகேஷன் கம்பெனி (லிமிடெட்)

## தூத்துக்குடி

1. இந்தக் கம்பெனியானது 1882ம் வருடத்து இந்தியன் கம்பெனி ஆண்டுப்படி 1906-ம் வருடம் அக்டோபர் மாதம் 16-ம் தேதி ரிஜிஸ்டர் செய்யப்பெற்றது.
2. இந்தக் கம்பெனிக்கு மூலதனம் 10,00,000 இம்மூலதனம் பங்கு ஒன்றுக்கு 25.0.00 வீதம் 40,000 பங்குகளாக இந்தியா, இலங்கை முதலிய ஆசியக் கண்டத்துத் தேசத்தார்களிடம் இருந்து சேர்க்கப்படும். மூலதனம் வேண்டும்போது அதிகரிக்கப்படும். பங்காளிகள் அவரவர்கள் பங்குத் தொகை மட்டில் உத்தரவாதிகள்.
3. இக்கம்பெனியின் உத்தியோகஸ்தர்கள்.

### அக்கிராசனர்

ஸ்ரீமான். பொ.பாண்டித்துரைச்சாமித் தேவர் அவர்கள், பாலவநத்தம் ஜமீன்தார், இராமநாதபுரம், மதுரை

### டயரெக்டர்கள்:

1. மகா.ள.ள.ஸ்ரீ.பி.வெங்கிட்டராமாநுஜலுநாயுடுகாரு, பேங்கர், தூத்துக்குடி.
2. மகா.ள.ள.ஸ்ரீ.பி.சி. விஜயராகவாச்சாரியாரவர்கள், பி.ஏ.பி.எல்., வக்கீல், சேலம்
3. மகா.ள.ள.ஸ்ரீ.பி.ஏ.சுந்தரசாஸ்திரியாரவர்கள்,பி.ஏ.பி.எல்., திருநெல்வேலி பாலம்.
4. மகா.ள.ள.ஸ்ரீ.என்.ஏ.வி.சோமசுந்தரம் பிள்ளையவர்கள் பி.ஏ.பி.எல்., வண்ணார்பேட்டை, திருநெல்வேலி பாலம்.
5. மகா.ள.ள.ஸ்ரீ.எம்.டீ.தேவதாஸ் பிள்ளையவர்கள், பி.ஏ.பி.எல்., பாளையங்கோட்டை.
6. மகா.ள.ள.ஸ்ரீ.டி.எஸ்.சுப்பிரமணிய பிள்ளையவர்கள், பி.ஏ.பி.எல்., சேர்மேன், சிவதேவஸ்தானம் கமிட்டி, திருநெல்வேலி.
7. மகா.ள.ள.ஸ்ரீ.சி.சு.வ.கிருஷ்ணபிள்ளையவர்கள், வியாபாரம், தூத்துக்குடி
8. மகா.ள.ள.ஸ்ரீ.அ.மு.ம.அருணாசலம் பிள்ளையவர்கள், தூத்துக்குடி
9. மகா.ள.ள.ஸ்ரீ.அண்ணாசாமி ஐயரவர்கள், பிளிடர், தூத்துக்குடி.

10. மகா.ள.ள.ஶ்ரீ.சி.த.ஆ.ஆறுமுகம் பிள்ளையவர்கள், வியாபாரம், தூத்துக்குடி.
11. மகா.ள.ள.ஶ்ரீ.அ.சு.வே.வேலாயுதம் பிள்ளையவர்கள், தூத்துக்குடி
12. மகா.ள.ள.ஶ்ரீ.வ.அ.ஆ.ஆதிநாராயணஞ்செட்டியாரவர்கள், தூத்துக்குடி
13. மகா.ள.ள.ஶ்ரீ.வ.அ.வெ.சு.வெங்கிடாசலஞ்செட்டியாரவர்கள், தூத்துக்குடி
14. மகா.ள.ள.ஶ்ரீ.ந.சு.தெய்வநாயகம் பிள்ளையவர்கள், வியாபாரம், தூத்துக்குடி
15. மகா.ள.ள.ஶ்ரீ.ஏ.சி.வ.திருச்சிற்றம்பலம் செட்டியாரவர்கள், தூத்துக்குடி
16. மகா.ள.ள.ஶ்ரீ.ஏ.வி.ஆர்.ஏ.அடைக்கப்பச் செட்டியார் அவர்கள், கொழும்பு
17. மகா.ள.ள.ஶ்ரீ.ஏ.எம்.சைய்யத் இப்ராகீம் அவர்கள், கொழும்பு
18. மகா.ள.ள.ஶ்ரீ.ஏ.சோலைமலைத் தேவரவர்கள், வைத்தீஸ்வரன்கோவில்
19. மகா.ள.ள.ஶ்ரீ.நாராயணபிள்ளையவர்கள், கைவிழாஞ்சேரி, சீர்காழி
20. மகா.ள.ள.ஶ்ரீ.கே.சிதம்பரநாத முதலியாரவர்கள், சீர்காழி
21. மகா.ள.ள.ஶ்ரீ.எம்.டி.கே.முத்துசாமி செட்டியாரவர்கள், சீர்காழி
22. மகா.ள.ள.ஶ்ரீ.டி.எஸ். குப்புசாமி பிள்ளையவர்கள், தாடாளன் கோவில், சீரகாழி
23. மகா.ள.ள.ஶ்ரீ.டி.அனுமநத்செட்டியாரவர்கள், சோமவார்பேட்டை, குடகு.
24. மகா.ள.ள.ஶ்ரீ.எஸ்.இராமசாமி பிள்ளையவர்கள், கன்னப்பாடி (ரூவன்வாலா)
25. மகா.ள.ள.ஶ்ரீ.ஏ.அசனுசைன் இராவுத்தரவர்கள், திண்டுக்கல்
26. மகா.ள.ள.ஶ்ரீ.சீனிஅசனுசைன் இராவுத்தரவர்கள், இராமநாதபுரம்
27. மகா.ள.ள.ஶ்ரீ.ஏ.சோமசுந்தரம் அவர்கள், எம்.ஏ, கூடலூர்
28. மகா.ள.ள.ஶ்ரீ.டபிள்யு. ஶ்ரீநிவாசஅய்யங்காரவர்கள், சென்னபட்டணம்
29. மகா.ள.ள.ஶ்ரீ.அண்ணான்திருமலை அய்யரவர்கள், சேலம்.
30. மகா.ள.ள.ஶ்ரீ.பிட்டாஇராமசாமி அய்யரவர்கள், சேலம்
31. மகா.ள.ள.ஶ்ரீ.ஏ.அருணாசலம்செட்டியாரவர்கள், சேலம்

### செக்ரட்டரிகள்

எஸ்.டீ.கிருஷ்ண அய்யங்காரவர்கள், பி.ஏ.,பி.எல்.,
கௌரவ காரியதரிசி, தூத்துக்குடி

வ.உ.சிதம்பரம்பிள்ளையவர்கள்,
துணைக்காரியதரிசி, தூத்துக்குடி

## ஆடிட்டர்கள்

மகா.ள.ள.ஸ்ரீ.பி.கே.இராமய்யரவர்கள், பி.ஏ;பி.எல்.,
கௌரவ ஆடிட்டர், திருநெல்வேலி பாலம்.

4. கம்பெனியின் ரிஜிஸ்டரான ஆபீஸ் தற்காலம் தூத்துக்குடி பீச்சுரோடு 4–ம் நம்பர் கட்டிடத்தில் அமைக்கப் பெற்றுள்ளது.

*தூத்துக்குடியில் சுதேசி நாவாய்ச் சங்கம் கண்டது குறித்து வ.உ.சி. தனது சுயசரிதையில்,*

## பக்கீர் முகம்மது சேட்

***"பாக்கிய மிகுந்த பக்கிரி முகம்மதை***
***வாக்கின் வலியால் வசப்படச் செய்தி***
***யான் வணிகர் பலரையும் வருந்தி அவனிலம்***
***நன்மலர் கண்டேன்"***

*என்று இது குறித்து எழுதியுள்ளார்.*

## காலியோ லாவோ கப்பல்கள் 1907

*1907 ஜூனில் காலியோ, லாவோ கப்பல்களுடன் வ.உ.சி தூத்துக்குடி வந்தார்.*

*வணிகக் கொடிபிடித்து வஞ்சக வலை விரித்து வளமார்ந்த திருநாட்டை வளைத்துப் பிரித்தாளும் சூழ்ச்சி நடத்திய பிரிட்டானியர்களுக்கும் சுதேசிகளுக்கும் கடும்போட்டி, இறுதியில் தேச துரோக வழக்கு; 1908 மார்ச் 12 இல் வ.உ.சி சிறைபட்டார், சுதேசிக் கப்பல் கம்பெனி வீழ்ந்தது.*

## சுதேசிக் கப்பல் தருமநிதி

*1908 மார்ச் முதல் 1909 முடிய கம்பெனி 4,59,989 ரூபாய் 5 அணா 10 பைசா நஷ்டமடைந்திருந்தது. வ.உ.சியின் பெருமுயற்சியால் துவங்கப்பட்ட சுதேசிக்கப்பல் கம்பெனியினைக் காப்பாற்றிட மகாகவி பாரதியார் பணிபுரியும் 'இந்தியா' இதழில் சுதேசிக் கப்பல் தருமநிதியை முதலில் தானே ரூபாய் ஐந்து அளித்துத் துவக்கி வைத்தார்.*

## வசூல் விவரம் 13.02.1909 இந்தியா - புதுச்சேரி

| புதுச்சேரி | ரூ. | அ. | பை |
|---|---|---|---|
| ஸி. சுப்பிரமணிய பாரதி | 5 | 0 | 0 |
| வந்தே – சுப்பிரமணிய அய்யர் | 1 | 0 | 0 |
| சண்முகநாடார் | 0 | 8 | 0 |
| குருசாமிநாயுடு | 1 | 0 | 0 |
| ஸா. குப்புசாமிஅய்யர் | 10 | 0 | 0 |
| ஸா. சாம்பமூர்த்திஅய்யர் | 5 | 0 | 0 |
| சுந்தரமய்யர் | 0 | 2 | 0 |
| ராகவசெட்டி | 0 | 1 | 0 |
| கோவிந்தசாமிராஜுலு | 0 | 1 | 0 |
| துரைசாமிசெட்டியார் | 0 | 1 | 0 |
| க. அ. முருகையசெட்டியார் | 0 | 1 | 0 |
| சிவசிதம்பரம் செட்டியார் | 0 | 1 | 0 |
| கந்தசாமி செட்டியார் | 0 | 1 | 0 |
| யாக்கோப் சேட் | 0 | 2 | 0 |
| கோவிந்த உடையார் | 0 | 1 | 0 |
| பா. இராமகிருஷ்ணநாயுடு | 0 | 1 | 0 |
| கோபாலகிருஷ்ணசாமிசெட்டியார் | 0 | 1 | 0 |
| லெ. ர. கோவிந்தசாமிசெட்டியார் | 0 | 1 | 0 |
| பி. சாம்பசிவநாயக்கர் | 0 | 4 | 0 |
| ஓர் சுதேசி | 0 | 4 | 0 |
| “இந்தியா” ஆபீஸ் சிப்பந்திகள் | 5 | 14 | 0 |
| பொ. கிருஷ்ணசாமி செட்டியார் | 0 | 4 | 0 |
| சின்னத்தம்பி செட்டியார் | 0 | 4 | 0 |
| ராமய்யர் (மேலையூர் ) | 10 | 0 | 0 |
| தேசபக்தர்கள் (2பேர்) | 2 | 0 | 0 |
| துபாஷ் | 4 | 0 | 0 |
| டி. குப்புசாமி அய்யர் | 1 | 0 | 0 |
| முருகேச பிள்ளை | 2 | 0 | 0 |
| பழனி. சின்னையநாயுடு | 10 | 0 | 0 |
| ராஜமய்யர் | 1 | 0 | 0 |
| ராமசந்திரய்யர் | 1 | 0 | 0 |
| சில்லரை வசூல் | 2 | 11 | 2 |
| தம்புசாமி நாயுடு | 0 | 2 | 0 |

| | | | |
|---|---|---|---|
| வெ. கு. முருகைய செட்டியார் | 0 | 1 | 0 |
| பார்த்தசாரதி பிள்ளை | 0 | 4 | 0 |
| ஆக மொத்தம் | 64 | 6 | 2 |

## 20.02.1909 இந்தியா இதழில்

| | | | |
|---|---|---|---|
| ஸ. குப்புசாமி அய்யர் கிடங்கு சிப்பந்திகள் | 13 | 0 | 0 |
| வையாபுரி. கந்தசாமிசெட்டியார் | 10 | 0 | 0 |
| தேசபக்தர்கள் | 7 | 8 | 0 |
| நா. ம. சுந்தரராமய்யர் அன்டு சன்ஸ் | 5 | 0 | 0 |
| ரா. கிருஷ்ணய்யர் | 1 | 0 | 0 |
| கே. ராமசாமிஅய்யர் | 0 | 8 | 0 |
| ரெங்கநாதன் | 0 | 8 | 0 |
| என்.ஆர். குப்புசாமி | 0 | 8 | 0 |
| ந. கிருஷ்ணமாச்சாரியார் | 0 | 4 | 0 |
| ஆகமொத்தம் (20-2-1909) | 102 | 10 | 2 |

## 27.02.1909 இந்தியா இதழில் வந்தது

| | | | |
|---|---|---|---|
| முன் வசூல் | 102 | 10 | 2 |
| கலவைசங்கரசெட்டியார் | 4 | 0 | 0 |
| சைகோன்ஷாப் எல். அப்பாயிநாயுடு | 1 | 0 | 0 |
| சோமசுந்தரம்பிள்ளை | 0 | 4 | 0 |
| திருச்சி என். சுப்பராய நாயுடு | 2 | 0 | 0 |
| பிரென்சு மாணாக்கர்கள் | 5 | 12 | 0 |
| இ. வி. கிருஷ்ணசாமி அய்யர் | 2 | 0 | 0 |
| மேலப்பாலையூர்கிருஷ்ணசாமி அய்யர் | 1 | 0 | 0 |
| ஷை எஸ். ராமய்யர் | 1 | 0 | 0 |
| ஷை சுப்பிரமணியய்யர் | 0 | 8 | 0 |
| கே. சிங்காரவேலுப்பிள்ளை | 0 | 8 | 0 |
| ராமசந்திரய்யர் | 0 | 4 | 0 |
| தியாகராஜபிள்ளை | 2 | 0 | 0 |
| எஸ். பஞ்சாபகேசய்யர் | 0 | 4 | 0 |

| | | | |
|---|---|---|---|
| வேதாந்தராமானுஜாச்சாரியார் | 0 | 8 | 0 |
| எஸ். கிருஷ்ணசாமிஅய்யர் | 0 | 8 | 0 |
| ஸ்ரீனிவாசவரதாச்சாரியார் | 0 | 8 | 0 |
| போ. சேஷம்செட்டியார் | 0 | 8 | 0 |
| பிரம்பூர் திருவேங்கிடத்தய்யங்கார் | 0 | 4 | 0 |
| கோபாலசாமிசெட்டியார் | 0 | 4 | 0 |
| நாலூர்துரைசாமி | 0 | 2 | 0 |
| இஞ்சிக் கொல்லை ரெகுநாத அய்யர் | 0 | 2 | 0 |
| கே. வி. தைலாலிட்சன் | 0 | 8 | 0 |
| டி. சாமிநதய்யர் | 2 | 0 | 0 |
| உமர் ஹத்தா ராவுத்தர் | 3 | 0 | 0 |
| டி. ஜே. ராமச்சந்திரய்யர் | 1 | 0 | 0 |
| ஓர்அபிமானி | 1 | 0 | 0 |
| நூர்முஹம்மது யூசுப் | 0 | 8 | 0 |
| சில்லரை வசூல் | 0 | 2 | 0 |
| ஓர் சுதேசி | 1 | 0 | 0 |
| ஆகமொத்தம் | 135 | 0 | 11 |

## 13.03.1909 இந்தியா இதழில்

| | | | |
|---|---|---|---|
| சுப்ரமணிய சாஸ்திரிகள் | 3 | 0 | 0 |
| லெ.கா. அண்ணாமலை செட்டியார் | 1 | 0 | 0 |
| கிருஷ்ணசாமிராவ் | 1 | 0 | 0 |
| வேணுகோபால்நாயுடு | 1 | 0 | 0 |
| அரசஞ் சண்முகனார் | 0 | 8 | 0 |
| ஓர் சந்நியாசி | 0 | 8 | 0 |
| மாணிக்கம்பிள்ளை | 0 | 8 | 0 |
| நாகப்பசெட்டியார் | 0 | 8 | 0 |
| ஆர். வி. கோவிந்தசாமி நாயுடு | 0 | 4 | 0 |
| சத்யவாகீஸ்வரய்யர் | 2 | 0 | 0 |
| திருவேங்கிடம்பிள்ளை | 0 | 8 | 0 |
| சபாபதிசெட்டியார் | 0 | 4 | 0 |
| ராகவபிள்ளை | 0 | 2 | 0 |
| தேசபக்தன் | 0 | 2 | 0 |

| | | | |
|---|---|---|---|
| சுந்தரமுதலியார் | 0 | 4 | 0 |
| கோபால தேசிகாசாரியார் | 0 | 2 | 0 |
| தேசபக்தர்கள் | 1 | 4 | 0 |
| அ. வெங்கடேஸ்வரய்யர் | 0 | 8 | 0 |
| மகாமகம் வசூல் | 14 | 8 | 0 |
| ஆகமொத்தம் | 162 | 14 | 11 |

## 20.3.1909 இந்தியா இதழில்

| | | | |
|---|---|---|---|
| கதிரேசஞ்செட்டியார் | 5 | 0 | 0 |
| பீ. முகம்மது பாவாசா மரைக்காயர் | 5 | 0 | 0 |
| மு.பெ.சி. லட்சுமணன் செட்டியார் | 1 | 0 | 0 |
| அப்பாவு பிள்ளை | 0 | 4 | 0 |
| துளசிலால் | 0 | 0 | 4 |
| சொ. அண்ணாமலை செட்டியார் | 0 | 4 | 0 |
| செல்லப்ப செட்டியார் | 0 | 4 | 0 |
| பிச்சுவய்யர் | 0 | 4 | 0 |
| ராமஞ் செட்டியார் | 0 | 2 | 0 |
| லட்சுமி நாராயணய்யர் | 0 | 2 | 0 |
| பஞ்சுவய்யர் | 0 | 2 | 0 |
| எஸ். நரசிங்க முதலியார் | 0 | 8 | 0 |
| தேசபக்தர்கள் | 2 | 0 | 0 |
| அ. நரசிம்மய்யங்கார் | 0 | 4 | 0 |
| பெரிய சேஷராமய்யர் | 0 | 4 | 0 |
| பி. வெங்கிட்டராமய்யர் | 0 | 4 | 0 |
| வெங்கிட்டராம செட்டியார் | 0 | 4 | 0 |
| யக்ஞ. வெங்கட்டராம தீக்ஷிதர் | 0 | 2 | 0 |
| பாலசுப்பிரமணியக் குருக்கள் | 0 | 2 | 0 |
| வி. சாரநாதய்யர் | 0 | 2 | 0 |
| பெரிய விஸ்வநாதய்யர் | 0 | 2 | 0 |
| இஞ்சிக் கொல்லை சில்லரை வசூல் | 0 | 10 | 3 |
| சட்டநாத குருக்கள் சிதம்பரமூர் | 0 | 4 | 0 |
| கிருஷ்ணய்யங்கார் திருச்சிறை | 0 | 4 | 0 |
| சாரநாதய்யங்கார். திருச்சிறை | 0 | 2 | 0 |
| எஸ். கிருஷ்ணசாமி அய்யங்கார் | 0 | 4 | 0 |

| | | | |
|---|---|---|---|
| அய்யாத்துரை உடையார் | 1 | 0 | 0 |
| வேலுப் படையாச்சி | 0 | 4 | 0 |
| சாமிநாதப் படையாச்சி | 0 | 8 | 0 |
| கிருஷ்ண படையாச்சி | 0 | 8 | 0 |
| பெத்த பெருமாள் | 0 | 8 | 0 |
| பொந்தய அம்பலகாரன் | 0 | 4 | 0 |
| ஆத்தூர் பெரிய தம்பி உடையார் | 1 | 4 | 0 |
| பெ. சாமிநாத உடையார் | 1 | 0 | 0 |
| கொ . வேம்பு உடையார் | 0 | 8 | 0 |
| அ . வேம்பு உடையார் | 0 | 4 | 0 |
| பெ. பொன்னுசாமி உடையார் | 0 | 4 | 0 |
| மகாலிங்கம் | 0 | 0 | 8 |
| அ. ராமசாமி அய்யர் | 1 | 0 | 0 |
| ராமசாமி அய்யர் | 0 | 4 | 0 |
| ரெங்கசாமி நயினார் | 1 | 0 | 0 |
| ஐ. இப்ராஹிம் ராவுத்தர் | 3 | 0 | 0 |
| சாமிநாத செட்டியார் | 1 | 0 | 0 |
| ப. சையது ராவுத்தர் | 0 | 8 | 0 |
| இப்ராஹிம் ராவுத்தர் | 0 | 8 | 0 |
| கா. அகமத் சாகிபு | 0 | 8 | 0 |
| வீராசாமி படையாச்சி | 0 | 8 | 0 |
| சாமிநாத படையாச்சி | 0 | 8 | 0 |
| அய்யாத்துரைப் பிள்ளை | 0 | 4 | 0 |
| காதர் பாட்சா சாகிபு | 0 | 4 | 0 |
| இ. முகம்மது சுலைமான் | 0 | 2 | 0 |
| எட்டயபுரம் வசூல் | 9 | 0 | 0 |
| ஆக மொத்தம் | 206 | 3 | 2 |

## 17.4.1909 இந்தியா இதழில்

| | | | |
|---|---|---|---|
| முன் வசூல் | 206 | 3 | 2 |
| பி.கே.ஈஸியசா | 5 | 0 | 0 |
| ஆபத்துகாத்த நாராயணபிள்ளை | 3 | 0 | 0 |
| பி.டி.டேவிட் | 1 | 0 | 0 |
| உ.ச. சடைய பிள்ளை | 0 | 4 | 0 |

| | | | |
|---|---|---|---|
| உ.ச. ராமையர் | 0 | 2 | 0 |
| பி.ஜி. வெங்கிடசுப்பய்யர் | 0 | 2 | 3 |
| சில்லரை வசூல் | 0 | 2 | 3 |
| ஆக மொத்தம் | 215 | 13 | 8 |

## தூத்துக்குடி சுதேசிக்கப்பல் தரும் நிதி

சென்ற ஏப்ரல் மாதம் 17ந்தேதி எமது பத்திரிகையில் பிரசுரித்திருந்த மேல்கண்ட கம்பெனி நிதியின் வசூலித்த தொகையில் செலவு விவரம்:

| | | | |
|---|---|---|---|
| ஷேர்களுக்காக கம்பெனியாரிடம் கொடுத்தது | 180 | 3 | 6 |
| வசூலித்தவர்களின் சிப்பந்தி கமிஷன் உண்டிப்பெட்டி செலவு | 22 | 2 | 2 |
| வசூலிக்காது நின்றுவிட்டது | 13 | 8 | 0 |
| ஆகமொத்தம் | 215 | 13 | 8 |

## பாரதியின் உள்ளக் குமுறல்

*'சிதம்பரம் மானம் பெரிது' ஒரு சில ஓட்டைக் காசுகளுக்காக எதிரியிடமே விற்றுவிட்டார்கள் பாவிகள்! அதை விட அதைச் சுக்கல்சுக்கலாக நொறுக்கி வங்காள விரிகுடாக் கடலில் மிதக்க விட்டாலாவது என மனம் ஆறுமே! இந்தச் சிலகாசுகள் போய் விட்டாலா தமிழ்நாடு அழிந்துவிடும்? பேடிகள்' என்று மகாகவி பாரதி உள்ளங் குமுறி சீற்றத்துடன் எழுதினார்.* எவ்வளவோ கடுஞ்சொற்கள் சொன்னார்.*

★ *வ.உ.சி. யின் விஓசி கண்ட பாரதி, பதிப்பாசிரியர் செ.திவான், சுஹைனா பதிப்பகம், பாளையங்கோட்டை, 2000, பக்கம் 21.*

## இழப்பென்றாலும் பணம் இந்தியாவிலேயே

*கப்பல் கம்பெனி முறிந்து போனது. சுதேசிக்கப்பல் கம்பெனிக்கு 15 இலட்சம் ரூபாய் நஷ்டம் ஏற்பட்டது. ஆனால் வெள்ளையர்களுக்கு 95 இலட்சம் நஷ்டமேற்பட்டது. எனவே சுதேசிக் கப்பல் கம்பெனி முறிந்து போனாலும் அந்தப் பணம்*

நமது தேசத்திலேயே இருக்கிறது. இந்தியாவுக்கு லாபமே தவிர நஷ்டமில்லையென்று 23.4.1919 சுதேசமித்திரன் பின்னாளில் எழுதியது.

*என்.சம்பத், பெ.சு.மணி, வ.உ.சிதம்பரம் பிள்ளை, புதுதில்லி, 1995, பக்கம் 107.*

## கப்பலோட்டிய தமிழன்

வீர வ.உ.சி.க்கு கப்பலோட்டிய தமிழன் என்று எப்போது பெயர் வந்தது தெரியுமா?

## கா.சி. வேங்கடரமணி

எழுத்திடைச் செழித்த செம்மல் கா.சி.வேங்கடரமணி ஆசிரியராக இருந்து நடத்திய இதழ் பாரத மணி.

## பாரதமணி - ஆ.சுப்பிரமணிய பாரதி

பாரதமணி இதழில் வரகவி ஆ.சுப்பிரமணிய பாரதி 7.1.1943 இல் எழுதிய கட்டுரையில் வ.உ.சி.யை கப்பலோட்டிய தமிழன் என்று குறிப்பிட்டார்.

## ம.பொ.சி. - கப்பலோட்டிய தமிழன்

தொடர்ந்து தமிழரசுக் கழகத்தலைவர் மா.பொ.சிவஞானம் கப்பலோட்டிய தமிழன் எனும் நூலை எழுதினார்.

சுதேசிக் கப்பல் கம்பெனி மறைந்தாலும், 'கப்பலோட்டிய தமிழன்' என்ற பெயர் வரலாற்றில் நிலைத்து நிற்கிறது, நிற்கும், நிற்கவேண்டும்.

# வ.உ.சியின் நூல் வெளிவர வழங்கியவர்கள்

*12.3.1908* இல் வெள்ளை அரசால் கைது செய்யப்பட்ட வ.உ.சிக்கு, *7.7.1908* இல் வெள்ளையர் அரசு இரட்டை ஆயுள் தண்டனை வழங்கியது. பாளையங்கோட்டை சிறையிலிருந்து ஓரிரு நாளில் வ.உ.சி. கோயம்புத்தூர் சிறைக்கு *9.7.1908* இல் கொண்டு செல்லப்பட்டார். கோவை சிறையில் வ.உ.சி. யின் கைதி எண் *1541* (Tirunelveli Riots Conspiracy and Ashe Murder Part I, Page 97)

## பரலி சு.நெல்லையப்பர்

வ.உ.சி.க்கும், பாரதிக்கும் தோழராய் தொண்டராய், உடன்பிறந்த சகோதரராய் விளங்கியவர் பரலி சு.நெல்லையப்பர் (*18-9-1989 - 28-3-1971*). பத்தொன்பது வயதிலேயே பாளையங்கோட்டைச் சிறையில் பறங்கியரை எதிர்த்து சிறை சென்று விடுதலையானார். பாரதியாரின் தோழரானார். இந்நிலையில் கோவைச் சிறையில் செக்கிழுக்கும் கொடுமையால் வாடிய வ.உ.சி.யின் அழைப்பை ஏற்று கோவை சென்றார். கோவையில் தலைமறைவாக இருந்துகொண்டு வ.உ.சி.க்கு வேண்டிய உதவிகளைச் செய்தார்.

> *எதிரொலி விசுவநாதன், பரலி சு.நெல்லையப்பர் கவிதைகள், சென்னை 2014, பக்கம் 8*

## நெல்லைத் தென்றல்

*1966* இல் பரலி சு.நெல்லயப்பரின் ‘நெல்லைத் தென்றல்’ கவிதைத் தொகுப்பு நாமக்கல் கவிஞர் இராமலிங்கம் பிள்ளை முன்னுரையோடு, திருநெல்வேலி க.சண்முகம் பிள்ளை பி.ஏ.பி.எல், அணிந்துரையோடு வெளிவந்தது. அதில் பக்கம் Vல் வந்த ஆசிரியர் சுருக்க வரலாற்றில் *1908* ஆம் ஆண்டில் வ.உ.சி கோவை சிறையில் இருந்தபோது இளைஞரான நெல்லையப்பர் கோவையில் தங்கி சிதம்பரனாருக்கு அந்தரங்கமாகப் பல உதவிகள் புரிந்துவந்தார் என்ற குறிப்பு காணப்படுகிறது.

## சிதம்பரனார் பஞ்சகம்

பரலி சு.நெல்லையப்பர் பாடிய சிதம்பரனார் பஞ்சகம் இதோ!

இதம்பெற நாட்டா ரெல்லாம்
எண்ணரும் தியாகம் செய்தாய்
விதம்பெறும் இன்னல்நீங்கி,
விடுதலை யெய்தி நாட்டார்
பதம்பெறப் பெரிதும் நாடிப்
பல்விதத் துழைத்தல் செய்தாய்
சிதம்பரப் பெரியோய் உன்றன்
சீரினைப் போற்று கின்றேம்!

நாட்டினில் வணிகம் ஓங்கி
நல்வாழ்வு பெருகு மாறே
ஓட்டினாய் நாவாய் அந்நாள்
உறுதியும் திறனும் கொண்டே
போட்டியில் எதிர்த்து நின்றாய்
புன்மையோர் சூழ்ச்சி யாலே
வாட்டியே சிறையில் இட்டும்
மனம் தளராது நின்றாய்.

தமிழ்மொழி ஓங்கி யென்றும்
தரணியில் சிறக்கு மாறு
தமிழ்நூல்கள் இயற்றித் தந்தாய்
தமிழ்க்கவி இயற்றித் தந்தாய்;
தமிழர்கள் புதுவாழ் வெய்தித்
தரணியில் ஓங்கு மாறு
தமிழர்கள் தலைவா நாளும்
தளர்விலா துழைத்தல் செய்தாய்.

ஊக்கமும் வலியும் குன்றி
ஒளியிழந் துலகில் நீண்ட
தூக்கத்தில் வீழ்ந்த நாட்டைத்
துயிலெழச் செய்தாய் ஐய,
பாக்கியம் பெருகி நாட்டார்
பாரினில் ஓங்கு மாறு
தூக்கிய வினைகள் செய்தாய்
துணிவுமிக் குடைய கோவே.

நற்செயல் பெரிதும் செய்தாய்,
நாட்டினை அகத்திற் கொண்டுன்
நற்பெயர் நிலவி நிற்கும்
ஞாலம்உள் ளளவும் வாழி

## வ.உ.சிதம்பரம் பிள்ளை சரித்திரம்

சென்னை சிந்தாதிரிப் பேட்டையிலிருந்து 19.8.1943 இல் பரலி சு.நெல்லையப்பர் எழுதிய நூல் வ.உ.சிதம்பரம் பிள்ளை சரித்திரம் இந்த நூலுக்கு அவர் எழுதிய முன்னுரை அப்படியே இதோ;

## முன்னுரை

தென்னாட்டுத் திலகரென்று அந்நாளில் பேர்பெற்று விளங்கிய வ.உ.சிதம்பரம் பிள்ளையவர்கள் சரித்திரத்தை எழுதி வெளியிடவேண்டுமென்ற விருப்பம், சில ஆண்டுகளுக்கு முன் அவர்கள் காலஞ்சென்றவுடனே எனக்குத் தோன்றியது. பல நண்பர்களும் என்னைத் தூண்டினார்கள். பிள்ளையவர்கள் குடும்பத்தாரும் விரும்பினார்கள்.

பிள்ளையவர்கள் இறப்பதற்கு மூன்று மாதங்களுக்கு முன்னே தான், இளமையில் பிள்ளையவர்கள் குடும்பத்தில் ஒருவனாயிருந்தவனும், நான் பிள்ளையவர்கள் பெருநட்பைப் பெறுவதற்குக் காரணமாயிருந்தவனும், எனது வாழ்நாளில் சிறந்த நாட்களையெல்லாம் செலவிடுவதற்குக் காரணமாயிருந்த லோகோபகாரி பத்திரிகையை நடத்துவதில் எனக்குப் பேராதரவாயிருந்து வந்தவனுமான என் உடன் பிறந்தான் பரலி சு. குழந்தைவேலனை இழக்க நேர்ந்தது. அந்தக் காரணத்தால் எனது வாழ்க்கையில் பெருந்துயரம் விளைந்ததுடன், எனது பத்திரிகைத் தொழிலிலும் பல தொல்லைகள் ஏற்பட்டு, இறுதியில் மிகவருந்தத்தக்க முறையில் நான் லோகோபகாரியுடன் கொண்டிருந்த நெடுந்தொடர்பை விட்டு நீங்கவும் நேர்ந்தது. இந்தச் சரித்திரத்தை, அந்த ஆண்டு 'சிதம்பரனார் திருநாளைக்குள் வெளியிட வேண்டுமென்ற கருத்துடன் 1940ஆம் ஆண்டு நவம்பர் மாதத்திலேயே சுருக்கமாக எழுதி முடித்தேன். ஆயினும், பல காரணங்களால் இது இப்பொழுதுதான் வெளியாகின்றது.

**பிள்ளையவர்கள் கோயம்புத்தூர் சிறைக்கோட்டத்தில் இருந்தபொழுது, எனது விருப்பத்திற்கு இணங்கி, தமது சுய சரித்திரத்தை சுமார் மூவாயிரம் அடிகள் கொண்ட அகவற்பாவாக எழுதி அனுப்பினார்கள். அது செய்யுளாயிருப்பினும், எளிய நடையில், எல்லோருக்கும். பொருள் விளங்குவதாய், சுவையுள்ளதாய் அமைந்திருக்கிறது. தருணம் நேரும்பொழுது அதனையும் வெளியிடக் கருதியுள்ளேன்.**

*அக்காலத்தில் 'வந்தே மாதரம் பிள்ளை யென்று பேர் பெற்ற என் தமையனார் பரலி சு. ஷண்முகம்சுந்தரம் பிள்ளையவர்களும், காலஞ்சென்ற என்தம்பி பரலி சு. குழந்தைவேலனும், அடியேனும் இளமையிலேயே பிள்ளையவர்கள் குடும்பத்துடன் நெருங்கிய தொடர்புடையவர்களாயிருந்ததுடன் அவர்கள் நடத்திய சுதேசிக் கப்பல் கம்பெனியிலும் பலவகைத் தொண்டுகள் புரியும் பாக்கியம் பெற்றிருந்தோம். 1908–ஆம் ஆண்டில் பிள்ளையவர்கள் திருநெல்வேலி – பாளையங்கோட்டைச் சிறைக்கோட்டத்தில் இருந்த பொழுது, அவர்களுடன் சிலகாலம் அங்கு வதியும் பாக்கியத்தைப் பெற்றிருந்ததுடன், அவர்கள் பின்னர் கோயம்புத்தூர் சிறைக்குள்ளேயிருந்த பொழுது, நான் அதற்கு வெளியே சுமார் ஓர் ஆண்டு தங்கியிருந்து அவர்களுக்கு வேண்டிய திருப்பணிபுரியும் பாக்கியமும் பெற்றிருந்தேன், நான் இளமையிலேயே தேசத்தொண்டில் ஈடுபடுவதற்கும், தமிழ் மொழியில் ஆர்வம் கொண்டு அதனைப் பயில்வதற்கும், ஒரு பத்திராசிரியராவதற்கும், காரணமாயிருந்த பெரியாரின் அரிய சரித்திரத்தை நான் எழுத நேர்ந்தமை எனக்குக் கிடைத்த பெரும் பாக்கியங்களில் ஒன்றாகவே கருதுகின்றேன்.*

*பரலி – சு நெல்லையப்பன்*

*சென்னை, சிந்தாதிரிப்பேட்டை*
*19.8.1943*

## *திரு.வி.க. அணிந்துரையுடன்*

*வ. உ. சிதம்பரம் பிள்ளை ஒரு பெருந்தேசபக்தர்.அவர் தம் வரலாறு அறிவுறுத்துஞ் செல்வம் எது? உரிமை – உரிமைச் செல்வம்.*

உரிமைச் செல்வம் எளிதில் கிட்டுமோ? கிட்டாது. அதன் தோற்றுவாய் எது? துன்பம் துன்பம் ! சிதம்பரம்பிள்ளையின் வாழ்க்கை துன்பத்தில் தோய்ந்தது. அவர் ஏற்ற சிறைத்துன்பம் முதலியன வருணனைக்கு எட்டாதன. துன்பம் அவரை உரிமைச் செல்வராக்கிற்று, மனிதரில் மனிதராக்கிற்று. இத்தகைய ஒருவர் வரலாறு உரிமையில்லா நாட்டிற்கு வேண்டற்பாலதே.

இந்நூலாசிரியர் பரலி சு. நெல்லையப்பர். இவர் சிதம்பரம் பிள்ளையினிடம் மிகநெருங்கி உறவு கொண்டவருள் ஒருவர் என்று28.1.1944இல் திரு.வி.க. அணிந்துரையோடு வெளிவந்த அந்த நூலை அடியேனும் மறுபதிப்பு செய்துள்ளேன்.

## கோவைச்சிறையிலே

நெல்லையப்பர் புதுவையில் இருந்தபோதும் கோவைச் சிறையில் இருந்த சிதம்பரனாரோடு அவ்வப்போது தொடர்பு கொண்டிருந்தார்.

## அப்பன்

இதனை நெல்லையப்பர் 1910 மார்ச் ‘கர்மயோகி’யில் எழுதிய ஸ்ரீமான் தூத்துக்குடி சிதம்பரம்பிள்ளை சந்திப்பு’ என்ற கட்டுரை உறுதிப்படுத்துகிறது. கோவைச்சிறைச்சாலையில் சிதம்பரனாரை அவருடைய மனைவியும் நண்பர்களும் சந்தித்து உரையாடிய செய்தி ‘அப்பன்’ என்பவர் மூலம் அறியப்பட்டு எழுதப்பட்டுள்ளதாக அந்தக் கட்டுரை அறிவிக்கிறது. அந்த அப்பன்தான் நெல்லையப்பன் என்ற பெயர்கொண்ட நெல்லையப்பர். நெல்லையப்பர் மூலம் பெறப்பட்ட சிதம்பரனார் பற்றிய செய்திகளை பாரதி தமது ‘இந்தியா’ ஏட்டிலும் ‘கர்மயோகி’ இதழிலும் தொடர்ந்து வெளியிட்டார்.

## புதிதாகத் தோன்றிய புண்ணியத்தலம்

இந்தியா அலுவலகத்தில் சிதம்பரனார் படமும் சிதம்பரனார் பற்றி எம். கிருஷ்ணசாமி ஐயர் என்பவர் எழுதிய சரித்திர நூலும் விற்பனை செய்யப்பட்டன. பாரதி எழுதிய பாரத நாட்டின் புதிய புனிதத்தலங்கள் என்ற கட்டுரையில் சிதம்பரனார் சிறைப்பட்டிருக்கும் கோவைச் சிறைச்சாலையை பாரதி புதிதாகத் தோன்றிய புண்ணியத்தலம் என்று குறிப்பிடுகிறார்.

சிதம்பரனார் சிறையில் எழுதிய 'சுயசரிதை' நெல்லையப்பரின் வேண்டுகோளுக்கிணங்க எழுதிய நூலாகும்.

'பூவகைதனைப் பொருந்தி நின்று
தேவுலக தனிற் சிறந்த உலகின்
நினைவொடு நிற்கும் நெல்லையப்ப நீ
கனிவொடு கேட்ட என் கதைகுறிப்பு இஃதே'.

என்ற சிதம்பரனாரின் சுயசரிதையின் தோற்றுவாய் இதனைச் சொல்கிறது.

தமது நூல்கள் சம்பந்தமான செய்திகளை சிதம்பரனார் நெல்லையப்பருக்குத் தெரிவித்தார். 1909 ஆம் வருடம் ஜனவரி மாதம் சிதம்பரனாரின் மனைவி எழுதிய கடிதம் ஒன்றில் 'மனம் போல் வாழ்வு' நூலை அச்சிடுவது பற்றி கந்தசாமி கவிராயருக்கு எழுதியுள்ளோம். அவர் பதிலைப் பெற்றதும் நெல்லையப்ப பிள்ளையை மதுரைக்கு அனுப்ப வேண்டும் என்ற குறிப்பு காணப்படுகிறது.

## மாறுவேடத்தில் நெல்லையப்பர்

மகாகவி பாரதி எழுதிய சீட்டுக்கவிகளை நெல்லையப்பர் சிறையில் இருந்த சிதம்பரனாரிடம் இரகசியமாகச் சேர்த்தார். பின்னர் வழக்கறிஞர் சி.கே. சுப்பிரமணிய முதலியாரின் உதவியால் கோவையிலிருந்து பேரூர் செல்லும் வழியில் ஆசிரமம் ஒன்றை அமைத்துக்கொண்டார். சாமியார்போல் வேடம்புனைந்து அவர் செயல்பட்டார். அப்போது கலெக்டர் ஆஷ்துரையை வீரவாஞ்சி சுட்டுக் கொன்றதால் நீலகண்டரின் நெருங்கிய நண்பரான நெல்லையப்பரையும் போலீஸ் புலிகள் தேடினர். ஏறக்குறைய ஓராண்டு மாறுவேடத்தில் சிதம்பரனாருக்கு வேண்டிய உதவிகளைச் செய்தார்.

## வெண்பாச் செய்திகள்

சிறைக்குள் இருந்து செய்திகளை சிதம்பரனார் வெண்பாக்கள் வடிவில் எழுதி அனுப்புவது வழக்கம். சிதம்பரனார் அப்படி எழுதிய வெண்பாக்கள் மிகஅருமையானவை என்று நெல்லையப்பர் கூறுகிறார். சிதம்பரனாரின் சிறைவாசத்தின் போது அவருடைய குடும்ப வரவு செலவு கணக்கு

நெல்லையப்பரிடம் ஒப்படைக்கப்பட்டது. அதற்குச் சான்றாக சிதம்பரனார் எழுதிய சில வெண்பாக்கள்.

“அப்பனும் நீ ஐயனும் நீ ஆதியும் நீ யாவையும் நீ
செப்பமுடன் செப்பியதைச் செய்வாயேல் – தப்பில்
மனையாள்தன் மாதாவை மன்னிநிற்க மாயேன்
மனைஎய்தும் மாதம்வரை”

“மாதம் முதல் தோறும் வள்ளிதரும் ஐம்மூன்றும்
ஏதமிலா தங்கவட்கே ஈந்திடுவாய் – மீதமா
வந்தாலோ அம்மான்பால் வாங்கியோ மீட்டியணி
தந்தார் பால் தந்திருக்கச்செய்”

“வாராதும் அன்னாள் வழங்காதும் நின்றிடுமேல்
சீரார்அணி விற்றுத் தீர்ந்தவற்றை – ஊரார்
கடன்களை முன்னம் கழறியுள கொத்தால்
கடன்கொடு கட்டிக்கழி”

இப்படி சிறையிலிருந்து சிதம்பரனார் சிரஞ்சீவி பரலி. சு. நெல்லையப்ப பிள்ளைக்கு எழுதிய பாக்கள் என இருபதுக்கும் மேலாக எழுதியுள்ளார். பாட்டுக்கள் என்ற வடிவத்தில் பற் பல இரகசியச் செய்திகள் பரிமாறப்பட்டன.

*எதிரொலி விசுவநாதன் தம்பி, நீ வாழ்க, சென்னை 2014, பக்கங்கள் 84, 85*

## செய்தித் தூதுவர்

நெல்லையப்பரின் கோவை வாசம் பற்றி அறிஞர் வெ. சாமிநாத சர்மா இவ்வாறு எழுதுகிறார்.

“கப்பலோட்டிய தமிழன் வெஞ்சிறையில் வாடிக்கொண்டிருந்த இடம் கோயமுத்தூர் சிறை. சிறைக்கு வெளியே சிதம்பரனாருக்கு உற்ற துணைவர் நெல்லையப்பர் தான். ஆனால் அவருக்கோ தலைமறைவு வாசம். எப்படிச் சிறைச்சாலை சுவர்களைக் கடந்து உள்ளேபோய் வெளியே வருவாரோ? சிதம்பரனாரைப் பேட்டிகாண்பார். சிறு சிறு காகிதத் துண்டுகளில் அவர் குறித்துக் கொடுக்கும் செய்திகளைப் பெற்றுக்கொள்வார். அவற்றின்படி வெளியே வந்து செயலாற்றி வ. உ. சி.யின் திட்டங்களை நிறைவேற்றுவார். இப்படி ஒரு வருட காலம்

நடந்தது என்று எழுதுகிறார். இந்த ஒரு வருட காலத்தில் நெல்லையப்பர் சிதம்பரனாருக்குத் தேவையான உதவிகள் மட்டுமின்றி சிதம்பரனாருக்கும். பாரதிக்கும் செய்தித் தூதுவராகவும் செயல்பட்டார்.

## வ.உ.சி. சுப்பிரமணியம்

வ.உ.சியின் புதல்வரும் தினமணி உதவி ஆசிரியருமான வ.உ.சி. சுப்பிரமணியம், வ.உ.சி சுயசரிதை நூலை வ.உ.சி மறைந்து பத்து ஆண்டுகளுக்குப் பிறகு சென்னை முல்லைப் பதிப்பகம் மூலம் வெளியிட்டார். அந்த நூலையும் அடியேனும், இன்ன பிறரும் மறுபதிப்பு செய்துள்ளோம். செய்து வருகின்றனர்.

## தெ.ச. சொக்கலிங்கம்

வ.உ.சி.யின் சுயசரிதையின் பிற்பகுதி தினமணி ஆசிரியர் தென்காசி ச.சொக்கலிங்கம் அவர்கள், வ.உ.சி. யிடம் கேட்டுக் கொண்டதற்கிணங்க எழுதப்பட்டதாகும்.

## எனது முதல் சந்திப்பு

டி.எஸ். சொக்கலிஙகம் (2.5.1899 – 9.1.1966) எனது முதல் சந்திப்பு எனும் நூலை 25.12.1956 இல் வெளியிட்டுள்ளார். அதில் வ.உ.சி. குறித்துச் சொல்கிறார், இதோ.

லோகமான்ய பாலகங்காதர திலகரின் நெருங்கிய சகாக்களில் ஒருவராய் இருந்தார் வ. உ. சி. எனவே, அவரைத் தரிசிக்க வேண்டுமென்ற அவா எனக்கு ஏற்பட்டிருந்ததில் ஆச்சரியமில்லை. ஆனால், அந்தத் தரிசனம் எதிர்பாராத விதத்தில் என் வீட்டிலேயே கிடைத்ததுதான் ஆச்சரியம்.

காங்கிரஸ் மகாசபை சட்டசபை பகிஷ்காரத்தை நடத்தி வந்தபோதிலும் திலகர் கோஷ்டியார் அதை ஒப்புக்கொள்ளவில்லை. எனவே அச்சமயம் டில்லி ராஜாங்கசபைக்குத் தேர்தலுக்கு நின்ற ஒரு சென்னை நண்பருக்கு வோட்டுகள் சேகரிப்பதற்காக வ.உ.சி. தென்காசிக்கு வந்தார். அந்த வோட்டுகள் தபால் மூலம் அனுப்பக்கூடிய வோட்டுகள்.

## ஏஸ். சிதம்பரம் பிள்ளை

எனது சகோதரர் பெயரும் சிதம்பரம் பிள்ளை வ. உ. சி.யை ஜெயிலில் போட்டதன் காரணமாய் ஏற்பட்ட திருநெல்வேலி கலெக்டர் கொலை வழக்கில் சம்பந்தப்பட்டு ஜெயிலுக்குப் போனவர்களில் எனது சகோதரரும் ஒருவர். எனது சகோதரரும், அவரும் நண்பர்கள். எனவே, தென்காசிக்கு ரயிலில் வந்த வ. உ. சி. நேராக எங்கள் வீட்டுக்கே வந்தார். எனது சகோதரர் வரவேற்று உபசாரம் செய்தார். அச்சமயம் நான் வீட்டில் இல்லை. தென்காசியில் காங்கிரஸ் கமிட்டிக்கு நான் காரியதரிசியாய் இருந்தபடியால் சாப்பாட்டு நேரம் தவிர மற்ற நேரங்களில் நான் வீட்டில் இருப்பதில்லை. காங்கிரஸ் காரியாலயத்தில் தான் இருப்பேன். சாப்பாட்டுக்காக நான் வந்தபோது புது மனிதர் ஒருவர் கம்பீரமாய் வீற்றிருப்பதைப் பார்த்ததும் ஆச்சரியமடைந்தேன். எனது சகோதரர் அறிமுகப்படுத்தி வைத்தார். அப்புறம்தான் இவ்வளவு பெரிய தேசபக்தரை இவ்வளவு சுலபமாகத் தரிசிக்க அதிர்ஷ்டம் கிடைத்ததை நினைத்து என்மனம் பூரிப்படைந்தது.

## வெட்டு ஒன்று, துண்டு இரண்டாய்

வ. உ. சி. பேசுவது எப்பொழுதுமே வெட்டு ஒன்று, துண்டு இரண்டாய் இருக்கும். விளக்கெண்ணெய்ப் பேச்சே கிடையாது. கோபம் வந்தால் பிரமாதமாய் இருக்கும். ஆனால், தங்கமான மனம். வந்த கோபம் நொடியில் அமர்ந்துபோகும். ஒத்துழையாமை இயக்கம் நின்றபின்பு காங்கிரஸ் பொதுக்கூட்டங்களில் எவ்வளவோ பேசியிருக்கிறார். என்றாலும், கூடியவரையில் பொதுக்கூட்டங்களுக்குப் போக அவர் விரும்புவதில்லை. அதற்குக் காரணம், அவருடைய தீவிர தேசபக்தியே ஆகும். பிரசங்கம் செய்ய ஆரம்பித்து விட்டால் அப்புறம் அவருடைய ஆவேசத்தை அவரால் அடக்க முடியாது. நாட்டிற்காக அவர் பட்ட கஷ்ட நஷ்டங்களுக்கு அளவே கிடையாது ஆனால், மக்களின் ஆதரவைப் பற்றியோ சொல்ல வேண்டியதில்லை. பாரதியார் உயிருடன் இருந்தவரை எப்படி அலட்சியமாய் இருந்து, செத்த பின்பு மண்டபங்கள் கட்டினார்களோ, அதே மாதிரிதான் வ.உ.சி.யிடமும் நடந்து கொண்டார்கள். ஆனால், கடைசி வரையில் அவருடைய மனத்தின் வேகம் மட்டும் கொஞ்சம்கூடக் குறையவே இல்லை.

## சுயசரிதையைப் பூர்த்தி செய்ய வேண்டுமென்று

பல தடவைகளில் வ.உ.சி.யிடம் நெருங்கிப் பழகும் பாக்கியம் எனக்குக் கிடைத்தது. புத்திரன் பேரில் தந்தைக்கு எவ்வளவு வாஞ்சை உண்டோ, அம்மாதிரி வாஞ்சையோடு என்னிடம் நடந்து வந்தார். **அவருடைய சுயசரிதையைப் பூர்த்திசெய்ய வேண்டுமென்று** ஒருநாள் சொன்னேன். அச்சமயம், 'காந்தி' என்ற பெயரோடு நான் ஒரு பத்திரிகையை நடத்தி வந்தேன். வ. உ. சி.யும் சம்மதித்து இரண்டாம் பாகத்தை ஆரம்பித்துப் பூர்த்தி செய்தார். இரண்டாம் பாகம் ஆரம்பத்தில் அவர் எழுதியதாவது:

" உலகெலாம் புகழும்
நலனெலாம் அமைந்த
காந்திமா முனிவன்
ஏந்திய கொள்கையை
நிலனெலாம் பரப்புதற்(கு)
அவனற் பெயரால்
பத்திரிகை யொன்றை
எத்திசையும் செலுத்தும்
சொக்கலிங்கத்தூயோய்கேண்மோ !'

வ.உ.சி.யின் சுயசரிதை அவர் மறைந்து 10 ஆண்டுகளுக்குப் பின் வெளிந்தது. வெளியிட்டவர் முல்லை நிலையத்தார், தொகுத்துத் தந்தவர் வ.உ.சி. புதல்வர் சுப்பிரமணியம். அதனை வ.உ.சி. சிறையில் இருந்தபோது எழுதத் தூண்டியவர் பரலி சு.நெல்லையப்ப பிள்ளை. வ.உ.சி சிறையிலிருந்து வெளிவந்ததும் மீதியை எழுதச் சொன்னது தென்காசி ச.சொக்கலிங்கம். இவர்கள் ஏதோ ஒரு வகையாக வ.உ.சி.க்கு வழங்கியவர்கள் தானே.

## நீதிபதி பின்ஃஹே

திருநெல்வேலி மாவட்ட உதவி குற்றவியல் நீதிமன்றத்தில் நீதிபதி ஆர்தர் எப்.பின்ஹே S.C. No. IOF 1908 dated 7th July 1908, S.C. No. II of 1908 dated 7th July 1908 இவ்வழக்குகளுக்காக வ.உ.சி.க்கு ஆயுள் தண்டனையும் நாடு கடத்தலும் தனியாக ஒரு ஆயுள் தண்டனையும் நாடு கடத்தலும் விதிக்கப்பட்டு

இரண்டையும் ஏக காலத்தில் அனுபவிக்க வேண்டுமென்று 7.71908இல் தீர்ப்பளித்தார்.

## நீதிபதிகள் அர்னால்டு ஒயில்டு - மில்லர்

பின்னர் 1908 நவம்பரில் நீதிபதிகள் அர்னால்டு ஒயில்டு – மில்லர் ஆகியோர் தண்டனையை பத்து ஆண்டுகளாக குறைத்தனர்.

## பாலசுப்பிரமணிய அய்யர் - பாரிஸ்டர் சாமிநாதன்

மீண்டும் பிரிவீயூ கவுன்சிலுக்கு அப்பீல் செய்ய வ.உ.சி.யின் நண்பர்கள் முயற்சி செய்தனர். நெல்லையப்பர் சென்னை வந்தார். திருச்சி ஜில்லா நீதிபதியாக இருந்த ஏ.எஸ். பாலசுப்பிரமணிய அய்யரையும், பாரிஸ்டர் சாமிநாதனையும் கலந்து பேசினார். அவர்கள் இருவரும் அப்பீலுக்கு இடமில்லை என்று முடிவு சொன்னார்கள்.

> *திருவாரூர் சு. விசுவநாதன் 'எதிரொலி விசுவநாதன்', பாரதியாரின் தம்பி, பரலி சு. நெல்லையப்பரின் வாழ்க்கைச் சித்திரம், சென்னை 1969, பக்கம் 28.*

## ஆறு ஆண்டுகளாக

பின்னர் லண்டன் பிரிவியூ கவுன்சிலுக்கு வ.உ.சியின் நண்பர்கள் அப்பீல் செய்தனர். தண்டனை ஆறு ஆண்டுகளாக குறைந்தது.

## சிவக்கவிமணி சி.கே. சுப்பிரமணிய முதலியார்

பெரிய புராணத்திற்கு பெரிய அளவில் விளக்கவுரை தந்து புகழ்பெற்ற சிவக்கவிமணி சி.கே.சுப்பிரமணிய முதலியார், கோவையில் வழக்கறிஞர், அவர் 'பித்தன் ஒருவனின் சுயசரிதை' என்னும் நூலில் தனது வாழ்க்கை வரலாற்றை விவரித்துள்ளார். 219 பக்கங்கள் கொண்ட அந்த நூலில் பக்கம் 73, 75 இல் வ.உ.சி. குறித்த செய்திகளைச் சொல்லியுள்ளார். அதன் பதிப்பாசிரியர் க.மங்கையர்கரசி இதோ அது;

திரு. வ.உ.சிதம்பரம் பிள்ளை அவர்களின் சுதேசிய இயக்கத்திலும் சுதேசக் கப்பல் இயக்கத்திலும் நான் ஈடுபட்டிருந்தேன். அவர் சிறையிலிருந்த காலத்திலும்

பிற்காலத்திலும் என்னுடன் நெருங்கிய நட்புக்கொண்டிருந்தார். அவர் சம்பந்தமாக நடந்த ஆஷ் கொலை வழக்கைப் பற்றியும்அதைத் தொடர்ந்து நிகழ்ந்த ஒரு சம்பவத்தையும் இங்கு எழுத நினைக்கின்றேன். என் நண்பர் திரு. வ. உ. சிதம்பரம் பிள்ளையின் செய்திகளில் கலந்து கொண்டு சில வேலைகளைச் செய்தேன்.'

## ஆறுமுகம் பிள்ளை

'திருநெல்வேலியிலிருந்து இவர் (திரு. வ.உ. சிதம்பரம்பிள்ளை) 09-07-1908ல் கோயம்புத்தூர்ச் சிறைச் சாலைக்கு அழைத்துச் செல்லப்பட்டார். கோவையை அடைந்த அன்றிரவு சிவகாசிக் கொள்ளை வழக்கினால் சிறைவாழ்வு பெற்றிருந்த ஆறுமுகம் பிள்ளை இவரை வந்து கண்டார். இருவரும் சிறந்த நண்பராயினர். அவர் இவருக்குச் சிறையில் வேண்டிய உதவிகளெல்லாம் செய்து வந்தார். சிறைச்சாலையிலிருந்தவர்களும் இவரைப் பெரிதும் மதித்து இவர் செய்ய வேண்டிய பணிகளையெல்லாம் இவருக்காகச் செய்து உதவி வந்தார்கள். இவருக்கு வேண்டும் பலகாரங்களோ பத்திரிகைகளோ அவ்வப்பொழுது கிடைத்தன. இவர் சிறைச்சாலையிலும் செல்லப்பிள்ளையாகவே இருந்து வந்தார்.

## வடுகு இராமன் - சீனிவாச முதலியார்

ஒருநாள் வடுகு இராமன் என்பவன் வழக்கம்போல் இவரைக் கைகுவித்து வணங்கினான். அதனைக் கண்ட "மிஞ்சேல்" என்னும் சிறையாளன் இராமனைக் கண்டித்தான். அதனால் சிறைப்பட்டிருந்தோர் அனைவரும் ஒன்று சேர்ந்து கூடிப்பேசினர். அதன் விளைவாகச் சிறையில் ஒரு பெரிய கலகம்நடந்தது. "மிஞ்சேல்" குத்தப்பட்டான். பூட்டுக்களெல்லாம் உடைக்கப்பட்டன. வெளியிலிருந்து காவற் படையினர் விரைந்து வந்து கலகத்தை அடக்கினர். மாவட்ட நீதிமன்றத்தில் வழக்கு நடந்தது. சுப்பிரமணிய முதலியார் தமக்குத் துணையாக ஈரோடு வழக்கறிஞர் சீனிவாச முதலியாரை வைத்துக் கொண்டு குற்றவாளிகளுக்காக வழக்கை நடத்தினார்.

அவ்வழக்கில் சிதம்பரம் பிள்ளை ஒரு சாட்சியாக வரவழைக்கப்பட்டார். "சிறைத் தலைவர் சிறையைக்

கவனிப்பதே இல்லை. அவர் படம் பிடிப்பதிலும் குருவி சுடுவதிலுமே காலங் கழிக்கின்றார். அதனால் சிறையாளன் "மிஞ்சேல்" மிக மிஞ்சிவிட்டான். அவன் வைத்ததுதான் சட்டம். கல்லும் மண்ணுமாகச் சோறு போடுகிறான். வாயில் வந்தபடி கொடுமையாகப் பேசுவதும்; மொலிகளில் (மணிக்கட்டு கணுக்கால், முழங்கால், முதலியவற்றின் இணைப்புகள்) அடிப்பதும் ஆகிய தீய செயல்களைச் செய்துவந்தான். அதனால் சிறைப்பட்டார் யாவரும் இவனிடம் பகைகொண்டனர், அப்பகை முதிர்ந்து இக்கலகமாக விளைந்தது என்று இவர்சான்று கூறினார். இங்ஙனம் வ.உ.சி. அஞ்சாதுகூறிய உண்மைச்சான்று கலகம் விளைத்தவருக்குப் பேராதரவாயிற்று.

ஆஷ்கொலை வழக்கு சம்பந்தமாக சென்னையிலிருந்து இரகசியப் போலீசார் வந்து என்னை விசாரித்தார்கள். என் வீட்டையும் சோதனை போட்டார்கள்.

திரு. அரவிந்தகோஷ், லாலாலஜபதிராய், வ. உ. சிதம்பரம் பிள்ளை முதலிய தேசபக்தர்களின் கடிதங்கள் என்வசமிருந்தன. அவை அவர்கள் கண்ணுக்குப் புலனாகவில்லை. அவற்றை அவர்கள் கைப்பற்றவுமில்லை; அவர்கள் வந்துபோன பின்பு அவற்றையும் மற்றும் அனேக கடிதம் முதலிய ஆட்சேபகரமான காகிதங்களையும் தேடி எடுத்துப் பரிகரித்துவிட்டேன். அந்தச் சோதனையின்போது என் முதல் மனைவி இருந்தாள். அவள் நடந்து கொண்டது தைரியமான சாதனையாகும். போலீசார் மீண்டும் ஒருநாள் வந்து சோதனைக்காக என் வீட்டை முற்றுகையிட்டுக் கொண்டார்கள். அப்போது நான் கோர்ட்டுக்குப் போயிருந்தேன். தெருத்திண்ணையில் போலீஸ் இன்ஸ்பெக்டர் முதலாயினோர் உட்கார்ந்து கொண்டு கோர்ட்டுக்கு என்னைக் கூட்டி வர சப்–இன்ஸ்பெக்டர் ஒருவரை அனுப்பிவிட்டு என் வருகையை எதிர்பார்த்துக் காத்துக் கொண்டிருந்தார்கள். நான் கோர்ட்டில் ஒரு வழக்கு நடத்திக்கொண்டிருந்தேன். அதை முடித்துக் கொண்டு வருவதற்குக் கொஞ்சம் தாமதமாயிற்று. இவ்வாறு போலீசார் மீண்டும் சோதனைக்கு வருவார்கள் என்ற யோசனை அன்று காலைதான் ஒருவாறு தெரியவந்தது. நான் திரும்பி வந்த பின் எல்லாம்பார்த்து ஒழுங்குபடுத்திக்கொள்ளலாம்என்றுநினைத்து அதுவரையில் பார்த்த சிலகடிதங்களை மட்டும் எடுத்துப்

போட்டுவிட்டு என் மனைவியிடம் ஜாக்கிரதையாயிருக்கும்படி சொல்லிவிட்டுப் போயிருந்தேன். போலீசார் வந்தவுடன் என் மனைவி என் வீட்டின் உள்கதவைச் சாத்திக் கொண்டு நான் பார்த்து வைத்த கடிதங்களையும் போலீசார் கைப்பற்றக் கூடுமென்று தோன்றின. பிறவற்றையும் எடுத்துப் பரிகரித்துச் சுட்டெரித்து அப்புறப்படுத்திவிட்டாள், நான் வந்த பின் செய்தி அறிவித்தாள். சாதாரணமாக நம் நாட்டில் பெண்களிடம் இவ்விதமான தைரியச் செய்கை காண்பது அரிது.

*க. மங்கையர்கரசி, பதிப்பாசிரியர், பித்தன் ஒருவரின் சுயசரிதை, கோயம்புத்தூர், 2006, பக்கம் 73,75*

வ.உ.சி. சிறையில் இருந்த போது உப்பிலிபாளையத்தில் (கோவை நகரில் ஒருபகுதி) குடியிருந்து வந்த இவரின் குடும்பத்தாருக்கு முதலியார் பெருந்துணையாக இருந்து வந்தார்.

சி.கே. சுப்பிரமணிய முதலியார் புகழ்பெற்ற வழக்கறிஞர். கப்பலோட்டிய தமிழன் வ.உ.சிதம்பரனாருக்குச் சிறையில் இழைக்கப்பட்ட கொடுமைகளை அம்பலப்படுத்தி நீதிமன்ற விசாரணைக்கு கொண்டு வந்தவர் இவரே. இவர் செய்த உதவிகளைக் கருத்தில் கொண்டு சிதம்பரனார் தனது மூன்றாவது மகனுக்கு இவரது பெயரான சுப்பிரமணியம் என்றும், மகளுக்கு இவரது மனைவி மீனாட்சி பெயரையும் சூட்டினார்.'

*நெல்லைத் தமிழ்ப்புலவர்கள் ஆசிரியர் டாக்டர் இ.மு. சுப்பிரமணிய பிள்ளை, திருநெல்வேலித் தென்னிந்திய சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகம் - வெளியீடு எண். சாது - பக்கம் 64 முதல் 67 வரை. தமிழ் வளர்த்த பெருமக்கள் 100 பக்கம் 106 ஆசிரியர் என் ஸ்ரீ நிவாசன் - அல்லயன்ஸ் நூற்றாண்டு வெளியீடு எண்.15*

## கண்ணனூர் சிறை

கோவைச் சிறையிலிருந்து 1.12.1910 அன்று வ.உ.சி.யை கண்ணனூர் சிறைக்கு மாற்றினார்கள். (கண்ணனூர் சிறை வ.உ.சி. கைதி எண் 7276ஏ) 4 வருடம், 11 மாதங்கள், 12 நாட்கள் சிறையில் சித்திரவதைகள் பல அனுபவித்து (G.O.No.366, Judicial, 6.3.1912) பின்னர் 24.12.1912ல் வ.உ.சி. விடுதலையானார்.

அந்தமான் தீவில் கைதிகள் அதிக அளவில் அடைக்கப்பட்டிருந்ததால் மேலும் கைதிகளை அங்கு அனுப்ப வேண்டாமென்று அரசு ஆணையிட்டிருந்தது. (G.O.No. 410, Judicial, 3.3.1906) இவ்வாணை 1911ல் நீக்கப்பட்டது. (G.O.No.968, Judicial, 15.6.1912) ஒருவரை நாடு கடத்த வேண்டுமென்றால் குறைந்தது ஆறு ஆண்டுகளாவது இருக்க வேண்டுமென்பது விதி 1911ல் வ.உ.சி.யின் சிறை தண்டனை ஒன்றரை வருடங்களே இருந்ததால் வ.உ.சி. நாடு கடத்தப்படவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

ஆ.ரா.வெங்கடாசலபதி, வ.உ.சி. கடிதங்கள், சென்னை, 1984, ப. 147

## விடுதலைக்குப் பின்

கண்ணனூர்ச் சிறையிலிருந்து விடுதலையான வ.உ.சி சொந்த ஊர் செல்லவில்லை. குடும்பத்துடன் சென்னைக்கு வந்து குடியமர்ந்தார். வ.உ.சி. தேச பக்தர்களைப் புதுச்சேரி சென்று பார்க்க விரும்பினார். பாண்டிச்சேரி சென்றார். பாரதி, வ.வே.சு ஐயர், அரவிந்தர், ஸ்ரீநிவாஸாச்சாரியார், இன்ன பிறரைச் சந்தித்தார். பின்னர் சென்னை திரும்பினார்.

## சென்னை வாழ்க்கை

சிந்தாதிரிப்பேட்டையில் இருந்த வ.உ.சி. சில காலம் திருமயிலையிலும், பெரம்பூரில் இருந்த போது தமதுகுடும்பத்தை நடத்தும் பொருட்டு அரிசி வியாபாரமும் நெய் வியாபாரமும் கூடச் செய்தார்.

எந்தத் தொழிலைச் செய்த போதும் அவர் இனிய தமிழை மறக்கவில்லை. பலருக்குத் தமிழ்க்கல்வி பயிற்றிவந்தார்.

பெரம்பூரில் வசித்தபோது அப்போது அங்கு வாழ்ந்திருந்த திருமணம் செல்வகேசவராய முதலியாரோடு கூடித் தமிழாராய்ச்சியும் செய்து வந்தார். சென்னையில் சிதம்பரனார் வசித்தபோது அவரிடம் திருக்குறள் பயின்றவர்களில் சகஜானந்த சுவாமியும் – பரலி. சு.நெல்லையப்பரும் குறிப்பிடத்தக்கவர்கள்.

## ஜேம்ஸ் ஆலன்

*இங்கிலாந்தில் லெஸ்டர் நகரத்தில் 28.11.1864 இல் பிறந்தவர் ஜேம்ஸ் ஆலன்* (James Allen)

**''ஒழுக்கம் ஒன்றே மெய்யுணர்வுக்கும் மற்றைய சகல உயர்ந்த பதவிகளுக்கும் மார்க்கம்'** *என்பது ஜேம்ஸ் ஆலனது சித்தாந்தம். அவரது துணையார் வில்லி ஆலன் புத்தி விளக்கம் என்னும் மாதாந்திரப் பத்திரிகையின் ஆசிரியர்.*

**''வேலை செய்வதற்காக யான் உடலோடு கூடிப் பிறந்தேன்; வேலை செய்வதற்காகவே யான் உடலோடு வாழ்கிறேன், என் வேலை முடிந்தவுடன் இவ்வுடலை யான் விட்டுவிடுவேன். நீங்கள் என் வேலையைத் தடுக்கவேண்டாம்''** *என்று எப்போதும் ஜேம்ஸ் ஆலன் கூறுவார்.*

## 24.1.1912

'எனது வேலைகளை எல்லாம் செய்து முடித்துவிட்டேன். யான் இது முதல் எனது தந்தையிடம் செல்வதற்குச் சித்தமாகப் போகின்றேன்' என்று கூறித் தமது வேலைகளை விட்டு நீங்கி சந்தோஷமாக இருந்தார். *24.1.1912* இல் தனது 48வது வயது துவக்கத்தில் இவ்வுலக வாழ்க்கையைத் துறந்தார். இவர் எழுதிய நூல்கள் ஏராளம்.

## ஆக்கத்தின் ஆதாரங்கள் எட்டு

Eight Pillars of Prosperity *எனும் ஜேம்ஸ் ஆலனது நூலை 'ஆக்கத்தின் ஆதாரங்கள் எட்டு' என்று மலரன்பன் மொழிபெயர்த்துள்ளார்.*

## நாள் வழி நற்சிந்தனைகள்

*மதுரை அமெரிக்கன் கல்லூரித் தமிழ் விரிவுரையாளர் கு.பரமசிவம் ஜேம்ஸ் ஆலனது* Book of Meditations for Every day in the year *என்ற நூலை நாள்வழிச் சிந்தனைகள் என மொழி பெயர்த்துள்ளார்.*

## தி.லெட்சுமண பிள்ளை

*அகில இந்திய ரேடியோ 'வானொலி' என்ற இதழை நடத்தியது. அதில் 7.11.1943 இதழில் தி.லட்சுமண பிள்ளை*

வாழ்க்கை வரலாற்றை அவரே எழுதியுள்ளார். திரவியம் பிள்ளை – பலராமவல்லி மகனாக 3.5.1864 இல் பிறந்தவர். தனது அறுபதாவது வயதில் (10.11.1924) ஜேம்ஸ் ஆலனின் நாள்வழிச் சிந்தனைகள் நூலை மொழிபெயர்த்துள்ளார்.

## நித்தியாநு சந்தானம்

யூனியன் சென்டல் பிரஸ் வடக்குரதவீதி திருநெல்வேலியில் 1925 இல் அச்சிடப்பட்டது நித்தியாநு சந்தானம்..

## காசுக்கடை செ.சூரியம் பிள்ளை

அந்த நூலை பிரசுரித்தவர்கள் காசுக்கடை செ.சூரியம் பிள்ளை.

## செ.குற்றாலம் பிள்ளை

திருநெல்வேலி மந்திரமூர்த்தி மேல்நிலைப் பள்ளி ஸ்தாபகர் செ.குற்றாலம் பிள்ளை அந்த நூலைப் பிரசுரித்த இன்னொருவர். தேசபக்தச் செம்மல் வ.உ.சி., ஜேம்ஸ் ஆலனது நூல்கள் மொழிபெயர்த்து வெளியிடும் காலத்தில் தச்சநல்லூரில் இருந்து ஜேம்ஸ் ஆலனது நூலை தமிழில் மொழிபெயர்த்து வெளியிட்டவர் தி.லட்சுமணபிள்ளை.

(இசைச் செல்வரான இவரது வாழ்வின் பக்கங்கள், அவரது படைப்புகள் வெளிச்சத்திற்கு வரவேண்டும் என்பது எளியேனது அவா.)

எண்ணிய வண்ணமே, திருநிறை ஆற்றல், பேரின்பச்சோலை, மக்களும் அமைப்புகளும் ஆகிய நூல்களும் தமிழில் மொழிபெயர்க்கப்பட்டு வெளிவந்துள்ளது. MAN : King of Mind Body and Circumstance, The Shining Gateway, From Passion to Peace என்ற ஆங்கில நூல்களையும் அடியேன் வாசித்திருக்கிறேன்.

## அகமே புறம்

“Out from the Heart” என்ற ஜேம்ஸ் ஆலனது 33 பக்கங்களைக் கொண்ட ஆங்கில நூலை வ.உ.சி சென்னையிலிருந்தபோது ‘அகமே புறம்’ என்ற தலைப்பில் 1914 இல் மொழிபெயர்த்து வெளியிட்டார்.

### ஸ்வாமி வனஜானந்தன்

இதன் காகிதம் முதலியன சுதேசியம். இது நூலின் முதற்பக்கம். சென்னை சச்சிதானந்தம் பிரஸில் அச்சடிக்கப்பட்டு எட்டணா விலையில் 66 பக்கங்களில் சுவாமி வனஜானந்தனின் சிறப்பாயிரத்தோடு வெளிவந்தது. திருவனந்தபுரம் 'தமிழன்' இதழும் சென்னை வியாபாரி, சென்னை வித்தியாபாநு மதுரை சுதேச பரிபாலனி இரங்கூன் பூரண சந்திரோதயம், மதுரை, 'அகமே புறம்' நூலை வரவேற்று அணிந்துரைகள் வழங்கியது. தென்ஆப்பிரிக்கா டர்பனில் இருந்து வெளிவரும் விவேகபாநு இதழும், சென்னையிலிருந்து வெளிவந்த பிழைக்கும் வழி இதழும் வ.உ.சியின் 'அகமே புறம்' நூலுக்கு வாழ்த்துரை வழங்கியது.

### 1916

சென்னை புரோகிரஸிவ் பிரஸில் அச்சிடப்பட்டு எட்டு அணா விலையில் வ.உ.சியின் 'அகமே புறம்' இரண்டாம். பதிப்பு வெளியாயிற்று. அதன் அட்டையில் வ.உ.சி. குறிப்பிட்டுள்ளதாவது.

### எனது பிரசுரங்கள்

| | |
|---|---|
| மெய்யறம் அரும்பதவுரையுடன் 50 காசு | 8 அணா |
| எனது பாடற்றிரட்டு (பாடல் திரட்டு) | 8 அணா |
| எனது முதல் மனைவி வள்ளியம்மை சரித்திரம் | 8 அணா |
| அரும்பதவுரையுடன் | 8 அணா |
| மெய்யறிவு மூலமும் உரையும் | 8 அணா |
| வலிமைக்கு மார்க்கம் | 8 அணா |

### மதிவலனே கதி - தெலுங்கு

மதிவலனே கதி, மனம் போல் வாழ்வு தெலுங்கு மொழிபெயர்ப்பு, எட்டணா என்று வ.உ.சி குறிப்பிட்டுள்ளார். வ.உ. சிதம்பரம் பிள்ளை, பெரம்பூர், சென்னை என்ற குறிப்பும் உள்ளது.

### அச்சிலிருக்கும் நூல்கள்

இந்நிலை பதினென் கீழ்கணக்கிலொன்று மூலமும் உரையும் எட்டணா திருக்குறள் மணக்குடவருரை இரண்டு ரூபாய்

தொல்காப்பியம் இளம் பூரணம் ஆறு ரூபாய் அச்சிலிருக்கிற நூல்கள் வெளிவந்தவுடன் அவற்றை வி.பி. போஸ்ட் மூலமாக அனுப்புமாறு இப்பொழுதே தெரிவிப்பவர்களுக்கு அவை போஸ்டேஜ் செலவில்லாமல் அனுப்பப்படும் என்றும் வ.உ.சி அகமே புறம் 1916 ஆம் ஆண்டு பதிப்பு அட்டையில் குறிப்பிட்டுள்ளார்.

## ஊழை வெல்வதற்கு உபாயம்

ஜேம்ஸ் ஆலனின் நூல் ஒன்றினை 'ஊழை வெல்வதற்கு உபாயம்' என்று மொழிபெயர்த்தவர் வ.உ.சி.

## முத்திக்கு மார்க்கம்

ஜேம்ஸ் ஆலனின் நூல் ஒன்றினை 'முத்திக்கு மார்க்கம்' என்று தமிழ்ப் படுத்தியவர் வ.உ.சி. இவை இரண்டும் அச்சேறியதாக அறியப்படவில்லை. ஜேம்ஸ் ஆலனது மற்றைய நூல்களை மொழிபெயர்த்து வெளியிடுவதாக வ.உ.சி நினைத்திருந்ததும் நடைபெறவில்லை.

## தி.செல்வகேசவராய முதலியார்

'அகமே புறம்' இரண்டாவது பதிப்பினை 1916 இல் வ.உ.சி. வெளியிடும் போது சென்னை பச்சையப்பக் கல்லூரி சுதேச பாஷை அத்தியட்சகர் ஸ்ரீமான் தி.செல்வகேசவராய முதலியார் (யம்.ஏ) அவர்கள் அழகுபடுத்தித் தந்தார்கள் என்று வ.உ.சி. குறிப்பிட்டுள்ளார்.

## சேலம் ச. இராஜகோபாலாச்சாரியார்

சென்னை ஹைகோர்ட்டு வக்கீலும் சிறந்த தேசாபிமானியுமாகிய சேலம் மகா ஸ்ரீ.இராஜகோபாலாச்சாரியார் அவர்கள் இப்பதிப்பை அச்சிடுவதற்கு பொருளுதவி செய்தார்கள்.

## இரு சீலர்கள்

இவ்வுதவிகள் புரிந்த இவ்விரு சீலர்களுக்கும் நான் எந்நாளும் நன்றி பாராட்டக் கடவேன். வ.உ.சிதம்பரம் பிள்ளை பெரம்பூர் சென்னை இராட்சச வருஷம் (1915 – 1916) மாசி மாதம் 12 ஆம் நாள்.

## மனம் போல் வாழ்வு

ஜேம்ஸ் ஆலனின் ‘As a Man Thinketh’ ஆங்கில நூலினை எனும் *35* பக்கங்களைக் கொண்ட மனம் போல் வாழ்வு என்று தமிழ் வழக்கிற்கு ஏற்பத் தலைப்புத் தந்து வ.உ.சி. மொழிபெயர்த்து வெளியிட்டார். *1914* இல் வெளிவந்த அகமே புறம் நூலில் மனம் போல் வாழ்வு விலை அணா எட்டு, அகமே புறம் விலை அணா எட்டு என்று வ.உ.சி குறிப்பிட்டிருப்பதால் மனம் போல வாழ்வு நூலும் *1914* இல் வெளிவந்துவிட்டது என்று அறிய முடிகிறது.

மகாகவி சி.சுப்பிரமணிய பாரதியவர்கள் புதுச்சேரி, இந்து சென்னை, தென்னிந்திய மெயில் மதுரை, தென்னிந்தியா மித்திரன், கும்பகோணம், விவேக சிந்தாமணி மைலாப்பூர், சென்னை இந்தியா, சூரியோதயம் புதுச்சேரி ஆகியவை வ.உ.சியின் மனம்போல் வாழ்வு நூலை வரவேற்று அபிப்பிராயங்களை அப்போது அளித்தது.

## வலிமைக்கு மார்க்கம்

ஜேம்ஸ் ஆலனின் From Poverty to Power எனும் ஆங்கில நூலின் முதற்பாகமாகிய The Path of Prosperity வலிமைக்கு மார்க்கமாக *1916* இல் வெளிவந்தது. அதன் இரண்டாம் பதிப்பு *25.7.1930* இல் வெளிவந்தது. அதில் வ.உ.சி. எழுதுகிறார்.

## V. வெங்கடேஸ்வர சாஸ்திரி

மாணவர்களுக்கு உதவுமாறு ஆயிரக்கணக்கில் புத்தகங்கள் அச்சிட்டு வெளியிட்டுவரும் வாவில்ல V.ராமஸ்ஸாமி சாஸ்திருலு அண்டு கம்பெனி சன்ஸ் ஆதிஸ்தாபகரான ஸ்ரீ வாவில்ல ராமஸ்சாமி சாஸ்திரிகளின் குமாரருமான அதிபருமான ஸ்ரீ வெங்கடேஸ்வர சாஸ்திரி அவர்கள் எனது ராஜ்யகுருவாகிய ஸ்ரீபால கங்காதர திலகரின் அத்தியந்த நண்பர். ஸ்ரீ திலகரின் கர்மயோகம் முதலிய பல நூல்களை அச்சிட்டு வெளிப்படுத்தியவர், சிறந்த தேசபக்தர்.

## பலகால் (பலகாலம்) பண உதவி

எனக்கு பலகால் பணம் உதவிய சீமான் அவர்களும், அவர்களது குடும்பத்தார்களும், அவர் கம்பெனியும் நீடுழி

*நின்று வாழ்க! என்று 25.7.1930 இல் கோவில்பட்டியில் வசித்துவந்த வ.உ.சி எழுதியுள்ளார். (தகவல் பேராசிரியர் மா.சு. அண்ணாமலை, சென்னை)*

## சாந்திக்கு மார்க்கம்

ஜேம்ஸ் ஆலனின் 'From Poverty to Power' என்னும் நூலின் இரண்டாம் பாகமாகிய 'The way to peace' நூலை 'சாந்திக்கு மார்க்கம்' என்று மொழிபெயர்த்து 1934 இல் வ.உ.சி. வெளியிட்டார். பள்ளிக்கூடங்களில் பாடமாக இருந்த பெருமைக்குரியது இந்த நூலாகும். (பாவலர் ஆ.முத்துராமலிங்கம், வரலாற்று நாயகர் வ.உ.சிதம்பரனார், தச்சநல்லூர் 2005, பக்கம் 139)

அந்த நூலில் வ.உ.சி செய்நன்றியறிதல் என்ற தலைப்பில் எழுதியது இதோ;

## செய்நன்றியறிதல்.

என்னை ஆக்கி, அளித்து, இன்னிலையில் வைத்திருக்கின்ற எல்லாம் வல்ல இறைவனுக்கும், என்னைப் பெற்று வளர்த்து எனக்குக் கல்வி பயில்வித்த என்பெற்றோர்களுக்கும், தமிழையும் ஆங்கிலத்தையும் எனக்குக் கற்பித்து என்னை மேம்படுத்திய என் ஆசிரியர்களுக்கும் யான் நன்றியறிதலுள்ள வனாயிருக்கிறேன்.

**1908-ம் வருஷம் ஜூலை மாதம் முதல் 1912-ம் வருடம் டிசம்பர் மாதம் முடிய என் மனைவி மக்களுடைய வாழ்க்கைச் செலவுகளுக்கு மாதந்தோறும் ரூபா ஐம்பதுக்கு மேலாகத் தென்ஆபிரிக்காவிலிருந்து அனுப்பிக் கொண்டிருந்தும், அதற்குப்பின் எனக்குத் தந்தி மணியார்டர் மூலமாக முதல் முறை ரூபாய் ஐந்நூறும்,** இரண்டாம் முறைரூபா இரண்டாயிரமும் அனுப்பியும், மூன்றாம் முறை ரூபாய் இரண்டாயிரமும், தங்கக் கைக்கடிகாரம், முதலியனவும் கொண்டு வந்து என்னிடம் நேரில் கொடுத்தும் உதவிய எனது மெய்ச்சகோதரர் தஞ்சை ஜில்லாதில்லையாடி திரு. த. வேதியப்பிள்ளையவர்களுக்கு யான் நன்றியறிதலுள்ள வனாயிருக்கிறேன்.

எனது நன்றியறிதலின் ஓர் அடையாளமாக அவர்கள் பெயரை முன்னரே என் இரண்டாவது மகளுக்கு "வேதவல்லி" என்று இட்டுள்ளேன்.

## இ.எச். வாலேஸ் - 1924

எனது வக்கீல் உத்தியோகத்தை மறுபடியும் அடையயான் சென்ற 1924–ம் வருஷத்தில் முயற்சித்த போது சென்னை பெரிய நீதிமன்றத்து நீதிபதிகளுக்கெல்லாம் சிபாரிசு செய்து எனக்கு வக்கீல் உத்தியோகம் கிடைக்கும்படி செய்தவரும், அந்நீதிமன்றத்து அக்காலத்து நீதிபதிகளில் ஒருவராயிருந்தவரும், பின்னர் உபகாரச் சம்பளம் பெற்று லண்டன் நகரில் வசித்து வருகிறவருமான ஸ்ரீ. இ. எச். வாலேஸ் அவர்களுக்கு யான் நன்றியறிதலுள்ளவனாயிருக்கிறேன்.

## வாலேஸ்வரன்

என் நன்றியறிதலின் ஓர்அடையாளமாக அவர் பெயரை முன்னரே எனது கடைசி மகனுக்கு “வாலேஸ்வரன்” என்று வைத்துள்ளேன். எளியேனின் அன்பிற்கு மிகப் பாத்தியப்பட்ட அய்யா வ.உ.சி. வாலேஸ்வரன் பலமுறை அடியேனது இல்லத்திற்கு வந்துள்ளார்கள்.

## அ. செ. சு. கந்தசுவாமி ரெட்டியாரவர்கள்

யான் கோவில்பட்டியை விட்டு இங்கு வந்த 1932–ம் வருஷம் மார்ச்சு மாதம் முதற் கொண்டு என் குடும்பச் செலவுகளுக்கும், என் குடும்ப விசேஷங்களுக்கும், யான் வேண்டிய காலங்களில் யான் வேண்டியாங்குப் பொருள் அளித்தும், யான்வேண்ட நாணிய காலங்களில் என் குறிப்பறிந்து பொருள் அளித்தும், என்னைப் பேணி வருகின்ற தூத்துக்குடி திரு. அ. செ. சு. கந்தசுவாமி ரெட்டியாரவர்களுக்கும், அவர்களுடைய ஏகக் குடும்ப மைத்துனர் திரு. அ. செ. சு. முத்தையா ரெட்டியார வர்களுக்கும் யான் நன்றியறிதலுள்ளவனாயிருக்கிறேன்.

## டாக்டர். பி. வரதராஜுலுநாயுடு

எனது நிலைமையை அறிந்து, எனது “சஷ்டிபூர்த்திநிதி” என்ற பெயரால் ஓராயிரம் ரூபாய்க்கு மேல் சேர்த்து எனக்குத் தந்துதவிய எனது நண்பரும், சிறந்த தேசாபிமானியும், பெரிய இராஜதந்திரியுமான நமது “. தமிழ்நாடு ” ஆசிரியர் டாக்டர். பி. வரதராஜுலு நாயுடு அவர்களுக்கும், அவர்கள் விருப்பப்படி

அந்நிதிக்குப் பொருள் கொடுத்து உதவிய ஏனைய தேசாபிமான சீலர்களுக்கும் யான் நன்றியதலுள்ளவனாயிருக்கிறேன்.

வ. உ. சிதம்பரம் பிள்ளை.

## வ.உ.சி.யின் திருக்குறள் ஆங்கில மொழிபெயர்ப்பு

15.9.1932 இல் தூத்துக்குடியிலிருந்து வ.உ.சி. மனம்போல் வாழ்வு நூலின் 4வது பதிப்பினை வெளியிட்டார்.

வ.உ.சி. கோவைச் சிறையில் இருந்த காலத்தில் ஜேம்ஸ் ஆலனின் நூல்களை மொழிபெயர்த்ததை நாம் அறிவோம்.

அதில் திருக்குறளின் முதற்பாகமாகிய அறத்துப்பாலை ஆங்கிலத்தில் மொழிபெயர்ப்பதிலும் உபயோகப்படுத்தித் திருப்தியடைந்தேன் என்று குறிப்பிட்டுள்ளார்.

வ.உ.சியின் திருக்குறள் அறத்துப்பால் ஆங்கில உரை எங்கு உள்ளதோ? இறைவனே அறிவான்.

## பாடற்றிரட்டு

ஸ்ரீ மான் வ.உ.சிதம்பரம்பிள்ளையவர்கள் இயற்றிய பாடற்றிரட்டு (பாடல் திரட்டு) முதல் பாகம் பிள்ளையவர்கள் சிறைக்குச் செல்வதற்கு முன் பாடிய தனிப்பாடல்கள், இரண்டாம் பாகம் பிள்ளையவர்கள் சிறையில் வசித்த காலத்தில் பாடிய தனிப்பாடல்கள் எனும் நூல் இந்தியா பிரிண்டிங் ஒர்க்ஸ், சென்னையில் 1915 இல் அச்சிடப்பட்டு 112 பக்கங்களில் வெளிவந்தது. முதல் பாகம் 24 பக்கங்கள் 26 முதல் 112 வது பக்கங்கள் வரை இரண்டாவது பாகம் ஆகும். (இந்த நூலினை அடியேன் வ.உ.சி. பாடல்கள் என்று மறுபதிப்புச் செய்து இலவசமாகவே வழங்கினேன். இன்று அந்த நூலை பலரும் அச்சிட்டு மகிழ்கிறார்கள்)

## நிரதிசய - பாலசுந்தரசுவாமி

சென்னை சிந்தாதிரிப்பேட்டை நிரதிசய – பாலசுந்தரசுவாமிகள் வ.உ.சியின் பாடற்றிரட்டு நூலுக்கு சிறப்புப்பாயிரம் வழங்கியுள்ளார்கள் (1914 – 1915) (ஆனந்த வருஷம் தை மாதம் 15 ஆம் நாள்)

## பாயிரம் - திருமயிலை

பாடற்றிரட்டு நூலுக்கு அதே நாளில் வ.உ.சி பாயிரம் எழுதியுள்ளார்கள். சென்னை திருமயிலை என்று வ.உ.சியின் முகவரி உள்ளது.

## கோ.அ. இலக்குமண பிள்ளை

வ.உ.சி எழுதுகிறார்; யான் சிறையில் சுகமாயிருந்து படித்ததற்கும் எழுதுவதற்கும் எண்ணரிய உதவிகள் புரிந்து யான் அங்கிருந்து எழுதியனுப்பிய நூல்களையும், பிறவற்றையும் பாதுகாத்து வைத்திருந்து யான் வெளிவந்த பின்னர் என்னிடம் தந்து கோயமுத்தூரில் இனிது வாழ்ந்து நின்ற எனது மெய்த்தம்பி கோ.அ. இலக்குமணபிள்ளைக்கும்,

## சொ.விருதாச்சலம் பிள்ளை

யான் சிறையில் புகுந்த நாள் முதல் எனது குடும்பத்தாருடைய சரீரப் பாதுகாப்புக்கும், எனது நூல்களை அச்சிடுவதற்கும் பொருள் உதவிக் கொண்டு தென் ஆப்பிரிக்காவில் இனிது வாழ்ந்து நின்ற எனது மெய்ச்சகோதரர் ஸ்ரீமாந் சொ.விருதாச்சலம் பிள்ளையவர்களுக்கும்,

## த.வேதியப்பப் பிள்ளை

ஸ்ரீமான் த.வேதியப்பபிள்ளையவர்களுக்கும் யானும் எனது குடும்பத்தாரும் நன்றியறிதலுள்ளவராயிருக்கக் கடமைப் பட்டுள்ளோம்' என்று வ.உ.சி. பாயிரத்தில் குறிப்பிட்டுள்ளார்.

பாடற்றிரட்டு நூலின் பின் அட்டையில் வ.உ.சி. விளம்பரம் என்ற தலைப்பில் தந்துள்ள விவரம் இதோ.

# விளம்பரம்.

இதன் அடியிற் குறித்த புத்தகங்கள் சென்னை, தம்பு செட்டி தெரு, ரிப்பன் புத்தக சாலையிலும், எஸ்பிளனேட், வி. கலியாணராமய்யர் புத்தக சாலையிலும், திருவல்லிக்கேணி, விவேகபோதினி ஆபீஸிலும், மயிலாப்பூர் ஜெனரல் சப்ளைஸ் கம்பெனியிலும், என்னிடத்திலும் கிடைக்கும்.

| நூல். | | ரூ. | அ. | பை. |
|---|---|---|---|---|
| மனம்போல வாழ்வு | ... | 0 | 8 | 0 |
| அகமேபுறம் | ... | 0 | 8 | 0 |
| மெய்யறம்—அரும்பத வுரையுடன் | ... | 0 | 8 | 0 |
| எனது பாட்டுத் திரட்டு | ... | 0 | 8 | 0 |
| மெய்யறிவு—மூலமும் உரையும் | ... | 0 | 8 | 0 |
| தொல்காப்பியம்—மூலமும் உரையும் | ... | 4 | 0 | 0 |
| திருக்குறள்—மூலமும் உரையும் | ... | 2 | 0 | 0 |

குறிப்பு:—தொல்காப்பிய மூலம் தொன்னூல் ஆராய்ச்சி மிக்குடைய இரண்டு தமிழ்ப் பண்டிதர்களால் பல ஏட்டுப் பிரதிகளைச் சோதனை செய்து எடுத்தெழுதப்பட்டது. இதில் தற்கால அச்சுப் பிரதிகளிற் காணப்படும் பிழைகள் களையப் பட்டும், பாடபேதங்கள் எடுத்துக் காட்டப்பட்டு மிருக்கின் றன. இதன் உரை இதுவரை அச்சுக்கு வந்துள்ள பல உரை களையும் அச்சுக்கு வாராத பல உரைகளையும் பல இலக்கண நூல்களையும் படித்து யாவர்க்கும் எளிதில் விளங்கத்தக்க செந்தமிழ் நடையில் என்னால் எழுதப்பட்டுள்ளது. திருக் குறள் மூலம் பல அச்சுப் பிரதிகளையும் ஏட்டுப்பிரதிகளையும் சோதித்து என்னால் எடுத்தெழுதப்பட்டது. இதில் தற்கால அச்சுப்பிரதிகளிற் காணப்படும் எழுத்துப் பிழைகளும் சொற் பிழைகளும் களையப்பட்டுள்ளன. இதன் உரை இதுவரை அச்சுக்கு வந்துள்ள பல உரைகளையும் அச்சுக்கு வாராத பல உரைகளையும் குறள்கள் எடுத்தாளப்பட்டுள்ள பல நூல்களை யும் படித்து யாவர்க்கும் எளிதில் விளங்கத்தக்க செந்தமிழ் நடையில் என்னால் எழுதப்பட்டுள்ளது. இவ்விரண்டும் வரு கிற மார்கழிமாத முடிவுக்குள் வெளிவரும். வருகிற தைமாத முடிவுக்குள் பணம் அனுப்புவோர்க்கு இவை முறையே விலை ரூ. 3-0-0 க்கும் ரூ. 1-8-0 க்கும் கொடுக்கப்படும்.

மயிலாப்பூர், சென்னை.
ஆனந்த ௵ பங்குனி ௴

இங்ஙனம்
வ. உ. சிதம்பரம்பிள்ளை.

PRINTED AT THE INDIA PRINTING WORKS, MADRAS.

இது வ.உ.சி மயிலாப்பூரில் வாழ்ந்த விவரத்தை அறிவிக்கிறது.

### சுதந்திரச் சங்கநாதம் சுப்பிரமணிய சிவா

*சென்னையிலிருந்த சுதந்திரச் சங்கநாதம் சுப்பிரமணிய சிவா பாடற்றிரட்டு நூல் குறித்து தந்த அபிப்பிராயம் இதோ;*

### பாடற்றிரட்டு

### இந்நூலைப்பற்றிய சில அபிப்பிராயங்கள் :

"எனது நண்பர் ஸ்ரீமான் வ.உ.சிதம்பரம் பிள்ளையவர்கள் "பாடற்றிரட்டு" இனிய செந்தமிழில் இயற்றப்பட்டுள்ள பல பாக்களால் அநேக அரிய விஷயங்களை மிகத் தெளிவாக விளக்குகின்றது. இதற்கு முன்னர் பிள்ளையவர்கள் தமது குடும்பத்திற்குப் பரம்பரையாகவே "கவிராயர்" என்ற பட்டம் உண்டென்றும் அப்பட்டத்தை உண்மையிலேயே தாம் அனுபவிக்க ஈசன் அருள்புரிந்தானென்றும் கூறியுள்ள முகவுரையைக் கொண்ட ''மெய்யறம்' என்னும் ஓரடிச் சூத்திரச் செய்யுள் நூலால் அவர்களுடைய கவித்திறமை புலப்பட்டது. பிள்ளையவர்களது "பாடற்றிரட்டு '' அவர்கள் ''கவிராயர்'' என்பதை உறுதிப்படுத்திவிட்டது. பாடசாலைகளின் உபயோகங்களுக்கு, மாத்திரம் பண்டிதர்கள் பெருகி வருகின்ற இக்காலத்தில் நவீன நாகரிகமும் ஆங்கிலக்கல்வியும் நன்கு கொண்டுள்ள பிள்ளையவர்கள் பூர்வீக காலத்துப் புலவர்களைப்போல இன்புற்றபொழுதும் துன்புற்ற பொழுதும் கவிபாடுவதிலேயே காலத்தைக் கழிப்பது பிள்ளையவர்களுக்குப் பரம்பரையாகவும் இயற்கையாகவும் அமைந்துள்ள கவிராய வல்லமையைக் காட்டுகின்றது. கலைமகளின் கருணையைப் பெற்றுள்ள இக்கவிஞர் நிலமிசை நீடூழி காலம் வாழ்ந்திருந்து தருமசேவை செய்யுமாறு எல்லாம் வல்லஎம் இறைவி அனுக்கிரகிப்பாளாக.'' சுப்பிரமணிய சிவம், சென்னை.

### சேஷாத்திரி அய்யங்கார்

*பாதூர் தமிழ்ப் பண்டிதர் சேஷாத்திரி அய்யங்கார் வ.உ.சி.யின் பாடற்றிரட்டைப் போற்றியுள்ளார்.*

*"நமது தேசாபிமானியாகிய ஸ்ரீமான் வ.உ.சிதம்பரம் பிள்ளையவர்கள் பல சமயங்களில் பாடிய பாடற்றிரட்டு மனித சமூகத்திற்கு அவசியம் வேண்டுவனவாகிய ஈகை, அன்பு, உண்மை முதலியவைகளையும், ஊழின் வலிமை இத்துணைத்தென்பதையும், அவ்வூழையும் மெய்ம்*

முயற்சியினால் வென்று விடலா மென்பதையும், துன்பமென்று சொல்லப்படுவன அனைத்தையும் இன்பமென்று நினைக்கின் அவை அக்கணமே இன்பமாக மாறிவிடுமென்பதையும், கடவுளையும் ஆன்மாவையும் பற்றி மனிதர் அறிய வேண்டிய அநேக விஷயங்களையும் இனிய தமிழ்நடையில் தெளிவாகக் கூறுகின்றது. இந்நூலை நமது நாட்டார் வாங்கி வாசித்து மேம்படவேண்டுமென்று யான் கோருகிறேன்."

## ஸ்ரீசகஜானந்த சுவாமியவர்கள் (27.1.1890 - 1.5.1959)

சென்னையில் வாழ்ந்துவந்த வ.உ.சியின் நண்பர் ஸ்ரீ சகஜானந்த சுவாமிகள் வ.உ.சி.யின் பாடற்றிரட்டைப் போற்றிப் புகழுரை வழங்கியுள்ளார்.

"நமது தேசாபிமானத் தலைவரும், மதுரைத் தமிழ்ச் சங்கப் புலவரும், பொதுமறையின் தற்கால உரையாசிரியருமாகிய ஸ்ரீமாந் வ. உ. சிதம்பரம் பிள்ளையவர்களது பாடற்றிரட்டு நமது மதாச்சாரியர்களும் தமிழ்ப் பண்டிதர்களும் வாசிக்கத்தக்க பல அரிய விஷயங்களையும் ஒரு பெரிய நூலிற்குரிய பல சிறப்புக்களையும் கொண்டுள்ளது. இதனைத் தமிழ் மக்கள் ஒவ்வொருவரும் கைக்கொண்டு கற்கவேண்டுமென்பதும் இது நிலவுலகில் நீடுநின்று நிலவ வேண்டுமென்பதும் எனது கோரிக்கை.

வ.உ.சியின் 'வலிமை மார்க்கம்' நூலின் (191) பின்புற அட்டையில் வந்த விளம்பரம் இதோ;

## எனது நூல்களும் பிரசுரங்களும்.

| | |
|---|---|
| மனம்போல் வாழ்வு—இரண்டாம் பதிப்பு—ஜேம்ஸ் ஆலன் சரித்திரத்துடன் ரூ. | 0—8—0 |
| அகமேபுறம்—இரண்டாம் பதிப்பு—ஜேம்ஸ் ஆலன் சரித்திரத்துடன் | 0—8—0 |
| வலிமைக்கு மார்க்கம் | 0—8—0 |
| மெய்யறம்—அரும்பதவுரையுடன் | 0—8—0 |
| மெய்யறிவு—மூலமும் உரையும் | 0—8—0 |
| எனது பாடற்றிரட்டு—அரும்பத வுரையுடன் | 0—8—0 |
| இன்னிலை—பதினெண் கீழ்க்கணக்கி லொன்று—எனது உரையுடன் | 0—8—0 |
| திருக்குறள்—மணக்குடவருரை (அச்சில்) | 2—0—0 |
| திருக்குறள்—எனது உரையோடும் ஆங்கில மொழிபெயர்ப்போடும் (அச்சில்) | 5—0—0 |
| தொல்காப்பியம்—இளம்பூரணம் (அச்சில்) | 6—0—0 |
| தொல்காப்பியம்—எனது விருத்தி யுரையுடன் (அச்சில்) | 7—0—0 |
| "மதிவலனேகதி"—மனம் போல வாழ்வின் தெலுங்கு மொழிபெயர்ப்பு. | 0—8—0 |

குறிப்பு:— இப்பொழுது அச்சிலிருக்கிற நூல்களைத் தமது விலாசத்திற்கு வி. பி. போஸ்டு மூலமாக அனுப்புமாறு இப்பொழுது தெரிவிப்பவர்களுக்கு அவை அச்சானவுடன் போஸ்டேஜ் இல்லாமல் அனுப்பப்படும்.

வ. உ. சிதம்பரம் பிள்ளை,
பிரம்பூர், சென்னை.

இது வ.உ.சி பெரம்பூரில் வாழ்ந்ததற்கான சான்றாகும்.

## வலிமைக்கு மார்க்கம் (1916)

ஜேம்ஸ் ஆலனின் Path of Prosperity *நூலை வ.உ.சி 1916* இல் *வலிமைக்கு மார்க்கம் என்னும் நூலாக எட்டணா விலையில் 110 பக்கங்களில் வெளியிட்டுள்ளார்.*

## த.வேதியப்பப் பிள்ளை

*இதுவரையில் நான் வெளியிட்டனவையின்றி இந்நூலையும் அச்சிடுவதற்குப் பொருளுதவிய சீலர்கள் எனது மெய்ச் சகோதரர்களாய், தஞ்சை ஜில்லா தில்லையாடியில் வசிக்கின்ற ஸ்ரீமான் த.வேதியப்ப பிள்ளை அவர்களுக்கும்,*

## சொ.விருதாச்சலம் பிள்ளை

*தென் ஆப்பிரிக்கா டர்பன் நகரில் வசிக்கின்ற ஸ்ரீமான் சொ.விருதாச்சலம் பிள்ளையவர்களுக்கும்*

## தி.செல்வகேசவராய முதலியார்

*இம்முயற்சியில் எனக்கு உதவியாயிருக்கின்றவர்கள் சென்னை பச்சையப்பன் கல்லூரி சுதேசபாஷா அத்தியட்சகர் ஸ்ரீமாந் தி.செல்வகேசவவராய முதலியாரவர்களே,* **அம்மூவர்களும், அவர்களைச் சேர்ந்தோர்களும் சகல செல்வங்களோடும், புகழோடும் இன்புறுமாறு எல்லாம் வல்ல இறைவன் அருள்புரிவானாக என்று வ.உ.சி. பாயிரத்தில் 1916 இல் குறிப்பிட்டுள்ளார்.**

## திருமணம்

*'திருமணம்' என்ற ஊரில் பிறந்தவர் செல்வகேசவராய முதலியார் (1864 – 2.10.1921) 57 ஆண்டுகள் வாழ்ந்தவர். வ.உ.சி.யின் நெருங்கிய நண்பர். அவரது நூல்கள் குறித்த விளம்பரத்தை வ.உ.சி. தனது வலிமைக்கு மார்க்கம் நூலில் ஒரு பக்க அளவு பிரசுரித்துள்ளார். இதோ அந்தப் பக்கம்;*

## ஸ்ரீமாந். தி. செல்வகேசவராய முதலியார் அவர்கள் பிரசுரங்கள்.

| நூல். | ரூ. | அ. | பை. |
|---|---|---|---|
| தமிழ் | 1 | 0 | 0 |
| திருவள்ளுவர் | 0 | 8 | 0 |
| கம்பநாடர் | 0 | 8 | 0 |
| தமிழ் வியாசங்கள் | 0 | 4 | 0 |
| அக்பர் | 0 | 10 | 0 |
| அபிநவகதைகள் | 0 | 6 | 0 |
| ராபின்ஸன்க்ரூஸோ | 0 | 4 | 0 |
| கண்ணகி சரித்திரம் | 0 | 8 | 0 |
| கலிங்கத்துப்பரணி (கதாசங்கிரகம்) | 0 | 8 | 0 |
| பஞ்சலட்சணம் | 0 | 4 | 0 |
| அறநெறிச்சாரம் (மூலம்) | 0 | 4 | 0 |
| ஆசாரக்கோவை (மூலமும் உரையும்) | 0 | 8 | 0 |
| பழமொழி மூலமும் உரையும் (அச்சில்) | | | |

சென்னை எஸ். வி. என். பிரஸ்.

## மெய்யறிவு

வ.உ.சி, தனது சிறை வாழ்வின்போது தன்னுடன் இருந்த குற்றவாளிகள் திருந்தும் பொருட்டு வழங்கிய அறிவுரையே மெய்யறிவாகும். 1915இல் சென்னை எஸ்.வி.என். பிரஸில் அச்சிட்டு மெய்யறிவு நூலை வ.உ.சி. வெளியிட்டார்.

## கலியாணசுந்தர யதீந்திரர்

மெய்யறிவு நூலுக்கு சிறப்புப் பாயிரம் கலியாணசுந்தர யதீந்திரர் வழங்கியுள்ளார். த.செல்வகேசவராய முதலியாரவர்கள் முன்னிலையில் நூல் அரங்கேற்றப் பெற்றது. தென் ஆப்பிரிக்காவில் வசித்து வராநின்ற எனது மெய்ச்சகோதரர்கள் ஸ்ரீமான் வேதியப்பபிள்ளையவர்களும், ஸ்ரீமான் சொ.விருத்தாசலம் பிள்ளையவர்களும் அளித்த பொருளுதவியால் நூல் அச்சிடப்பட்டது என்று வ.உ.சி திருமயிலையில் வாழ்ந்த காலத்தில் எழுதிய பாயிரத்தில் (1915) குறிப்பிட்டுள்ளார்.

## மெய்யறம்

1915 இல் செல்வகேசவராய முதலியார் போன்ற தமிழறிஞர்கள் பலர் முன்னிலையில் வ.உ.சியின் மெய்யறம் நூல் அரங்கேற்றப்பட்டது. மெய்ச்சகோதரர் ச.வேதியப்பபிள்ளை அவர்கள் அளித்த பொருளுதவியால் நூல் அச்சிடப்பட்டது என்று வ.உ.சி குறிப்பிட்டுள்ளார். அவரது நினைவாக தனது இரண்டாவது மகளுக்கு வ.உ.சி வேதவல்லி என்று பெயர் சூட்டி மகிழ்ந்தார்.

## அம்பாசமுத்திரம் ஷண்முகவிலாசம் பிரஸ்

வ.உ.சி.யின் மெய்யறம் நூல் அரும்பதவுரையுடன் மூன்றாவது பதிப்பு அம்பாசமுத்திரம் ஷண்முக விலாசம் பிரஸில் அச்சிடப்பட்டு 1930 இல் வெளிவந்தது. அப்போது வ.உ.சி. கோவில்பட்டியில் வசித்து வந்தார்.

## வள்ளியம்மை சரித்திரம்

வ.உ.சி. அரும்பதவுரை எழுதியதும் சி.முத்துசாமிப்பிள்ளை இயற்றியதுமான வ.உ.சி முதல் மனைவி வள்ளியம்மை சரித்திரம் 1915 இல் சென்னை இந்தியா பிரிண்டிங் ஒர்க்ஸில்

அச்சிடப்பட்டு வெளியானது. நூல் 77 பக்கங்கள் (இதனை அடியேன் மறுபதிப்பு செய்துள்ளேன்).

## சுவாமி வள்ளிநாயகம்

வள்ளியம்மை சரித்திர நூலுக்கு சுவாமி வள்ளிநாயகம் சிறப்புப் பாயிரம் தந்துள்ளார்.

## வ.சண்முகம்பிள்ளை

பாளையங்கோட்டை ஸ்ரீமான் வ.சண்முகம் பிள்ளையவர்கள் வள்ளியம்மை சரித்திரம் நூலுக்கு சாற்றுக்கவிகள் வழங்கியுள்ளார்.


ஸ்ரீமாந்

வ. உ. சிதம்பரம்பிள்ளையவர்கள்

முதல்மனைவி

வள்ளியம்மை சரித்திரம்.

இதன் மூலம்.

திருநெல்வேலி ஜில்லா எட்டயபுரம் சமஸ்தானம்
...முடிமன் வித்வான் ம-ள-ள-ஸ்ரீ சி. முத்துசுவாமிப்
பிள்ளையவர்களால் இயற்றப்பெற்றது.

அரும்பதவுரை.

ஸ்ரீமாந் வ. உ. சிதம்பரம்பிள்ளையவர்களால்
எழுதப்பெற்றது.

XVC: 7
உ.
திருச்சிற்றம்பலம்.
திருநாவுக்கரசு ...
நிலையம், ...
கல்லத்திமுடுக்குத் தெரு,
திருநெல்வேலி.

இந்தியா பிரின்டிங் வொர்க்ஸ், சென்னை.

1916.

## திருக்குறள் மணக்குடவருரை (1917)

*140 பக்கங்களில் வ.உ.சி. திருக்குறள் மணக்குடவருரையை 1917 இல் தந்தார். விலை ரூபாய் ஒன்று. இதோ அந்த நூலின் முகப்புப் பக்கம்.*

திருவள்ளுவர்

# திருக்குறள்

மணக்குடவருரை.

அறத்துப்பால்.

வ. உ. சிதம்பரம்பிள்ளை,
பிரம்பூர், சென்னை.

நன்றி : சென்னை ஆவணக்காப்பகம்

## உ.வே. சாமிநாதய்யர்

வ.உ.சி மணக்குடவருரை வெளியிட தமிழ்த்தாத்தா உ.வே.சாமிநாதய்யர், ஸ்ரீசகஜானந்தசாமி தி.செல்வகேசவராய முதலியார் உதவினார்கள்.

## வ.உ.சி.யின் கடிதம்

1908ஆம் வருடம் ஆசிரியருக்கு (உ.வே.சா.க்கு) ஒரு கடிதம் வந்தது. அந்தக் கடிதத்தில் மேலே சிறை அதிகாரிகள் தணிக்கை செய்த குறிப்பு இருந்தது. கடிதம் சிறையிலிருந்து வந்திருப்பதாக அந்த அடையாளம் காட்டியது. நமக்குச் சிறையிலிருந்து யார் கடிதம் எழுதப்போகிறார்கள் என்று எண்ணி ஆசிரியர் (உ.வே. சா.) அதைப் பிரித்துப் பார்த்தார். அப்போது கப்பலோட்டிய தமிழர் வ.உ.சிதம்பரம் பிள்ளை கோயம்புத்தூர் சிறையில் இருந்தார். அவர் தமிழிலும் நல்ல பயிற்சி உள்ளவர்.

## 14.9.1908

அவரே (வ.உ.சி.) அந்த கடிதத்தை 14.9.1908 ஆம் தேதி எழுதியிருந்தார். அவர் சிறையில் திருக்குறளை ஆராய்ச்சி செய்துவந்தார். தாம் திருக்குறளை ஆராய்ச்சி செய்வதாகவும், குறள் முழுவதையும் ஆங்கிலத்தில் மொழிபெயர்த்து வருவதாகவும் அதில் குறித்திருந்தார்.

## கி.வா.ஜகந்நாதன்

அதில் தமக்கு ஏற்பட்டுள்ள ஐயங்கள் சிலவற்றை எழுதி, அவற்றை விளக்க வேண்டும் என்று கேட்டிருந்தார். ஆசிரியர் (உ.வே.சா.) அவற்றிற்கேற்றபடி விடை எழுதி அனுப்பினார். இது கி.வா.ஜகந்நாதன் தரும் தகவல்.

> *வாகீசகலாநிதி, கி.வா.ஜகந்நாதன் என் ஆசிரியப்பிரான், டாக்டர் உ.வே.சாமிநாதையர் நூல்நிலையம், சென்னை, முதற்பதிப்பு 1983, இரண்டாம் பதிப்பு 2021, பக்கம் 91.*

## த.கனகசுந்தரம்பிள்ளை

சென்னைக் கிறிஸ்டியன் கல்லூரி சுதேசபாஷா அத்தியட்சகர் ஸ்ரீமான் த.கனகசுந்தரம் பிள்ளை அதனைப் பலமுறை பார்த்துச் சீர்படுத்திக் கொடுத்தார்கள்.

## தென் ஆப்பிரிக்க இந்தியச் சகோதரர்கள்

**தென் ஆப்பிரிக்காவிலுள்ள இந்தியச் சகோதரர்களும் எனக்குச் செய்த நன்றிகள் 'காலத்தினாற் செய்த வையும் ''எழுமை ஏழு பிறப்பும்'' உள்ளத்தக்கவைப்புமாகும் என்று வ.உ.சி பதிப்புரையில் தெரிவித்துள்ளார்.**

## திருக்குறள் மீது தீராக்ககாதல்

"திருவள்ளுவர் திருக்குறளைக் கற்கும் ஒவ்வொருவருக்கும், தத்தமக்குக் கிடைக்கும் உரைகளைத் துணையாக வைத்துக் கொண்டு, குறள்களின் பொருள்களைத் தாமே ஆராயவேண்டுமென்பது என் விருப்பம். பரிமேலழகரையும் அதன் வழிவந்த **உரைகளையும் தவிர வேறு உரைகளை யாரேனும்** காண்பாராயின், அவ்விவரத்தை எனக்குத் தெரிவிக்குமாறு அவர்களை வேண்டிக் கொள்கிறேன் என்று வ.உ.சி வேண்டுகோளும் அந்த பதிப்புரையில் தந்துள்ளார்.

## இந்தியச் சகோதரர்கள்

வ.உ.சி. யின் திருக்குறள் மணக்குடவருரை அச்சாக தென்னாப்பிரிக்காவில் இருந்து உதவிய இந்தியச் சகோதரர்கள் யார், யார் என்று தேடினேன். வ.உ.சி. நூலின் பதிப்புரையில் குறிப்பிட்ட இந்தியச் சகோதரர்கள் பட்டியலை முழுமையாகத் தந்துள்ளேன். (எளியேன் எழுதிய வ.உ.சி குறித்த நூல்களில் இது இருபதாவது நூல். இந்த நூலில் குறிப்பிடும் இந்தியச் சகோதரர்கள் பட்டியலைக் கண்டுபிடித்திட நான் பட்டபாடு அதிகம். ஆனால் இந்த நூல் வெளிவந்ததும் இந்தப்பட்டியலை அப்படியே அவரவர் நூல்களில் எடுத்து எழுதிவிடுவார்கள் என்பது மட்டும் உறுதி)

வ.உ.சி.நூல்களுக்கு தென்னாபிரிக்காவிலிருந்து பொருளுதவிய இந்தியச் சகோதரர்களின் பெயர்கள் முதலியன:

| மகாா-ா-ஸ்ரீ | | ப | ஷி | பே |
|---|---|---|---|---|
| வி. ரெ. நமசிவாய முதலியார், மாயவரம் | ... | 5 | 5 | 0 |
| ரா. இராமச்சந்திர நாயுடு, போர்ட் எலிசபெத் | ... | 2 | 2 | 0 |
| சி. நாராயணசாமி நாயுடு, கொட்டுப்பாளையம் | ... | 0 | 2 | 6 |
| வே. த. சுப்பிரமணிய பிள்ளை, பரங்கிப்பேட்டை | ... | 0 | 10 | 0 |
| நா. கா. ரெங்கசாமி படையாட்சி அன்டு கம்பெனி, கீழப்பெரும்பள்ளம் | ... | 0 | 10 | 0 |
| வெ. நாராயணசாமி முதலியார், தில்லையாடி | ... | 0 | 10 | 0 |
| சீனிவாச வாண்டையார், மோரீஸ் | ... | 0 | 2 | 0 |
| மு. சுப்பிரமணிய செட்டியார் | ... | 0 | 10 | 6 |
| க. கரத்தா படையாட்சி, சிதம்பரம் கோயில் பத்து | ... | 0 | 3 | 0 |
| ஆர். வேலுப்பிள்ளை, போர்ட் எலிசபெத | ... | 2 | 2 | 0 |
| க. முத்துப்பத்தர், கள்ளிவளாகம் | ... | 0 | 5 | 0 |
| ப. ஆறுமுக முதலியார், மேலக்கட்டளை செம்பொனூர்கோயில் | ... | 1 | 1 | 0 |
| வே. முத்தைய படையாட்சி, பனங்குடி | ... | 0 | 5 | 0 |
| எஸ். பொன்னுசாமி பிள்ளை, திருவாரூர் | ... | 0 | 10 | 6 |
| பொ. மாரிமுத்துப் பிள்ளை, தில்லையாடி | ... | 0 | 5 | 0 |
| த. முத்துசாமி படையாட்சி, மேலூர் | ... | 0 | 5 | 0 |
| ரா. கோவிந்தசாமி படையாட்சி, உமையாள்புரம் | ... | 0 | 5 | 0 |
| பெ. இருளப்ப படையாட்சி, நாச்சகட்டளை | ... | 0 | 5 | 0 |
| மா. சிவலிங்க படையாட்சி, மேலூர் | ... | 0 | 5 | 0 |
| ரா. முத்தைய படையாட்சி, தான்டாம்பட்டணம் | ... | 0 | 5 | 0 |
| சு. பக்கிரி படையாட்சி, குமாரகுடி | ... | 0 | 5 | 0 |
| நா. சவரிநாயுடு, ஆக்கூர் | ... | 0 | 5 | 0 |
| மு. குப்புசாமிபிள்ளை, போர்ட் எலிசபெத் | ... | 0 | 5 | 0 |
| டி. கிருஷ்ணசாமி பிள்ளை ,, | ... | 0 | 2 | 6 |
| நா. பெருமாள் நாயுடு, ,, | ... | 0 | 3 | 0 |
| இருளப்ப செட்டியார், தில்லையாடி | ... | 0 | 10 | 0 |

| | | | | |
|---|---|---|---|---|
| த. வடிவேலு பிள்ளை, போர்ட் எலிசபெத் | ... | 0 | 2 | 6 |
| ஜெ. ரெட்டி, | ... | 0 | 2 | 6 |
| எஸ். எம். டேவிட், ,, | ... | 0 | 2 | 6 |
| வி. எம். பொன்னுசாமி நாயக்கர், ,, | ... | 0 | 5 | 0 |
| வி. எம். நாராயணசாமி பிள்ளை, ,, | ... | 0 | 4 | 0 |
| அ. சிங்காரவேலு முதலியார், ,, | ... | 0 | 3 | 6 |
| கா. சா. பக்கிரி படையாட்சி, கீழையூர் | ... | 0 | 10 | 0 |
| குமாரசாமி முதலியார், திருச்செம்பொன்பள்ளி | ... | 0 | 2 | 6 |
| என். எஸ். நாகப்ப படையாட்சி, போர்ட் எலிசபெத் | ... | 0 | 5 | 0 |
| சா. சபாபதிபிள்ளை, தில்லையாடி | ... | 0 | 10 | 6 |
| பொ. கோவிந்தசாமி பிள்ளை, ,, | ... | 0 | 5 | 0 |
| கோ. இராஜாங்க நாயுடு, தில்லையாடி | ... | 2 | 2 | 0 |
| மு. மாணிக்க வாண்டையார், முப்பேத்தங்குடி | ... | 0 | 2 | 6 |
| வை. ஷண்முக வாண்டையார், தூப்போர்ட் | ... | 1 | 1 | 0 |
| சி. அப்பாவு பிள்ளை, டி ஆர் | ... | 5 | 5 | 0 |
| ஆ. நாராயணசாமி படையாட்சி, நடராஜபிள்ளை சாவடி | ... | 1 | 0 | 0 |
| என். ரங்கசாமி செட்டியார் ,, | ... | 1 | 0 | 0 |
| நாயனு நாயுடு, ,, | ... | 0 | 10 | 0 |
| கோ. வீரராகவ நாயுடு, ,, | ... | 0 | 10 | 0 |
| த. கோவிந்தசாமி படையாட்சி, தாண்டாம்பட்டணம் | ... | 0 | 10 | 0 |
| ப. நாராயணசாமி படையாட்சி, ,, | ... | 0 | 2 | 6 |
| ப. கரும்பாயிர படையாட்சி, கடாத்தலையன் பாளையம் | ... | 0 | 10 | 0 |
| சுப்பராய ஆசாரி, தில்லையாடி | ... | 0 | 10 | 0 |
| வெ. இலக்ஷ்மண மூப்பன், ஆக்கூர் | ... | 1 | 0 | 0 |
| செ. இரத்தினசாமி படையாட்சி, செம்பொனார்கோயில் | ... | 5 | 0 | 0 |
| வே. காத்தபெருமாள் படையாட்சி, சேத்தூர் | ... | 1 | 0 | 0 |
| தி. நாராயணசாமி படையாட்சி, தில்லையாடி | ... | 1 | 1 | 0 |
| வீ. கோவிந்தசாமி படையாட்சி, ஒழுகமங்கலம் | ... | 1 | 10 | 0 |
| சி. நாகமுத்து படையாட்சி, மேலையூர் | ... | 1 | 10 | 0 |
| சி. கோதண்டபாணி நாயுடு, தில்லையாடி | ... | 1 | 1 | 0 |

| | | | | |
|---|---|---|---|---|
| த. கந்தசாமி பிள்ளை, சந்திரபாடி | ... | 1 | 0 | 0 |
| சி. சீனிவாச படையாட்சி, வைத்தீசுவரன்கோயில் | ... | 1 | 0 | 0 |
| வி. சாமிபிள்ளை, கிம்பர்லி | ... | 1 | 0 | 0 |
| எம். சாமிபிள்ளை ,, | ... | 1 | 0 | 0 |
| வே. வெங்கட்டராம நாயுடு, ,, | ... | 1 | 1 | 0 |
| நா. அய்யலு நாயுடு, தில்லையாடி | ... | 1 | 1 | 3 |
| கோ. வேணுகோபால் நாயடு, சேத்தூர் | ... | 0 | 10 | 0 |
| சொ. உருத்திராபதி முதலியார், நாங்கூர் | ... | 0 | 5 | 0 |
| வை. இரத்தினசாமி படையாட்சி, தில்லையாடி | ... | 0 | 2 | 6 |
| ஹரி. கண்பத், கிம்பர்லி | ... | 0 | 2 | 6 |
| சி. நடேச படையாட்சி | ... | 0 | 1 | 0 |
| ரா. சுப்பிரமணிய படையாட்சி, கிம்பர்லி | ... | 0 | 10 | 0 |
| நா. மாரிமுத்துப் பிள்ளை, தில்லையாடி | ... | 0 | 2 | 6 |
| சொ. கோவிந்தசாமி படையாட்சி | ... | 0 | 2 | 0 |
| வை. குமாரசாமி படையாட்சி, இராதாநல்லூர் | ... | 0 | 2 | 0 |
| மா. சுப்பிரமணிய படையாட்சி | ... | 0 | 2 | 0 |
| சொ. நடராஜ படையாட்சி, பாலூர் | ... | 0 | 10 | 0 |
| ரெ. கோவிந்தசாமி பிள்ளை | ... | 0 | 5 | 0 |
| ஆ. முனிசாமி பிள்ளை | ... | 0 | 2 | 6 |
| வே. கணபதி படையாட்சி | ... | 0 | 2 | 6 |
| பெ. நடேசபிள்ளை | ... | 0 | 2 | 6 |
| ந. பக்கிரிசாமி பிள்ளை | ... | 0 | 5 | 0 |
| வி. கனகசபை படையாட்சி, தொடரிபட்டு | ... | 0 | 2 | 6 |
| ஆ. கோவிந்தசாமி படையாட்சி, நயனிபுரம் | ... | 0 | 5 | 0 |
| ஆ. ரெங்கசாமி படையாட்சி, காழியப்ப நல்லூர் | ... | 0 | 10 | 0 |
| வ. நடேச ஆசாரி, உத்தரங்குடி | ... | 0 | 5 | 0 |
| நா. சொக்கலிங்கம் பிள்ளை, நீடூர் | ... | 0 | 2 | 6 |
| செ. வைத்தியலிங்க படையாட்சி, புளியந்துறை | ... | 0 | 2 | 6 |
| ப. ரெங்கசாமி படையாட்சி, திருவெண்காடு | ... | 0 | 5 | 0 |
| முத்துகுமாரசாமி படையாட்சி, சேத்தூர் | ... | 0 | 10 | 0 |
| இ. கிருஷ்ணசாமி படையாட்சி, வைத்தீசுவரன் கோயில் | ... | 0 | 5 | 0 |
| எஸ். கோவிந்தசாமி நாயடு, கிம்பர்லி | ... | 0 | 10 | 0 |
| நா. வீராசாமி படையாட்சி, நயனிபுரம் | ... | 0 | 7 | 6 |

| | | | | |
|---|---|---|---|---|
| | ... | 0 | 5 | 0 |
| க. பக்கிரி முதலியார், சீர்காழி | ... | 0 | 5 | 0 |
| ச. வீரப்பிள்ளை, பத்தம் | | | | |
| வீ. சிவக்கொழுந்து படையாட்சி, | ... | 0 | 2 | 6 |
| அன்னப்பன்பேட்டை | ... | 0 | 5 | 0 |
| சு. கிருஷ்ணசாமி முதலியார், திருமருகல் | ... | 0 | 5 | 0 |
| வி. கலிய முதலியார், செபொனூர் கோயில் | ... | 0 | 5 | 0 |
| சு. கோவிந்தசாமி முதலியார், மேலப்பாதி | | | | |
| நா. சொக்கலிங்க முதலியார், | ... | 0 | 3 | 0 |
| திருச்செம்பொன்பள்ளி | ... | 0 | 2 | 6 |
| ச. சரவண முதலியார், ,, | ... | 0 | 1 | 0 |
| ச. கந்தசாமி படையாட்சி, தில்லையாடி | ... | 0 | 2 | 6 |
| பொன்னுசாமி படையாட்சி, கிம்பர்லி | ... | 0 | 2 | 6 |
| சு. மாரிமுத்து படையாட்சி, ,, | ... | 0 | 11 | 0 |
| க. வைத்தியலிங்க படையாட்சி, மேலேச்சாலை | ... | 0 | 1 | 0 |
| ம. முத்துசாமி படையாட்சி, கிம்பர்லி | ... | 0 | 2 | 0 |
| நா. இராமசாமி செட்டியார், தரங்கம்பாடி | ... | 0 | 2 | 0 |
| மலைப்பெருமாள் பத்தர், தில்லையாடி | ... | 0 | 2 | 0 |
| சா. ஆதிமூல படையாட்சி, கிம்பர்லி | ... | 0 | 2 | 0 |
| எச். கே. நாயடு, ,, | ... | 2 | 13 | 4 |
| க. வெங்கடாசல ராஜு, சீர்காழி | ... | 0 | 1 | 0 |
| க. பக்கிரி படையாட்சி, | ... | 0 | 1 | 0 |
| ந. பெருமாள்பிள்ளை, வாழ்க்கை | ... | 0 | 1 | 0 |
| க. சின்னத்தம்பி பிள்ளை, நல்லாடை | ... | 0 | 1 | 0 |
| கொ. பக்கிரி முதலியார், மேலப்பாதை | ... | 0 | 1 | 0 |
| எஸ். கே. சொக்கலிங்க பண்டிதன், பிறையார் | ... | 1 | 0 | 0 |
| கே. சுப்பிரமணிய முதலியார், | | | | |
| திருமலைராஜன்பட்டணம் | ... | 0 | 10 | 0 |
| பி. எல். செட்டி, சாத்தங்குடி | ... | 0 | 2 | 6 |
| குமரப்பிள்ளை, ,, | ... | 0 | 5 | 0 |
| சி. இரகுநாத படையாச்சி, மாயவரம் | ... | 1 | 10 | 0 |
| த. வேதியப் பிள்ளை, தில்லையாடி | ... | 6 | 14 | 0 |
| ஆக மொத்தம் | ... ப. | 73 | 14 | 1 |

பிரம்பூர், சென்னை. பிங்கள ௵.
சித்திரை ௴ 17 ௳.

வ. உ. சிதம்பரம் பிள்ளை.

K. R. Press, Madras.

## தொல்காப்பியம்

தமிழ்மொழிக்குத் தலையாக விளங்கும் ஒப்புயர்வற்ற ஓர் இலக்கணம் தொல்காப்பியம். தொல்காப்பியம் எழுத்ததிகாரத்திற்கும், பொருளதிகாரத்தின் அகத்திணை, புறத்திணை ஆகிய இரு இயல்களுக்கு உரிய இளம்பூரணர் உரையினைப் புதுப்பித்து *1918* இல் வ.உ.சி தமிழ் உலகில் பரவச் செய்தார்.

## 1920

தொல்காப்பியத்தின் எழுத்ததிகாரத்தையும், பொருளதிகாரத்தையும் *1920* இல் அச்சிடத் துவங்கினார் வ.உ.சி.

## 1.6.1928

கோவில்பட்டியில் *1928* இல் வாழ்ந்துவந்த வ.உ.சி. *1.6.1928* இல் தொல்காப்பியம் இளம்பூரணார் உரையோடு எழுத்ததிகாரத்தை வெளியிட்டார்.

## 1936

தூத்துக்குடி விக்டோரியா பிரிண்டிங் பிரஸில் *1928* இல் அச்சிடப்பட்டு வெளியான தொல்காப்பியம் எழுத்ததிகாரம் இளம்பூரனார் உரை *1936* இலும், மறுபதிப்பு கண்டது எழுத்ததிகாரம். பதவுரை *1941* இல் மறுபதிப்பு கண்டது.

## வாவின்ள இராமஸ்வாமி சாஸ்துருலு

தொல்காப்பியம் இளம்பூரணம் பொருளதிகாரத்தில் களவியல், கற்பியல், பொருளியல் ஆகியவற்றை *1933* இல் பதிப்பித்து மகிழ்ந்தவர் வ.உ.சி.

*292*, எஸ்பிளனேட், சென்னை முகவரியில் இயங்கிவந்த வாவிள்ள இராமஸ்வாமி சாஸ்துருலு அன்டு சன்ஸ் நிறுவனத்தார் அதனை அப்போது வெளியிட்டனர்.

## த.மு. சொர்ணம்பிள்ளை - தி.க. கனகசுந்தரம் பிள்ளை

அந்த நூலில் பதிப்புரையில் வ.உ.சி., த.மு. சொர்ணம்பிள்ளை, தி.க. கனகசுந்தரம் பிள்ளை ஆகியோர்

வைத்திருந்த தொல்காப்பியப் பிரதிகளை சரிபார்த்ததாகச் சொல்லியுள்ளார்.

## தி.நா. சுப்பிரமணிய ஐயர் - எஸ். வையாபுரிப்பிள்ளை

தி. நா. சுப்பிரமணிய ஐயர், எஸ். வைபுரியாப் பிள்ளை இவர்களிடமிருந்த தொல்காப்பியப் பிரதிகளையும் வ.உ.சி. வாங்கி ஆராய்ந்துள்ளார்.

## 1935

தொல்காப்பியம், இளம்பூரணம், பொருளதிகாரம், மெய்ப்பாட்டியல், உவமையியல், செய்யுளியல், மரபியல் ஆகியவைகள் *1935* இல் வாவிள்ள இராமஸ்வாமி சாஸ்துருலு அண்டு சன்ஸ் நிறுவனத்தார் வெளியிட்டனர். அதன் முதல் பக்கம்;


தொல்காப்பியம்
இளம்பூரணம்

பொருளதிகாரம்
மெய்ப்பாட்டியல், உவமையியல்,
செய்யுளியல், மரபியல்

பதிப்பாசிரியன்:
வ. உ. சிதம்பரம்பிள்ளை

பிரசுரித்தவர்கள்:
வாவிள்ள இராமஸ்வாமிசாஸ்த்ருலு அண்ட் ஸன்ஸ்
சென்னை.
1935

30

## அப்போது பிரசுரிப்போர் தந்த மதிப்புரை

லோகமான்ய பாலகங்காதர திலகரவர்கள் என்னை ஸ்ரீமான் வ.உ.சிதம்பரம் பிள்ளையவர்களுக்கு அறிமுகம் செய்து வைத்தபோதுதான் யான் முதன் முதலாக பிள்ளையவர்களைக் கண்டு களிப்புற்றேன்.

ஸ்ரீமான் பிள்ளையவர்கள் தமது நீண்டகாலச் சிறைவாசத்திற்குப்பின் (மகாத்மாகாந்தியவர்கள் இராஜிய விஷயங்களில் தலைமை பூண்ட நாள் தொடங்கி) அவ்விஷயங்களினின்று விலகித் தாம் முன் வக்கீல் வேலைபார்த்துக் கொண்டிருந்த காலத்திலும், இராஜியத் துறையில் வேலை செய்துகொண்டிருந்த காலத்திலும், தமது கவனத்தைக் கவர்ந்துகொண்டிருந்த தொன்மைத் தமிழ் நூல்களை ஊக்கத்தோடு ஆராய்ச்சி செய்து கொண்டு வந்தார். இத்துறையில் பிள்ளையவர்கள் சென்ற சுமார் முப்பது வருடங்கள் உழைத்ததன் பயனாகும் இந்நூலின் வெளிவரவு. தொன்மையானதென்றும் தலைமையான தென்றும் யாவராலும் ஒப்புக்கொள்ளப்பட்டதாகும்.

தமிழ்நாட்டிலும் அதற்கு அப்பாலும் பெரும் புகழ்பெற்றதுமான தொல்காப்பியத்திற்கு இளம்பூரனார் இயற்றிய உரையைப்பிள்ளையவர்கள் ஆராய்ச்சி செய்து, ஏடுபெயர்த்து எழுதியோர்களால் நேர்ந்த பிழைகளைக் களைந்து சீர்திருத்தம் செய்தார்கள். தொல்காப்பியத்தின் காலத்தைப் பற்றிச் சென்ற சில வருடங்களாகத் தமிழ்ப்பண்டிதர்களுள் அபிப்பிராய பேதம் ஏற்பட்டிருக்கிறது; ஆனாலும், அந்நூல் கிறிஸ்து பிறந்ததற்கு முந்நூறு வருடங்களுக்கு முற்பட்டதென்பதில் ஐயமேயில்லை.

இத்தகைய நூலைஅச்சிட்டுப் பிரசுரிக்கும் படியாக ஸ்ரீமான் பிள்ளையவர்கள் என்னைக் கேட்டுக்கொண்டபோது நான் உவகையுடன் உடனே ஒப்புக்கொண்டேன். தமிழ்லெக்ஸிக்கன் ஆசிரியர் ஸ்ரீமான் எஸ். வையாபுரிபிள்ளை உதவியும் ஒத்துழைப்பும் இந்நூலை எளிதில் வெளிவரச் செய்தன. அவர்கள் மிகக் கவனத்தோடும், ஊக்கத்தோடும் இப்பதிப்பினைப் பரிசோதித்திருக்கிறார்கள். அவர்களைப் போன்ற ஒரு பெருங்கல்வியாளருடைய உதவி இவ்வளவினதென்று

அளவிடற்பால தன்று. இந்நூல் இவ்வுலகின்கண் இனிது நிலவுவதாக!

**வா. வெங்கடேஸ்வரசாஸ்த்ருலு,**
**வா. இராமஸ்வாமி சாஸ்த்ருலு அண்டு சன்ஸ்**
தண்டையார்ப்பேட்டை, சென்னை.
8-7-1935

## வ.உ.சி. தந்த பதிப்புரை

தொல்காப்பியம் இவ்வேழு இயல்களுக்கும் பெயரளவில் பதிப்பாசிரியன் யான்; உண்மையிற் பதிப்பாசிரியர் திரு. வையாபுரிப் பிள்ளையவர்களே, அவர்கள் செய்த நன்றி என்னால் என்றும் உள்ளற்பாலது.

## ஸ்ரீ.எம்.வி.துரைசாமி அய்யர் - ஸ்ரீ.ரா.ராகவையங்கார்

யான் அனுப்பிய ஏட்டுப்பிரதியும் கடிதப்பிரதிகளுந் தவிர, வேறு சில ஏட்டுப் பிரதிகளும் இப்பதிப்பிற்கு உபகாரப்பட்டன. செய்யுளியற் பிரதியொன்றும், மரபியற் பிரதிபெயான்றும் இப்பொழுது அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தில் தமிழாராய்ச்சி செய்துவரும் ஸேதுஸம்ஸ்தான மகாவித்துவான் ஸ்ரீ.ரா. ராகவையங்காரவர்கள் மிக்க அன்புடன் உதவினார்கள். செய்யுற் கடிதப் பிரதியொன்று மயிலாப்பூர். பி. எஸ். ஹைஸ்கூல் தமிழ்ப்பண்டிதர் ஸ்ரீ. எம். வி. துரைசாமி ஐயர் அவர்கள் அன்புகூர்ந்து கொடுத்தார்கள். இவ்விருவருக்கும் எனது மனப்பூர்வமான நன்றியுரியதாகின்றது.

## ஸ்ரீ.மு.ராகவையங்கார் -

இடையிடையே ஒரு சில பாரங்கள் தமிழ்லெக்ஸிகன் ஆபீஸ் தலைமைத் தமிழ்ப் பண்டிதர் ஸ்ரீ.மு. ராகவ ஐயங்கார் அவர்களாலும், ஸ்ரீதுரைசாமி ஐயர் அவர்களாலும் பார்வையிடப்பட்டன. இங்ஙனம் உதவிய நண்பர்களுக்கு எனது நன்றியைச் செலுத்துவதல்லது யான் யாது கைம்மாறு செய்யவல்லேன்!

## வாவிள்ள வெங்கடேஸ்வர சாஸ்துருலு

மேற்குறித்த ஏழு இயல்களையும் தமது செலவில் அச்சிட்டு வெளிப்படுத்த வேண்டுமென்று ஸ்ரீ. இராமசுவாமி

சாஸ்துருலு அண்டு சன்ஸ் சொந்தக்காரரரான எனது நண்பர் ஸ்ரீமான். வாவிள்ள வெங்கடேஸ்வர சாஸ்துருலு அவர்களுக்கு எழுதினேன். அவ் வேண்டுகோளுக்கு இணங்கி ஏழு இயல்களையும் அச்சிட்டுப் பிரசுரித்துத் தந்த எனது நண்பர் சாஸ்திரியார் அவர்களின் உதவி என்னால் என்றும் நினைக்கற் பாலது. எல்லாம் வல்ல இறைவன் துணைபுரிக.

வ. உ. சிதம்பரம்பிள்ளை,
பதிப்பாசிரியன்.

*15–1–1936,*
தூத்துக்குடி.

## இன்னிலை

பதினென் கீழ்க்கணக்கு நூல்களில் ஒன்றாகக் கருதப்படும் 'இன்னிலை'யை வ.உ.சி விருத்தியுரையுடன் 1917 இல் வெளியிட்டார்.

## இரண்டாம் பதிப்பு

3.6.1929 இல் கோவில்ப்பட்டியில் வ.உ.சி வாழ்ந்தபோது இன்னிலையின் இரண்டாம் பதிப்பை வெளியிட்டார்.

## தில்லையாடி த.வேதியப்பபிள்ளை

தில்லையாடி த.வேதியப்பபிள்ளையால் இவ்விரண்டாம் பதிப்பு பதிப்பாக்கம் பெற்றது.

## அம்பாசமுத்திரம் அகஸ்தியர் அச்சுக்கூடம்

அம்பாசமுத்திரம் அகஸ்தியர் அச்சுக்கூடத்தில் விபவ வருஷத்தில் 1929 இல் இந்த நூல் அச்சாகி 112 பக்கங்களில் வெளிவந்தது. இரண்டாம் பதிப்பிற்கு வ.உ.சி எழுதிய பதிப்புரை இதோ.

## இன்னிலை

இரண்டாம் பதிப்புரை.

இந் நூலின் முதற்பதிப்பு வெளியாகி ஒரு சில மாதங்களுள் அப்பதிப்பின் ஆயிரம் பிரதிகளும் செல்வாகிவிட்டன. உடனே இந்நூலை இரண்டாம் முறை பதிப்பித்தற்காகச்

சென்னை சூளையிலிருந்த ஓர் அச்சியந்திரசாலை அதிபரிடம் கொடுத்தேன். அவர் இந்நூலின் ஒரு பகுதியை அச்சிட்டனர். அந்த அளவில் யான் கோயமுத்தூர் தொழிலாளர் பாங்கு ஸ்டோர்ஸ்'' மானேஜராகச் சென்றேன். அவ்வச்சியந்திரசாலை அதிபரும் சூளையை விட்டு வேறு இடத்திற்கும் தமது அச்சியந்தரத்துடன் சென்றனர். இருவர் இடமாற்றத்தாலும், என் வேலை மிகுதியாலும், அதுவரையில் அச்சாகியிருந்த ஒரு பகுதியளவில் இந்நூல் நின்று போயிற்று.

ஒன்றிரண்டு ஆண்டு கழித்து அவ்வச்சியந்திரசாலை அதிபரிடமிருந்து அவ்வச்சான ஒரு பகுதியைவாங்கி, அச்சாகாத பகுதியையும் அச்சிட்டு இந்நூலை வெளிப்படுத்த முயன்றேன். இரண்டு முறை சென்னை சென்று அவ்வச்சியந்திரசாலை அதிபரைத் தேடினேன். அவரை யான் காண முடியவில்லை. இவ்வாறாகப் பலஆண்டுகள் கழிந்துபோயின. இன்று தான் இந்நூலின் இவ்விரண்டாம் பதிப்பு வெளிவரும் பாக்கியம் பெற்றது. எல்லாம் இறைவன் அருளேயாம்.

இப்பதிப்பு முந்தின பதிப்பின் சரியான பிரதியேயாகும். முந்தின பதிப்பினை ஏற்றது போலவே இப்பதிப்பையும் ஏற்றருளும்படியாகத் தமிழ்மக்களைத் தாழ்ந்து வணங்கிக் கேட்டுக்கொள்கின்றேன்.

வஉசிதம்பரம்பிள்ளை,

கோவிற்பட்டி
*3–6–29*

## பெத்தாச்சி செட்டியார்

இன்னிலை நூலின் இரண்டாம் பதிப்பினை சைவம் வளர்த்துத் தருமம் புரியும் பெத்தாச்சிச் செட்டிப் பெரியார்க் குவப்புடன் இன்னிலையுரிமையாக்கினனே என்று வ.உ.சி குறிப்பிட்டுள்ளார்.

முதற்பதிப்பு வெளியானபோது பிரம்பூரில் வ.உ.சி வாழ்ந்து வந்தார். அப்போது எழுதிய முன்னுரையில் குறிப்பிட்டுள்ளதாவது.

## த. சொர்ணம்பிள்ளை

இவ்வேட்டுப் பிரதியை எனக்கு அளித்தவர்கள் திருநெல்வேலி ஹிந்துக்கல்லூரித் தமிழ்ப் பண்டிதர் ஸ்ரீமான் த.மு. சொர்ணம் பிள்ளையவர்கள்.

## அ.மீ.மலையையாப்பிள்ளை

இவர்களுக்கு இவ்வேட்டுப் பிரதியை வேறு பல தொன்னூல் ஏட்டுப் பிரதிகளோடு சேர்த்தளித்தவர்கள் திருமேனிக் கவிராயரவர்கள். சந்ததியார்களுக்குத் தலைவராகவும், எனக்கு உறவினராகவும், நண்பராகவும், திருநெல்வேலி ஜில்லா தாலூகா போர்டு மெம்பராகவும் நின்று விளங்கிய ம. ஸ்ரீ. அ. மீ. மலையையாப் பிள்ளையவர்கள். இது காறும் இந்நூலின் பெயரும், இந்நூல் கீழ்க்கணக்குப் பதினெட்டில் ஒன்றென்பதும் தெரியா திருந்த நம் தமிழ்நாட்டார்க்கு இந்நூலை அளிப்பதற்குக் காரண கர்த்தாக்களாயிருந்த இவ்விருவர்களுக்கும் தமிழுலகம் நன்றி பாராட்டக் கடன்பட்டுள்ளது என்று வ.உ.சி. குறிப்பிட்டுள்ளார்.

## வ.உ.சி இன்னிலை நூலுக்கு உரைப் பாயிரம் தந்தவர்கள்

சென்னைப் பச்சையப்பன் கல்லூரி சுதேசபாஷா அத்தியட்சகர் ஸ்ரீமான் தி.செல்வகேசவராய முதலியார் எம்.ஏ. அவர்களோடு ஆய்வு செய்து இன்னிலை வெளியிட்டதாக வ.உ.சி. குறிப்பிட்டுள்ளார்.

## த.கனகசுந்தரம் பிள்ளை

அவ்வாறே, அதனைச் சென்னைக் கிறிஸ்டியன் கல்லூரி சுதேசபாஷா அத்தியட்சகர் ஸ்ரீமான். த.கனகசுந்தரம் பிள்ளை (பி. ஏ.) அவர்களிடம் காட்டினேன். அவர்கள் அதனைமிக்க அன்போடு ஏற்று, முழுக்கவனத்தோடு பார்த்து, பல சீர்திருத்தங்கள் செய்து தந்தார்கள்.

## உ.வே. சாமிநாத ஐயர்

**பின்னர், அதனை மஹாமஹோபாத்தியாயர் ம–ள–ள ஸ்ரீவே சாமிநாதையர் அவர்களிடம் காட்டினேன். அவர்கள் அதனைப் பார்த்து அதனில் யாதொன்றும் செய்யாமல்**

**எனக்கு அனுப்பி விட்டார்கள்.** உடனே, அதனை அச்சிற்குக் கொடுத்தேன். அஃது அச்சாகி வரவர, ஸ்ரீமான் முதலியாரவர்களும் ஸ்ரீமான் பிள்ளையவர்களும் பலமுறைப் பார்த்துப் பலவாறு சீர்திருத்திப் பலவகையாக அழகுபடுத்தித் தந்தார்கள். அவர்கள் செய்த அவ்வரிய உதவிகளால் இந்நூல் ஓர் உரையோடு வெளிவருகின்றது. அவர்கள் உதவிக்கு யான் செய்யத்தக்கது, கைம்மாறு வேண்டா கடப்பாடு மாரிமாட், டென்னாற்றுங் கொல்லோவுலகு" என்னும் பொய்யா மொழியார் வாக்கின் மெய்யைக் காட்டுகலேயாம் என்று வ.உ.சி. குறிப்பிட்டுள்ளார்.

அதன் முகப்பு பக்கம் இதோ


திரு
பொய்கையார்
இன்னிலை
ஸ்ரீமான்
வ. உ. சிதம்பரம் பிள்ளையவர்கள்
விருத்தி யுரையுடன்
இரண்டாம் பதிப்பு.
தில்லையாடி
த. வேதியப் பிள்ளையால்
பதிப்பிக்கப் பெற்றது.
அம்பாசமுத்திரம்,
அகஸ்தியர் அச்சுக்கூடம்
1930

## திருநெல்வேலி ராமா லாபுக் பைண்டிங்

திருநெல்வேலி ராமா லாபுக் பைண்டிங் நிறுவனத்தாரால் தயாரிக்கப்பட்டு கலிக்கோ பைண்டுடன் வெளிவந்த வ.உ.சி.யின் இன்னிலை இரண்டாம் பதிப்பில் வ.உ.சி தனது நூல்கள் குறித்து அறிவிப்பைச் செய்துள்ளார்.


எனது நூல்களும் பிரசுரங்களும்.

| | | | |
|---|---|---|---|
| மனம்போல வாழ்வு. | மூன்றாம் பதிப்பு. | விலை அணா | 8. |
| அகமே புறம். | மூன்றாம் பதிப்பு. | விலை அணா | 8. |
| வலிமைக்கு மார்க்கம் | இரண்டாம் பதிப்பு. | விலை அணா | 12. |
| மெய்யறிவு. | மூலமும் உரையும். | விலை அணா | 12. |
| மெய்யறம். | அரும்பதவுரையுடன். | விலை அணா | 8. |
| எனது பாடற்றிரட்டு. | இரண்டாம் பதிப்பு. | விலை அணா | 12. |
| வள்ளியம்மை சரித்திரம். | அரும்பதவுரையுடன். | விலை ,, | 3. |
| இன்னிலை. | மூலமும் உரையும். | விலை ரூ. | 1. |
| திருக்குறள். மணக்குடவருரை. | அறத்துப்பால். | விலை ரூ. | 1 |
| தொல்காப்பியம். இளம்பூரணம். | எழுத்ததிகாரம். | விலை ரூ. | 1. |
| ஷை பொருளதிகாரம். | அகப்புறத்திணைகள். | விலை ரூ. | 1. |
| சேலம் மகாநாட்டில் எனது பிரசங்கம். | | விலை அணா | 8. |

கோவில்பட்டி, S. I. R. }
திருநெல்வேலி ஜில்லா. }
வ. உ. சிதம்பரம்பிள்ளை,
வக்கீல்.

BOUND AT RAMA LAW BOOK-BINDING WORKS.
SWAMI SANNADI ST. TINNEVELLY TOWN.

இது வ.உ.சி. கோவில்பட்டியில் வாழ்ந்ததற்கான சான்றாகும்.



வ.உ.சி. கோவைச் சிறையில் கைதி எண் 1541

## தேசாபிமானி வ.உ.சிதம்பரம்பிள்ளையைப் பற்றிய பாடற்றிரட்டு

*1935 இல் தூத்துக்குடியில் இருந்து தேசாபிமானி வ.உ.சிதம்பரம் பிள்ளைப் பற்றிய பாடற்றிரட்டு நூல் 40 பக்கங்களில் அச்சானது.*

## பி.வேலாயுதம் பிள்ளை

*சேதுத்தெரு ஸ்கூல் மேனேஜர் தூத்துக்குடி பி.வேலாயுதம்பிள்ளை 29.9.1935 இல் அந்த நூலை வெளியிட்டார். (அதனை அடியேன் மறுபதிப்பு செய்து இலவசமாக வழங்கினேன்)*

## வ.உ.சி புகழ்பாடிய பெருமக்கள்

மதுரை தமிழ்ச் சங்க வித்வான்
மு.ரா.கந்தசாமிக்கவிராயர்
பாளையங்கோட்டை வ.சண்முகம்பிள்ளை
சேற்றூர் சமஸ்தான வித்வான் இராமசுவாமிக் கவிராயர்
தமிழ்பண்டிதர் கந்தசாமி அய்யர்
மதுரை தமிழ்ச்சங்க வித்வான் சே.ரா.சுப்பிரமணியக் கவிராயர்
ஸ்ரீவைகுண்டம் ஆறுமுக தேசிகர்
ஆழ்வார்திருநகரி பெரியதிருவடிக் கவிராயர்
சேற்றூர் சமஸ்தான வித்வான் மு.ரா.அருணாசலக் கவிராயர்
தெய்வநாயகப் புலவர்
சகஜானந்த சுவாமிகள்
எட்டயபுரம் சங்கீத வித்வான் சு.முத்துசுவாமிப் பிள்ளை
ஆழ்வார் திருநகரி பென்ஷன் ரெவின்யூ இன்ஸ்பெக்டர் அனந்தபத்மநாப பிள்ளை
சவரிமங்கலம் வித்வான் சிதம்பரவேலுப் பிள்ளை
லால்பேட்டை நா.குப்புசாமிப்பிள்ளை
திருநெல்வேலி இந்துக் கல்லூரி தமிழ்ப்பண்டிதர் த.மு. சொர்ணம் பிள்ளை
நாகை நீலலோசனிப் பத்திராதிபர் சதாசிவம் பிள்ளை
திருவாரூர் திருவள்ளுவர் மடாலயம் வைத்தியநாதசுவாமி ஸ்தபதி
மலாக்கா ஜேசின் நெ.வை.செல்லையா

**சேலம் ஜில்லா ஓமலூர் வே.செ. உயர்தரக் கலாசாலை ஆசிரியர் வே.வீரராகவையங்கார் ஆகியோர் அந்த நூலில் வ.உ.சியின் புகழ்பாடி பாராட்டை வழங்கியுள்ளார்கள்.**

## சு.நல்லசிவன் பிள்ளை

*மதுரை தமிழ்ச்சங்க கலாசாலை ஆசிரியர் சு.நல்லசிவன் பிள்ளை அவர்கள் பாடல்களுக்கு அரும்பதவுரை தந்துள்ளார்.*

## தூத்துக்குடி தெற்குரதவீதி

தூத்துக்குடி தெற்குரதவீதியில் வ.உ.சி. குடியிருந்தார். அதற்குரிய விளம்பரம் இதோ;



திரு. வ. உ. சிதம்பரம் பிள்ளை நூல்கள்.

| பெயர் | விலை |
| --- | --- |
| மனம் போல வாழ்வு. | ரூ. 0 6 0 |
| அகமே புறம். | 0 6 0 |
| வலிமைக்கு மார்க்கம். | 0 8 0 |
| சாந்திக்கு மார்க்கம். | 0 8 0 |
| மெய்யறிவு-மூலமும் உரையும். | 0 8 0 |
| மெய்யறம்-அரும்பத உரையுடன். | 0 6 0 |
| இன்னிலை-மூலமும் உரையும். | 0 12 0 |
| தொல்காப்பியம்—இளம்பூரணம் எழுத்ததிகாரம் | 1 4 0 |
| பொருளதிகாரம்-அகத்திணையியல்,புறத்திணையியல் | 1 0 0 |
| ஷை களவியல்,கற்பியல்,பொருளியல். | [illegible] |
| ஷை மற்றை இயல்கள் | 2 0 0 |
| திருவள்ளுவர் திருக்குறள்-வ. உ. சிதம்பரம் பிள்ளை உரையுடன் — அறப்பால். | 1 0 [illegible] |
| சிவஞானபோதம்-வ. உ. சிதம்பரம் பிள்ளையவர்கள் உரையுடன் | 0 [illegible] 0 |
| வ. உ. சிதம்பரம் பிள்ளையவர்களைப்பற்றிய பாடற்றிரட்டு | 0 4 [illegible] |

இவை தூத்துக்குடி தெற்கு ரதவீதியிலிருக்கு ...ங்கில் வ. உ. சிதம்பரம் பிள்ளையவர்களிடம் கிடை...

V. P. Press, Tuticorin.

இது வ.உ.சி. வாழ்வின் இறுதியில் தூத்துக்குடியில் வாழ்ந்ததற்குச் சான்றாகும்.

## தூத்துக்குடி வி.பி. பிரஸ்

தூத்துக்குடி வி.பி. பிரஸில் அச்சிடப்பட்ட நூலின் கடைசிப் பக்கத்தில் வெளிவந்த வ.உ.சி. நூல்கள் பற்றிய விவரம் இதோ;

## எனது அரசியல் பெருஞ்சொல்

சேலம் ஜில்லா மூன்றாவது அரசியல் மகாநாட்டின் தலைவராக யான் படித்த உபந்நியாசம் (உரை) சுய அரசாட்சி இன்னது எனவும், அதனை நாம் அடைவதற்குரிய வழிகள் இன்னவை எனவும் இதில் மிகத் தெளிவாகக் கூறப்பட்டுள்ளது.

எனது நூல்களும் பிரசுரங்களும்.

| நூல். | ரூ. | அ. | பை. |
|---|---|---|---|
| மனம் போல வாழ்வு—நான்காம் பதிப்பு | 0 | 8 | 0 |
| அகமே புறம்—மூன்றாம் பதிப்பு ... | 0 | 8 | 0 |
| வலிமைக்கு மார்க்கம்—இரண்டாம் பதிப்பு ... | 0 | 12 | 0 |
| சாந்திக்கு மார்க்கம்—முதற் பதிப்பு ... | 0 | 12 | 0 |
| மெய்யறிவு—மூலமும் உரையும் ... | 0 | 12 | 0 |
| மெய்யறம்—அரும் பத வுரையுடன் ... | 0 | 8 | 0 |
| எனது பாடற் றிரட்டு ... | 0 | 12 | 0 |
| வள்ளியம்மை சரித்திரம்—அரும் பத வுரையுடன் ... | 0 | 8 | 0 |
| இன்னிலை—மூலமும் உரையும்—இரண்டாம் பதிப்பு ... | 1 | 0 | 0 |
| திருக் குறள்—மணக்குடவருரை—அறத்துப்பால் ... | 1 | 0 | 0 |
| தொல்காப்பியம்—இளம்பூரணம்—எழுத்ததிகாரம் ... | 1 | 3 | 0 |
| ஷை ஷை பொருளதிகாரம்—அகப் புறத் திணைகள் ... | 1 | 0 | 0 |
| ஷை. ஷை. களவியல், கற்பியல், பொருளியல் ... | 1 | 12 | 0 |
| திருக் குறள்—எனது உரையுடன்—அறப்பால் ... | 1 | 0 | 0 |
| ஷை. ஷை. பொருட்பால் (அச்சில்) ... | 1 | 0 | 0 |
| எனது அரசியல் சொற் பொழிவு ... | 0 | 8 | 0 |

தூத்துக்குடி,
திருநெல்வேலி ஜில்லா.

வ. உ. சிதம்பரம் பிள்ளை
வக்கீல்.

வேலாயுதம் பிரிண்டிங் பிரஸ், தூத்துக்குடி.

> எனது அரசியல் பெருஞ்சொல்:- சேலம் ஜில்லா மூன்றாவது அரசியல் மகாநாட்டின் தலைவனாக யான் படித்த உபந்யாசம். சுய அரசாட்சி இன்னது எனவும் அதனை நாம் அடைவதற்குரிய வழிகள் இன்னவை எனவும் இதில் மிகத் தெளிவாகக் கூறப்பட்டுள்ளன. இதன் விலை அணா 8.

விலை அணா 8 என்று வ.உ.சி குறிப்பிட்டுள்ளார். இதே அது முதலில் எனது அரசியல் சொற்பொழிவு என்று விளம்பரம் செய்த வ.உ.சி பின்னர் எனது அரசியல் பெருஞ்சொல் என்று மாற்றியுள்ளார்.

(இந்த நூலை தமிழகத்தில் முதன்முதலில் மறுபதிப்புச் செய்தது அடியேன் தான். இப்போது எளியேன் பெயரை குறிப்பிடாமலே எத்தனையோ பேர்கள் அதனைப் பதிப்பித்து வருகிறார்கள்; வாழ்த்துக்கள்)

## திருக்குறள் - அறத்துப்பால்

1935 இல் வ.உ.சி. திருக்குறள் அறத்துப்பாலை உரையுடன் வெளியிட்டார். அந்த நூலில் தெய்வப்புலமைத் திருவள்ளுவ நாயனார் திருக்குறளும் தேசாபிமானி வ.உ.சிதம்பரம்பிள்ளை விருத்தியுரையும் முதற்பாகம் சிறப்புப் பாயிரத்துடன் அறப்பால் 1935 என்று முதற்பக்கம் கூறுகிறது.

## சுதேசியம்

அடுத்த பக்கம் காகிதம், மை, கட்டுநூல் முதலியனவெல்லாம் சுதேசியம் என்று கூறுகிறது.

## சிலுக்கம்பட்டி அ.செ.சு.கந்தசாமி ரெட்டியார், அ.செ.சு. முத்தையா ரெட்டியார்

தூற்றுக்குடியென சாற்றும் பெயரினை மருவி நிற்குந் திருமந்திரநகரில் சீருஞ்சிறப்புஞ் செல்வமிட்டாக்களும் பொன்மனை மாளிகை நன்மனை மக்களும் பெற்றறம் புரிந்து கற்று நன்நூல்கள் சிறந்து விளங்குஞ் சிலுக்கம்பட்டி அ.செ.சு.கந்தசாமி ரெட்டியார், அ.செ.சு. முத்தையா ரெட்டியார் என்னும், மாண்பாரிரண்டு வள்ளல்களுக்கே அவர்கள் முருகன்

அருளால் நமது மக்கள் கெலா நன்மணங்கள் செய்வித்தும் பேரர் பேத்திகள் சீருறப் பெற்றிவார் இன்பந்துய்த்தறமியற்றி நீள்புகழ் பெருக்கி நீடு வாழ்ந்திடவே என்று வ.உ.சி. நூலினை நேரிசையாசிரியப்பா மூலம் சமர்ப்பணம் செய்துள்ளார்.

## திருச்செந்தூரில் அரங்கேற்றம்

வ.உ.சி. தனது திருக்குறள் உரையை 1935 க்கு சில ஆண்டுகளுக்கு முன் திருச்செந்தூர் முருகப்பெருமான் சந்நிதியில் அரங்கேற்றினார்.

## 9.1.1935

9.1.1935 இல் திருக்குறள் அறத்துப்பால் நூலை அச்சிட்டு வெளியிட்டார் வ.உ.சி.

## முன்னுரை

திருக்குறள் நூலுக்கு வ.உ.சி பலருக்கு நன்றி கூறியுள்ளார்.

## க.ரா. இராதாகிருஷ்ணையர்

வ.உ.சியின் நண்பர் மதுர ஆசிரியர் க.ரா.இராதாகிருஷ்ணையர் அவர்களுக்கு நன்றி கூறியுள்ளார்.

## மு.பொன்னம்பலம் பிள்ளை

பிரசங்க ரத்தினம் மு. பொன்னம்பலம் பிள்ளை அவர்களுக்கு நன்றி கூறி உள்ளார். இந்நூல் அச்சிட்டுக் கட்டுதற்கு எனக்குப் பொருள் அளித்தவர்கள் இந்நரின்கண் பல சீர்களும் சிறப்புகளும் பெற்று வாழும் புதுக்கோட்டை மிட்டாதாரும், பெரிய நிலச்சுவான்தாரும், அதிதனவந்தரும், திருநெல்வேலி டிஸ்டிரிக்ட் போர்டு அங்கத்தினரும், திருச்செந்தூர் திரு. சுப்பிரமணிய சுவாமி தேவஸ்தான கௌரவ தர்மகர்த்தாவுமாகிய திரு. அ.செ.சு. கந்தசுவாமி ரெட்டியாரவர்களும், அவர்களுது அவிபக்த அருமை மைத்தனரும் திருநெல்வேலி டிஸ்டிரிக்ட் போர்டு அங்கத்தினரும், தூத்துக்குடி சர்க்கிள் தேவஸ்தானக் கமிட்டி வைஸ்பிரசிடண்டுமாகிய திரு.அ.செ.சு. முத்தையா ரெட்டியாரவர்களுமே.

## அதிர்ஷ்டசாலி

எனது நண்பர்களில் சிலர் என்னைப் பார்த்து நீங்கள் அதிர்ஷ்டசாலிதான்; மகாத்மா காந்திக்கு ஜமன்லால் பஜாஜி கிடைத்ததுபோல உங்களுக்கு ரெட்டியார்கள் கிடைத்திருக்கிறார்கள் என்று சொல்வதுண்டு.

## தேசபக்தி

**"அதற்கு நானும் கடவுள் ஞானத்திலும், தேசபக்தியாலும் பாஷாபிமானத்திலும்** குறைந்தவனல்லவே என்று பதில் சொல்வதுண்டு."

## வாழையடி வாழையென

அவ் இருவள்ளல்களும் இன்னும் பல பெண் மக்களும் ஆண் மக்களும் பெற்றுப் பெருகி "வாழையடி வாழையென" இவ்வுலகின் கண் எஞ்ஞான்றும் இன்பமும் புகழும் எய்தி வாழ்ந்திருக்கும்படியாகவும் அவர்கள் வீட்டு வாயில்கள் நித்திய கல்யாணவாயில்களாய் விளங்கும்படியாகவும் அருள்புரிய வேண்டுமென்று எல்லாம் வல்ல இறைவனை யான் இறைஞ்சு கின்றேன் என்று வ.உ.சி. வாழ்த்துரை வழங்கியுள்ளார்.

## வ.உ.சி.யும் சைவர்களும்

அரசியல் உலகில் அஞ்சா நெஞ்சர் வ.உ.சி.யின் அரும்பணிகளை அறிந்த அளவிற்கு அவரது '. தொண்டினை, சைவ உலகில் இருந்த செல்வாக்கினை முழுமையாக இதுவரை அறியவே இல்லை எனலாம்.

தமிழ் இலக்கிய, இலக்கணப் புலமை பெற்ற படைப்பாசிரியராகவும், உரையாசிரியராகவும் பதிப்பாசிரியராகவும், மொழி பெயர்ப்பாசிரியராகவும் கவிஞராகவும் பணியாற்றித் தமிழ் மொழிக்கும் தொண்டாற்றியிருக்கிறார் வ.உ.சி.

அகிலம் போற்றும் அரசியல் தலைவராகவும், அறிஞர் பெருமகனாராகவும், விடுதலைப் போராட்ட வீரராகவும், புகழ் வாய்ந்த புனிதராகவும் வாழ்ந்திட்ட திருவிளக்கு, தென் தமிழகம் தந்த தவப் புதல்வர் வஉசி . சிவஞான போதத்திற்கு ஓர் உரை எழுதி வெளியிட்டுள்ளார்கள். எழுபது ஆண்டுகளுக்கு முன்

வந்த அந்த உரையினை நண்பர் ஆ. இரா. வெங்கடாசலபதி 1999இல் பதிப்பித்து மகிழ்ந்தார்.

## சைவக் கோலம்

வ.உ.சி. தனது துவக்க காலப் பொது வாழ்வில், சைவத்தோடு இணைந்து செயலாற்றியுள்ளார். வ.உ.சி. சைவக் கோலத்தில் பல அன்பர்களோடு சேர்ந்து எடுத்துக் கொண்ட புகைப்படம் 1972இல் வ.உ.சி. கல்லூரி வெளியிட்ட நூற்றாண்டு விழா மலரில் காண முடிகிறது.

## சைவ சபைகள்

தமிழகமெங்கும் சைவ சபைகள் 25.08.1883இல் தூத்துக்குடியில் 'சைவ சித்தா துவங்கப்பட்டது. 1885இல் திருச்சியில் சைவ சித்தாந்த சபையும், திருவனந்தபுரத்தில் சைவப் பிரகாச சபையும் துவங்கப்பட்டது. பாளையங்கோட்டையில் 1886இல் 'சைவ சபை' ஆரம்பமானது. 21.06.1897 இல் 'சித்தாந்த தீபிகை' எனும் திங்களிதழ் தொடங்கப்பட்டது.

## அறிஞர்கள் குழுமம்

மனோன்மணியம் பெ. சுந்தரம்பிள்ளை, சூளை பே. சோமசுந்தர நாயகர், வெ.ப. சுப்பிரமணிய முதலியார், மறைமலையடிகள், கா.சுப்பிரமணிய பிள்ளை, M.S. பூர்ணலிங்கம்பிள்ளை என ஒரு பெரும் அறிஞர் குழுமம் தமிழகம் தழுவி எழுந்தனர்.

## சைவ சித்தாந்த மகாசமாஜம்

சைவ சபைகளின் ஒருங்கிணைப்பு மையமாகச் சைவ சித்தாந்த மகா சமாஜம்' 07.07.1905 மறைமலையடிகளால். ஞானியார் அடிகள் முன்னிலையில், திருப்பாதிரிப்புலியூரில் நிறுவப்பட்டது. சைவ சித்தாந்த சாத்திரங்கள் உரையோடும், விளக்கத்தோடும், தமிழிலும், ஆங்கில மொழி பெயர்ப்புக்களோடும் வெளிவரத் துவங்கின. சென்னையில் திருவருட் பிரகாச சபையும், மெய்கண்ட சந்தான சபையும், நாகை வெளிப்பாளையத்தில் சித்தாந்த சபையும், தஞ்சையில் சைவ சித்தாந்த சபையும் துவங்கப் பெற்றன.

கி.பி. 1900 இல் ஓட்டப்பிடாரத்திலிருந்து தூத்துக்குடி நகருக்கு வக்கீல் தொழில் புரிய குடிபெயர்ந்த வ.உ.சி. தூத்துக்குடி நகரில் நன்கு செயல்பட்டுக் கொண்டிருந்த சைவ சித்தாந்த சபையுடன் நெருங்கிய உறவினை வைத்துக் கொண்டார்.

## சைவச் சொற்பொழிவுகள்

1904 ஜூன் முதல் 1905 ஆகஸ்டு மாதம் வரையில் தூத்துக்குடி சைவ சித்தாந்த சபையில் எட்டு சொற்பொழிவுகளை" ( அதாவது இரண்டு மாதத்திற்கு ஒரு முறை) வ.உசி. ஆற்றியிருக்கிறார். (தூத்துக்குடி சைவ சித்தாந்த சபையின் 22ஆம் வருட அறிக்கைப் பத்திரமும் நிபந்தனைகளும் 1905, ம.ரா. அரசு குறிப்பு)

## வாழ்த்துப் பாக்கள்

தூத்துக்குடி சைவ சித்தாந்த சபையின் ஆண்டுக் கூட்டங்களில் சிறப்பு அழைப்பாளர்களை வரவேற்று வாழ்த்துப் பாக்களும் பாடியுள்ளார். 1905இல், தூத்துக்குடியில் (திருமந்திரநகர்) சைவ சித்தாந்த சபையின் இருபத்தியிரண்டாவது வருட பூர்த்திக் கொண்டாட்ட மகாசபை அக்கிராசனாதிபதி ஸ்ரீமான் போ. பாண்டித்துரை ஸாமித் தேவரவர்களை வாழ்த்தி வழுத்திய ஆசிரியப்பா வ.உ.சி. பாடியுள்ளார்.

## 29 ஆம் ஆண்டு நிறைவுவிழாவில்

சைவ சித்தாந்த சபை வாழ்க நம்மருமைச்
சைவ சித்தாந்தத்தின் தாய் வாழ்க - வையத்
துயிரெல்லாம் வாழ்க உயர்ந்த சிவம் வாழ்க
பயிரெல்லாம் வாழ்க பனித்து

என்று நிறைவு செய்து, திருமந்திர நகர் சைவ சித்தாந்த சன இருபத்தொன்பதாம் ஆண்டு நிறைவு மகோற்சவ மகாசபையினரது அக்கிராசனாதிபதி ராசனாதிபதியவர்களுடைய வரவு வாழ்த்துப் பாடலை வ.உ.சி. பாடியுள்ளார்.

செ. திவான், வ.உசி. பாடல்கள், பாளையங்கோட்டை, 1999, பக்கம் 32.

## 49ஆம் ஆண்டு நிறைவு விழாவில்

தூத்துக்குடி சைவ சித்தாந்த சபையின் 49-ஆம் ஆண்டு நிறைவு விழாவில் தலைவர் டி.கே. சிதம்பரநாத முதலியாருக்கு வாழ்த்துப்பா வ.உ.சி. பாடியுள்ளார்.

சிவஞான போத உரைக்குத் தொடக்கப் புள்ளியாக அமைந்த வ.உ.சி.யின் முதற் சொற்பொழிவு தூத்துக்குடி சைவ சித்தாந்த சபையிலே தான் நிகழ்த்தப் பெற்றது.

## மறைமலையடிகளுடன் தொடர்பு

இராமசாமி சொக்கநாத வேதாசலம்பிள்ளை என்ற மறைமலையடிகள் ஞானசாகரம் (அறிவுக்கடல்) என்னும் இதழினை கிபி. *1902*இல் துவங்கினார்.

## கௌரவாபிமான சீலர்

ஞானசாகரம் என்னும் அறிவுக்கடல் சந்தாதாரர்களில் கப்பலோட்டிய தமிழராகிய வ.உ.சிதம்பரனாரும் ஒருவர் ஆவார்.

ஞானசாகரம் இதழின் இரண்டாம் தொகுதிக்கு (கிபி. *1904*) பத்து ரூபாய் நன்கொடை செலுத்தி, அதன் ஒவ்வொரு இதழிலும், "கௌராபிமான சீலர்" என்ற பட்டியலில் வ.உ.சியின் பெயர் இடம் பெற்றிருக்கிறது.

தமிழ்க் கடல் மறைமலையடிகளுடன் செக்கிழுத்த செம்மல் வ.உ.சிதம்பரம்பிள்ளை அவர்களுக்கு நல்ல தொடர்பு இருந்தது.

## 1905

*1905* வைகாசித் திங்களில் மதுரைத் தமிழ்ச் சங்க விழாவுக்கு வந்த தூத்துக்குடி அன்பர்கள் மறைமலையடிகள் பேச்சைக் கேட்டு மகிழ்ந்து, அடிகளை *29.05.1905*இல் தூத்துக்குடிக்கு அழைத்து வந்தனர்.

## வ.உ.சி. வீட்டில் இரவு உணவு

*29.05.1905* இன்று வ.உ.சிதம்பரம்பிள்ளையவர்களின் இல்லத்தில் சுவாமி வள்ளி நாயகம் பிள்ளை அவர்களுடன் இரவு உணவு உண்டோம் என்று மறைமலையடிகள் தனது நாட்குறிப்பில் குறித்துள்ளார்."

*29.05.1905*, *30.05.1905* ஆகிய இரு நாட்களும் மறைமலையடிகள் கப்பலோட்டிய தமிழன் வ.உ.சிதம்பரம்

பிள்ளை அவர்கள் வீட்டில் விருந்தினராய் இருந்தனர். 30.5.1905இல் சைவ சித்தாந்த சபையில், 'ஞான சம்பந்தர்' எனும் தலைப்பில் பேசினார்கள். இந்தக் கூட்டங்களில் வ.உ.சி. கலந்து சிறப்பித்துள்ளார்கள்.

மறை. திருநாவுக்கரசு, மறைமலையடிகள் வரலாறு, தூத்துக்குடி, 1959, பக்கம் 106

30.05.1905 பகல் உணவும், இரவு உணவும் வ.உ.சி பிள்ளையவர்கள் வீட்டில் என்று மறைமலையடிகள் நாட்குறிப்பில் குறித்துள்ளார்.

மறைமலையடிகள் நாட்குறிப்புகள், 1898 – 1950 சென்னை, 1988, பக்கம் 24.

## சைவ சித்தாந்த மகாசமாஜம்

மறைமலையடிகளின் சைவ சித்தாந்த மகாசமாஜத்திலும் வஉ.சி. உறுப்பினராக இருந்தார். 1906ஆம் ஆண்டில் ஒவ்வொரு நான்கு மாதத்திற்கும் வ.உ.சி. கையொப்பம் (சந்தா) செலுத்தியும் உள்ளார்.

ஞானசாகரம், 3(2) மாசி, விசுவாச ஞானசாகரம் 3 (9) ஆடி பராபவ

1906 அக்டோபரில் சுதேசிக் கப்பல் கம்பெனி துவங்கியதும், இந்திய தேசிய விடுதலைப் போராட்டத்தில் 1908 இல் கைது செய்யப்பட்டதும், 1912இல் விடுதலையானதும் வ.உ.சி. வாழ்வின் முக்கியத் திருப்பங்கள் ஆகும்.

இதன் பின்னர் வ.உ.சி.யின் 'சைவத் தொடர்பு சற்றுக் குறைந்தே இருந்தது. 1928களில் செட்டி நாட்டில் வ.உ.சி. ஆற்றிய சொற்பொழிவுகள் சீர்திருத்தக் கருத்துக்களைத் தாங்கியே... இருந்தன.

## தினமணியில்

1934, 1935 களில் வ.உ.சி. சிவஞான போத உரையின் முன் வடிவை தினமணியில் எழுதினார். தினமணி வருஷ அனுபந்தத்தில் அது வெளியானது.

## குறுக்குச் சாலையில் அரங்கேற்றம்

தூத்துக்குடி எட்டையபுரம் நெடுஞ்சாலை குறுக்குச் சாலையில், அ.செ.சு. தர்மச் சத்திரத்தில் 'சிவஞான போத உரை' அரங்கேற்றம் செய்யப்பட்ட வ.உ.சி. அவ்வுரையினைச் செப்பனிட்டு, *1935*இல் வெளியிட்டு மகிழ்ந்தார்.

## எளியேனது அவா

அந்நிய ஆதிக்கத்தை எதிர்த்து வலிமை வாய்ந்த குரலை எழுப்பிய வ.உ.சி.யின் மங்காப் புகழ் அழியாது நிலைத்துநிற்க வேண்டுமென்ற ஆவலிலும், கால கதியில் வ.உ.சி.யின் நூற்கள் மறைந்து விடக்கூடாதென்ற ஆதங்கத்திலும், வ.உசி.யின் அச்சில் வராத, மறுபதிப்பு செய்யப்படாத, பல நூல்களைத் தொடர்ந்து இறை அருளால் வெளியிட்டு வருகிறேன்.

## தமிழர் தலைவர் வைகோ

வ.உ.சி.யின் சிவஞான போதவுரை நூலினை கலிக்கோ பைண்ட் செய்து திருநெல்வேலி ம.தி.தா. இந்து மேல்நிலைப்பள்ளி வளாகத்தில் விழா நடத்தி வெளியிட்டேன். விழாவில் தமிழர் தலைவர் வைகோ, வ.உ.சி. வாலேஸ்வரன் கலந்து கொண்டனர்.

## ஸ்ரீ சோமசுந்தர சுவாமிகள்

கீழூர் மகாள ஸ்ரீ பிரமானந்த சுவாமிகள் மடத்தின் தற்கால அதிபதி ஸ்ரீ சோமசுந்தர சுவாமிகளிடம் வ.உ.சி. ஞானவாசிடம் தினமும் பயின்றார்.

## ச. சோமசுந்தர பாரதி

*12.9.1935*இல் வ.உ.சி., ச.சோமசுந்தர பாரதிக்கு எழுதிய கடிதத்தில் இதனைத் தெரிவித்துள்ளார். வ.உ.சி.யின் சிவஞானபோத உரை ஸ்ரீ சோமசுந்தர சுவாமிகளின் தலைமையில் அரங்கேற்றம் செய்யப்பட்டது. தனது நூலின் உரைப்பாயிரத்தில் வ.உ.சி. அதுகுறித்து குறிப்பிட்டு நன்றி பாராட்டியுள்ளார்.

## தமிழ்த்தொண்டு

*28.3.1935*இல் த. வேதியப்பபிள்ளைக்கு வ.உ.சி. எழுதிய கடிதத்தில், 'திருவள்ளுவர் திருக்குறளுக்கு யான் இயற்றியுள்ள

உரையில் அறத்துப்பால் புத்தகம் என்று இதனுடன் Book Postல் வருகின்றது. இதனையும் வாங்கிப் படிப்பார். தமிழ்நாட்டில் இரார் என்று தான் தோன்றுகிறது. இக்கடிதம் *1960* அமுத சுரபியில் வெளிவந்துள்ளது என்பர் ஆ. இரா. வெங்கடாசலபதி.

*வ.உசி. கடிதங்கள், சென்னை, 1948, பக்கம் 120*

## பொருள் இழப்பு எதிர்பார்ப்பு

வேதியப்ப பிள்ளைக்கு வ.உ.சி. எழுதிய கடித வரிகள் வ. உ. சி. பொருள் வரவை எதிர்பார்த்து திருக்குறள் பணியினைச் செய்யவில்லை என்பது புலனாகிறது. பொருள் இழப்பை எதிர்நோக்கியே , பொருளார்ந்த தமிழ்த் தொண்டாற்றியுள்ளார் எனத் தெரிகிறது என்பர் தி. லீலாவதி. தமிழகத்தில் புத்தகம் வாங்கிப் படிப்பார் அதிகமிரார் என்பதனை அப்போதே வ.உ.சி. உணர்ந்து உள்ளார் என்பதனையும் அறிய முடிகிறது.

## வள்ளல் உள்ளம்

*4.9.1935*இல் த.வேதியப் பிள்ளைக்கு வ.உ.சி. எழுதிய கடிதத்தில் இதனுடன் திருக்குறள் *1*ம் , மெய்யறம் *1*ம் Certified Book-Post ல் வருகின்றன. பாடத்திருத்தங்களிலும் தங்களுக்கு உண்டாகும் சந்தேகங்களையெல்லாம் தெரிவித்திடுக. அவற்றை நிவர்த்திக்க முயலுகிறேன். எனது நூல்களைத் தாங்கள் வேண்டும் பிரதிகள் அனுப்பச் சித்தமாயிருக்கிறேன். **அவற்றைத் தாங்கள் விற்றுத் தங்கள் செலவுக்குப் பணத்தை உபயோகித்துக் கொள்ளலாம், தங்கள் பதிலை எதிர்பார்க்கிறேன்' என்று குறிப்பிட்டதில் வறுமையிலும் வ.உ.சியின் வள்ளல் உள்ளம் தெள்ளத்தெளிவாகத் தெரிகிறது.**

*தமிழ் தந்த வ.உ.சி. சென்னை, 1986, பக்கம் 102*

## வ.உ.சி.யின் பொருட்பால், உரை

*1935*இல் வ.உ.சி வெளியிட்ட அறத்துப்பால் விருத்தியுரையின் பின்பக்கத்தில் திருக்குறள் எனது உரையுடன் பொருட்பால் அச்சில் ஒரு ரூபாய் என்று விளம்பரம் செய்துள்ளார். வ.உ.சி.யின் பொருட்பால் உரை குறித்து கணியர், சென்னை மாகாணத் தமிழ்ச்சங்க அமைச்சர் இ.மு. சுப்பிரமணிய பிள்ளை, தனது நெல்லை தமிழ்ப்புலவர்கள் நூலில் (*1953*) தரும் தகவல் இதோ...

## இ.மு. சுப்பிரமணிய பிள்ளை

"1936 ஏப்ரல் முதல் வாரத்தில் பொருட்பாலின் முதல் எட்டுப்பக்கங்கள் என் பார்வைக்கு வந்தன. அவைகளை யான் திருத்தியனுப்ப இவர் 5–4–1936ல் எழுதிய பாராட்டுக் கடிதப்படியை இதன்பின் சேர்த்திருக்கிறேன். இப்போது வழங்கும் பாடத்தை இவர் திருத்தியிருந்த இடங்கள் பெரும்பாலானவைகளைப் பற்றி ஆராய்ச்சிக் குறிப்புக்கள் ஒவ்வொரு பகுதியிலும் குறித்தனுப்பினேன், இவர் அவைகளையெல்லாம் (வ.உ.சி) ஏற்றுக்கொண்டு பொருட்பாலை நல்ல முறையில் அச்சிட்டு முடிக்க முனைந்து நின்றார். இருபத்து மூன்று அதிகாரங்களும், இருபத்து நான்காவது அதிகாரத்தில் ஏழு பாடல்களும் எனது பார்வையில் அச்சேறின. அவைகளின் படியொன்று அச்சான உடனுக்குடன் வ.உ.சி. எனக்கு அனுப்பி உதவினார். அவைகளை நான் இன்றும் நன்கு பேணி வைத்திருக்கிறேன். இவரது பொருட்பாலுரை முழுவதும் அச்சாகி வருதல் வேண்டும். காமத்துப்பாலுக்கும் வ.உ.சி. விரிவுரை எழுதி முடித்து வைத்திருந்தார். அவைகள் வெளிவந்தால் தமிழ் நூல்களிலே ஒப்புயர்வற்றதாகிய திருக்குறளுக்குச் சிறந்த திறவுகோல்களாகப் பெரிதும் உதவும்.


V. O. CHIDAMBARAM PILLAI 2 TUTICORIN

5-4-1936


2

வீரர் தம் வாழ்நாளெல்லாம் அரிதின் முயன்று ஆராய்ந்து கண்ட உண்மைகள் வீண் போகாமல் நிலை நிற்கும்" என்ற இ.மு. சுப்பிரமணிய பிள்ளையின் வரிகளை தமிழ் மக்களின் கவனத்திற்கு கொண்டு வருகிறேன்.

திருக்குறள் அறத்துப்பால் உரையின் முன்னுரையில் வ.உ.சி. பொருட்பால், இன்பப்பால் மூலத்திற்கும், திருக்குறள், திருவள்ளுவர் குறித்த ஆராய்ச்சிக் குறிப்புக்களுடன் 300 பக்கங்களில் வெளியிட எண்ணியுள்ளதை தெளிவாகத் தெரிவித்திருக்கிறார்.

## சாத்தூரில் வ.உ.சி - டி. எஸ். கந்தசாமி முதலியார்

தனது வாழ்வின் இறுதி வரை திருக்குறள் தொண்டிலேயே வ.உ.சி. காலத்தைக் கழித்து வந்தார். 1935 மே மாதத்தில் சாத்தூரில் நடைபெற்ற திருவள்ளுவர் திருநாள் கொண்டாட்டத்தில் வ.உ.சி. கலந்து கொண்டார்.

''சாத்தூர் ஏ.வி. ஸ்கூலில் திரு. வ.உ.சிதம்பரம்பிள்ளை தலைமையில், திருவாளர்கள் பொன்னம்பலம்பிள்ளை, டி.எஸ்.கந்தசாமி முதலியார் பேசினார்கள்.

> *திருவள்ளுவர் நினைவு மலர், திருவள்ளுவர் திருநாட்கழகம், பவளக்காரத் தெரு, சென்னை 1936, பக்கம் 136.*

அடியேன் எப்போதும் உன் திருவடியை மறவாமல் வாழ்த்தி வருகின்றேனே அடியேன் ஆக்கிய திருக்குறள் விரிவுரை அச்சாகும் வரையாவது நோயற்ற வாழ்வு தந்தருளும்; கூடிய விரைவில் இந்தியருக்கு முழு உரிமை தந்து ஆங்கிலேயர் இந்நாட்டை விட்டு அகலவும், அதனால் இந்திய மக்கள் விடுதலை பெற்றுப் பல கலைகளில் முன்னேறி நல்வாழ்வடையவும் திருவருள்புரியும். அடியேனும் உயிருடனிருந்து அந்நன்னாளைக் காணுமாறு கடைக்கண் பார்த்தருளும்' என்று திருச்செந்தூர் முருகப் பெருமான் திருமுன்பு நின்று கண்ணீர் வர வ.உ.சி. பிரார்த்தனை செய்துள்ளார்.

## 'நாட்டிற்குச் சுதந்திரம் வரவில்லையே

'நாட்டிற்குச் சுதந்திரம் வரவில்லையே; எனது திருக்குறள் பொருட்பால் இன்பப்பால் உரைகள் அச்சாகவில்லையே என்பது வ.உ.சியின் இறுதி நாட்களில் இலட்சிய தாகமாயிருந்தது.

வ.உ.சியின் பொருட்பால், இன்பத்துப்பால் உரைகளைப் பாதுகாத்துப் பேணி வைத்திருப்பவர்கள் இதற்குப் பின்பாவது அதனை வெளியிட முன் வரவேண்டும்; அல்லது அதனை வெளியிட முன்வரும் எங்களைப் போன்றவர்களிடம் தந்திடல் வேண்டும். இதுவே நாம் வ.உ.சிக்கு செய்யும் பூரண மரியாதையாகும் என்று 2001இல் வ.உ.சியும் திருக்குறளும் என்ற எளியேனது நூலில் வேண்டுகோள் விடுத்தேன். வ.உ.சி.யின் திருக்குறள் உரை முழுவதையும் பதிப்பித்து பாரி நிலையத்தார் வெளியிட்டார்கள். தொடர்ந்து பலராலும் அது வெளியிடப்பட்டு வருகிறது. பாளை. சைவசபை கையடக்கப் பிரதியாக வ.உ.சி.யின் திருக்குறள் உரையை வெளியிட்டுள்ளது.

## சேலம் மாநாட்டில் வ.உ.சி.

1922இல் கோவில்பட்டியில் குடியேறி வக்கீல் தொழிலை நடத்தி வந்தார். 1932இல் தூத்துக்குடிக்குச் சென்று இறுதிவரை (1936 நவம்பர் 18) வரை வ.உ.சி. அங்கேயே வாழ்ந்தார்.

## வழக்கறிஞர் கணபதிப்பிள்ளை - சங்கரலிங்கக் கவிராயர்

கோவில்பட்டியிலே வாழ்ந்த வேளையில் சேலம் ஜில்லா மூன்றாவது அரசியல் மாநாட்டிற்குத் தலைமை தாங்கிட, தூத்துக்குடி வழக்கறிஞர் கணபதிப்பிள்ளை, வேலூர் இராவ் சாகிபு சங்கரலிங்கக் கவிராயருடன வ.உ.சி. சேலம் சென்றார்.

## சேலம் அரசியல் மாநாடு

சேலத்தில் மாவட்ட அரசியல் மாநாடு 5.11.1927இல் துவங்கி 6.11.1927 வரை இரண்டு நாட்கள் நடந்தது. வ.உ.சி. மாநாட்டுத் தலைவர், தம்மண்ணச்செட்டியார் வரவேற்புக்குழுத் தலைவர், வரதராஜுலு நாயுடு, பெரியார் ஈ.வெ.ரா, ஆர்.கே.சண்முகம் செட்டியார், பனகல் ராஜா, பி.சி.ராவ், ஏ.இராமசாமி முதலியார், குமாரசாமி ரெட்டியார், டி.கே.சிதம்பரநாத முதலியார், எல்லப்ப செட்டியார் முதலியோர் கலந்து கொண்டனர் என்று நவசக்தி இதழ் அறிவிக்கிறது. சேலம் மாநாட்டில் அரியதொரு வீர உரையினை உணர்ச்சி ததும்ப உரையாற்றி வ.உ.சி. தொடர்ந்து காங்கிரஸில் தீவிரமாகப் பணியாற்றவில்லை.

*R.A. Padmanabhan, V.O. Chidambaram Pillai, 1977, P.88*

சேலம் மாநாட்டில் வ.உ.சி. ஆற்றிய உரையினை அச்சுவடிவில் வந்த அரசியல் சொற்பொழிவு 1927இல் வெளிவந்த நூலினை தேடி எடுத்திடும் முயற்சியில் இறங்கினேன். தான் எழுதிய 'மெய்யறிவு' என்ற நூலை அம்பாசமுத்திரம் அகஸ்தியர் பிரஸில் அச்சிட்டு 1929இல் வெளியிட்ட வ.உ.சி. அந்த நூலின் பின்பக்க அட்டையில் 'எனது பிரசுரங்கள்' என்ற தலைப்பில் தனது நூல்களின் பட்டியலை விலையுடன் குறிப்பிட்டிருக்கிறார்.

சேலம் அரசியல் மாநாட்டில் எனது பெருஞ்சொல் என்று அந்த நூலுக்கு தலைப்பிட்டு எட்டணா விலை என்றும் தெரிவித்திருந்தார்.

1930ஆம் ஆண்டில் அச்சிடப்பட்ட வ.உ.சி.யின் இன்னிலை' நூலின் பின்பக்க அட்டையில் 'எனது நூல்களும் பிரசுரங்களும்' என்ற தலைப்பில் தனது நூல்களின் பட்டிலை விலையுடன் குறிப்பிட்டிருக்கிறார். அதில் 'சேலம் மகாநாட்டில் எனது பிரசங்கம்' விலை அணா 8 என்று வ.உ.சி. தெரிவித்திருந்தார்.

நூலின் பின்பக்க அட்டையில் 'எனது நூல்களும் பிரசுரங்களும்' என்ற தலைப்பில் 'எனது அரசியல் பெருஞ் சொல்' விலை அணா 8 என்று தெரிவித்திருக்கிறார்.

1935 இல் தூத்துக்குடியில் அச்சிட்டு வெளிவந்த நூலின் பின் அட்டையில் 'எனது நூல்களும் பிரசுரங்களும்' என்ற தலைப்பில் 'எனது அரசியல் சொற்பொழிவு' விலை அணா 8 என்று வ.உ.சி. தெரிவித்திருக்கிறார்.

எனவே வரலாற்றுச் சிறப்புமிக்க அந்த உரைக்கு வ.உ.சி.யின் 'அரசியல் பெருஞ்சொல்' என்று தலைப்பிட்டு 1996இல் அடியேன் மறுபதிப்புச் செய்தேன். அதன்பின் பலரும் அதனை இன்றுவரை மறுபதிப்பு செய்துவருகிறார்கள். முதலில் மறுபதிப்பு செய்தது அடியேன்தான்.

**மா.ரா. அரசு**

வ.உ.சி.யின் கட்டுரைகள் பதினைந்தினை (கடவுளும் பக்தியும் முதல் – சிவஞான போதம் ஆறாஞ் சூத்திர ஆராய்ச்சி வரை) மா.ரா. அரசு 1989இல் தொகுத்து வெளியிட்டார்.

### திலக மகரிஷி

பாரத ஜோதி ஸ்ரீ திலக மகரிஷியின் வரலாறு, வ.உ.சி.யால் எழுதப்பட்டு, இலங்கை வீரகேசரியில் தொடராக வெளிவந்தது. 1933 இல் வந்து எட்டு வாரங்களுக்குரியவைகளையும் 1934 இல் வெளிவந்த ஒன்பது வாரங்களுக்குரிய பகுதிகளையும் திலக மகரிஷி நூலாக 2009 இல் மா.ரா.அரசு வெளியிட்டார்.

### ஆ.இரா.வேங்கடாசலபதி

இலங்கைக்கே சென்று திலகமகரிஷி எனும் வீரகேசரியில் வெளிவந்த வ.உ.சி.யின் கட்டுரைத் தொகுப்பைத் தேடிக் கண்டுபிடித்து முழுமையாக 2010 மே மாதம் வெளியிட்டவர் நண்பர் ஆ.இரா. வேஙகடாசலபதி. மா.ரா. அரசு நூலில் இல்லாத கர்ஸன் பிரபுவின் கருணை இல்லாத ஆட்சிமுறை மகாராஷ்டிர மகிரிஷி மீது சர்க்கார் சதி வழக்கு என 19 தலைப்புகளையும் 28.5.1933 முதல் 14.10.1934 வரை வெளிவந்த அனைத்தையும் தொகுத்து திலக மகிரிஷி வ.உ.சி. என்று பதிப்பாசிரியராக இருந்து ஆ.இரா.வேங்கடாசலபதி ஆற்றிய பணி போற்றுதற்குரியது.

### அழகும் ஆரோக்கியமும்

வ.உ.சி.யின் படைப்புகளில் வெளிவராத சில நூல்களில் அழகும் ஆரோக்கியமும் ஒன்றாகும். சென்னை ஆவணக் காப்பகத்திலும், பழைய புத்தகக் கடைகளிலும் தேடி அலைந்து 1996 ஜனவரியில் வ.உ.சி.யின் அழகும் ஆரோக்கியமும் கட்டுரைத் தொகுதியை தனி நூலாக வெளியிட்டவன் அடியேன். இப்போது அது பல பதிப்புகளைக் கண்டு வருகிறது. திருமண நிகழ்ச்சிகளில் அச்சிட்டு இலவசமாக வழங்கப்பட்டு வருகிறது.

### வ.உ.சி.யின் வாழ்க்கை வரலாறு

வீரத்தலைவர் வ.உ.சி.யின் வாழ்க்கை வரலாறு **முழுமையாக இதுகாறும் வெளிவரவில்லை.** பரலி சு.நெல்லையப்பர் தொடங்கி இன்று வரை பலராலும் தொடர்ந்து வாழ்க்கை வரலாறு எழுதப்பட்டு வருகிறது. அதை விவரிக்கின் பெருகும் என்பதால் நிறுத்திக் கொள்கிறேன்.

## வ.உ.சி.யின் உயில்

தூத்துக்குடியில் வசித்துவந்த அ.செ.சு. கந்தசாமி ரெட்டியார் அவர்களுக்கு 26.10.1936 இல் வ.உ.சி. உயில் எழுதிக் கொடுத்துள்ளார். மறைந்த வ.உ.சி.யின் திருக்குமாரர் வ.உ.சி. வாலேஸ்வரன் அதனை அடியேனுக்குத் தந்தார். அதனை 2003 மார்ச் 1 இல் நூலாக வெளியிட்டேன். கரிசல் இலக்கியப் பிதாமகர் கி.ராஜநாராயணனது கதை சொல்லிலும், நண்பர் சீனிவாசனின் பழங்காசு இதழிலும், இன்ன பிற இதழ்களிலும், தனியார் பலர் எழுதிய நூல்களிலும், சைவ அமைப்புக்களினாலும், தொடர்ந்து வ.உ.சி. உயில் வெளிவந்து கொண்டேயிருக்கிறது. நம்மையும் கண்ணீர் சிந்த வைக்கிறது. இதற்கு மூல காரணம் அடியேன் தான். **வ.உ.சி.யின் உயிலை நாட்டுக்குத் தந்தது எளியேன் தான்.**

## எனது கடன்கள்

தூத்துக்குடி நேஷனல் பேங்க் ஆப் இந்தியா லிமிடெட்டுக்கு ஐந்து மாத வீட்டு வாடகை ரூபாய் 135, தூத்துக்குடி சரோஜினி ஸ்டோர்ஸ் ஜவுளி பாக்கி ரூபாய் 30.

## வன்னியஞ் செட்டியார்

வன்னியஞ் செட்டியார் எண்ணைய்க் கடைக்கு சுமார் 30 ரூபாய்.

## இன்ஸ்பெக்டர் பிள்ளை - சோமநாத்

இன்ஸ்பெக்டர் பிள்ளைக்கு ரூ.20, சோமநாத்துக்கு ரூ.16, வேதவல்லிக்கு ரூ.50 ஆக 86 ரூபாய் கடன் பட்டிருந்ததை வ.உ.சி. உயிலில் கூறியுள்ளார்.

## மைத்துனர் வெங்கிடாசலம்

உயிலின் பிரதி வ.உ.சி.யின் துணைவியார் ஸ்ரீமீனாட்சியாரிடமும், மைத்துனர் வெங்கிடாசலமிடமும் இருக்கிறது என்றும் வ.உ.சி. சொல்லியுள்ளார். வ.உ.சி. உயில் எழுதிய 23 நாட்களில் மறைந்தார். (26.10.1936 – 18.11.1936)

# வ.உ.சி. : வழங்கியவர்கள்

தியாகச் செம்மல் வ.உ.சி. வாழ்ந்த காலத்தில் அவர்கள் மீது அன்பும் ஆதரவும் வழங்கிய பெருமக்கள் பலர்.

## திருமணம் செல்வக்கேசவராய முதலியார்

சென்னை பெரம்பூர் திருமயிலை, சிந்தாதரிப்பேட்டை பகுதிகளில் வ.உ.சி. வாழ்ந்த காலத்திலும் திருமணம் செல்வக்சேசவராய முதலியாருடன் நல்ல நட்புறவில் இருந்தார்.

இருவரும் இணைந்து தமிழிலக்கிய ஆய்வுகள் நடத்தினார்கள். வ.உ.சி. தனது நூல்களில் பாயிரத்தில் செல்வக்கேசவராய முதலியார் பற்றி குறிப்பிட்டிருப்பதை பார்த்துள்ளோம்.

## பழமொழி நானூறு வ.உ.சி செய்த உதவி

வ.உ.சியின் நூற்களும் செல்வகேசவராய முதலியார் நூற்களும் சென்னை எஸ்.வி.என். பிரஸில் அச்சடிக்கப்பட்டுள்ளது. வ.உ.சி.யின் நூல்கள் வெளிவர செல்வகேசவராய முதலியார் உதவியதைப் போல, செல்வகேசவராய முதலியார் நூல்கள் வெளிவர வ.உ.சி. உதவியாக இருந்துள்ளார்.

## எஸ். அனந்தவரத விநாயகம் பிள்ளை

பழமொழி நானூறு பதிப்பு வெளிவர எஸ்.அனந்தவரத விநாயகம் பிள்ளை, த.கனக சுந்தரம் பிள்ளை உதவியுள்ளார்.

## ஆ. சிங்கார வேலு முதலியார்

ஆ. சிங்கார வேலு முதலியார் உதவியுள்ளார்.

## வ.உ.சிதம்பரம் பிள்ளை

வ.உ.சிதம்பரம் பிள்ளை, பழமொழி நானூறு நூலினை செல்வக்கேசவராய முதலியார் அச்சிடும் தருவாயில் உதவியாக இருந்தார் என்று முனைவர் சா.கிருஷ்ணமூர்த்தி, முனைவர் ச.சிவகாமி கூறியுள்ளனர்.

*திருமணம் செல்வகேசவராய முதலியார், சென்னை, 2004, பக்கம் 70*

வ.உ.சி திருமணம் செல்வகேசவராய முதலியாருக்கு என்ன உதவி செய்தார். அவரது நூலினைத் தேடினேன்.

## 1929

முன்றுரையரையர் இயற்றிய பதினெண்கீழ்கணக்கு நூல்களில் ஒன்றான பழமொழி நானூறு நூலினை சென்னை பச்சையப்பன் கல்லூரி பேராசியர் செல்வகேசவராய முதலியார் எம்.ஏ. 1929 இல் இரண்டு ரூபாய் விலையில் சென்னை வேப்பேரி டயோசீசன் பிரஸில் அச்சிட்டு 412 பக்கங்களில் வெளியிட்டுள்ளார்.

## Prefatory Note

அதில் Prefatory Note என்று பக்கம் 5 முதல் 8 வரை டிசம்பர் 1, 1916 ஆம் நாளன்று எழுதியுள்ளார்.

**'...and to Mr. V.O.Chidambaram Pillai, for the help rendered while the work was passing through the Press'** என்று வ.உ.சி உதவியதை குறிப்பிட்டுள்ளார்.

வ.உ.சி.யின் பல நூல்கள் வெளிவர உதவியவர் திருமணம் செல்வகேசவராய முதலியார். அவரது நூல் ஒன்று விரைந்து அச்சாகி வெளிவர உதவி வழங்கியவர் வ.உ.சி.

## பதிப்புரை

அந்த நூல் பக்கம் 32 முதல் 35 வரை 1916 டிசம்பர் 1 இல் திருமணம் செல்வகேசவராய முதலியார் எழுதிய பதிப்புரை தமிழில் வெளிவந்துள்ளது. பக்கம் 35 இல் அவர் கூறுகிறார்; **''நூல் அச்சேறுகையில் அப்போதப்போது ஆட்சேபனைகளை செய்து நுட்பமான சில பகுதிகளை விளங்க வைத்ததற்கு காரணமாக இருந்த ஸ்ரீ சிதம்பரம் பிள்ளையவர்களிடம் நான் நன்றி பாராட்டக் கடவேன்''** இது திருமணம் செல்வக்கேசவராய முதலியார் எழுதியது. வ.உ.சி. வழங்கியவர்கள் நூல் தலைப்பு பொருத்தந்தானே!

## சுவாமி சகஜானந்தா (27.1.1890 - 1.5.1959)

ஆரணி, மேல்புதுப்பாக்கம் அண்ணாமலை – அலமேலு தம்பதியரின் அருமைப்பிள்ளை சுவாமி சகஜானந்தா,

வ.உ.சி. நூல்களுக்கு சிறப்புப்பாயிரம் வழங்கியுள்ளதை பார்த்துள்ளோம்.

## குடும்ப நிதி

வ.உ.சி. மறைந்தபோது அவரது குடும்பத்துக்காக சுவாமி சகஜானந்தா அவர்களே முன்னின்று நிதி திரட்டி அளித்தார்.

*ரவிக்குமார், சுவாமி சகஜாநந்தா மேலவையிலும், பேரவையிலும் ஆற்றிய உரைகள் புதுச்சேரி, 2010, பக்கம் 13, மணற்கேணி, மே – ஜூன், 2013, இதழ் 18, பக்கம் 84.*

## வ.உ.சி.யிடம் திருக்குறள் பயின்றவர்

சுவாமி சகஜானந்தா வ.உ.சி.யிடம் திருக்குறள் பயின்றவர். வ.உ.சி.யின் மாணவர், வ.உ.சி.யின் அகமே புறம், மெய்யறம் நூலுக்குச் சிறப்புப்பாயிரம் வழங்கியவர்.

## அரசிடம் முறையீடு

“நாட்டின் விடுதலைக்குப் பாடுபட்ட தியாகிகளின் குடும்பங்களை சுவாமிகள் நன்றியுணர்வோடும் பக்தியோடும் அணுகினார். கப்பலோட்டிய தமிழர் வ.உ.சிதம்பரம் பிள்ளையின் வீரவரலாற்றிலேயே சுவாமிகள் பெருமதிப்பைக் கொண்டிருந்தார். அந்தத் தியாகியின் குடும்பம் படுகிற வறுமை வாழ்க்கையை அரசிடம் கூறி அக்குடும்பத்திற்கு ஒரு வீடும், அவருடைய குழந்தைகளின் படிப்பிற்குச் செலவினத்தொகை திங்கள்தோறும் ரூ.100ம் கொடுத்து உதவ வேண்டுமென்றார் சகஜானந்தா.

*பேராசிரியர் பொன்.சுப்பிரமணியம். சுவாமி சகஜானந்தா, சென்னை, 2009, பக்கம் 92.*

## திருக்குறளும் தீந்தமிழும்

திருக்குறளும் தீந்தமிழும் கப்பலோட்டிய தமிழர் வ.உ.சி.யிடம் பயின்று தம் நிலையை உயர்த்திக் கொண்டார் சகஜானந்தா*

*புலவர் ப.சீனிவாசன், தெய்வத்திரு சகஜாநந்தா, சிதம்பரம், 1990, பக்கம் 24.*

வ.உ.சி, சகஜாநந்தாவிற்கு தமிழ் வழங்கினார். சகசாநந்தா வ.உ.சி. குடும்பத்திற்கு உதவி வழங்கிட முயற்சிகள் வழங்கினார். இது வரலாறு.

## பேராசிரியர் வையாபுரிப்பிள்ளை (12.10.1891 - 17.2.1956)

திருநெல்வேலி சிக்கரநரசய்யன் கிராமத்தில் சரவணப்பெருமாள் – பாப்பம்மாள் தம்பதியரின் புதல்வராகப் பிறந்தவர் பேராசிரியர் வையாபுரிப்பிள்ளை. தொல்காப்பிய சொல்லதிகார ஆராய்ச்சியில் வையாபுரிப்பிள்ளை ஈடுபட்ட வேளையில், கல்லாடர், தெய்வச்சிலையார், இளம்பூரணர் உரைகளை வையாபுரிப்பிள்ளைக்கு வ.உ.சி அவர்கள் வழங்கினார் என்று புதுவை அறிஞர் தி.வே. கோபாலையர், வையாபுரிப்பிள்ளையின் இலக்கணப் பதிப்புகள் கட்டுரையில் தெரிவித்துள்ளார்.

வே.இரா.மாதவன், பதிப்புலகில் வையாபுரிப்பிள்ளை, தமிழ்ப்பல்கலைக் கழகம் தஞ்சாவூர், 2010, பக்கம் 175.

எஸ். வையாபுரிப்பிள்ளை, தமிழ்ச்சுடர் மணிகள் நூலை ஜனவரி 1949 இல் வெளியிட்டார். அதனை மூன்றாம் பதிப்பு 1959 இல் வெளியானது. அந்த நூலில் நான் கண்ட வ.உ.சி. என்று வையாபுரிப்பிள்ளை கூறுகிறார் இதோ;

### நான் கண்ட வ.உ.சி.

1907ம் ஆண்டு. ஒரு நாள் நான் கற்றுவந்த இந்து கலாசாலையில் மாணாக்கர்களிடையே ஒரு பரபரப்பு உண்டாயிருந்தது. அன்று மாலை சுமார் ஐந்தரை மணிக்குத் தூத்துக்குடியிலிருந்து தேசபக்தர் சிதம்பரம் பிள்ளை திருநெல்வேலிக்கு வந்து கீழ ரத வீதியில் அம்மன் சன்னதிக்கு எதிரே பேசப்போகிறார் என்று குறித்த நேரத்திற்கு முன்பே ஜனங்கள் பெருந் திரளாகக் கூடியிருந்தார்கள். முற்போக்கு எண்ணமும், நாட்டுப் பற்றுமுள்ள மாணவர் சிலரும் அக்கூட்டத்திலுண்டு. அக்கூட்டத்திற்கு நானும் கலாசாலையிலிருந்து நேரே போய்ச்சேர்ந்தேன். குறித்த நேரம் கடந்துவிட்டது. ஆனால், ஜனங்கள் காத்துக் கொண்டிருந்தார்களேயல்லாமல் கலைந்து போகவில்லை. சுமார் 6மணிக்குமேல் தேசபக்தர் வந்து சேர்ந்தனர். அவர்கூட இரண்டொருவர் இருந்தார்கள். அவர்கள் இன்னாரென்பது

இப்பொழுது எனக்கு ஞாபகமில்லை. ஒருவர் சுப்பிரமணிய சிவா என்று நினைக்கிறேன்.

## மேலே கோட்டும் அங்கவஸ்திரமும்

குட்டையான சரீரம் ; திரண்டு உருண்ட கைகால்கள் ; உருண்ட முகம். நிறம் சற்றுக் கறுப்புத்தான் ; மேலே கோட்டும் அங்க வஸ்திரமும்; தலையில் தலைப்பாகை. அவரைப் பார்த்தவுடன் முதலாவது இவர் என்ன பேசமுடியும் என்று தான் நினைத்தேன். ஆனால் பேசத்தொடங்கிச் சிறிது நேரத்திற்கெல்லாம் விஷயங் களைத் தெளிவாக எடுத்துச் சொன்ன முறை என்னை வசீகரித்தது. அன்னிய அரசாங்கத்தினர் நாம் சிறிதும் முன்னேற வொட்டாதபடி வாணிகம் முதலியன புரிந்து, நம் நாட்டுச் செல்வத்தைச் சுரண்டிக் கொண்டு போவதைக் குறித்து விஸ்தாரமாகப் பேசினார்.

## சுமார் ஒரு மணி நேரம்

ஒவ்வொருவனும் தேசாபிமானமுடையவனாக இருத்தல் வேண்டும் என்று வற்புறுத்தினார். இதைப்பற்றிப் பேசும்பொழுது அவர் தம்மையே மறந்து பரவசமாய் நின்று, கேட்போர் , உள்ளத்தை நேரடியாய்த் தாக்கினார் என்று சொல்ல வேண்டும். சுமார் ஒரு மணி நேரம் பேசியிருப்பார். கேட்ட மக்கள் அனைவரும் மிக்கக் குதூகலமுற்றனர். நான் வ. உ. சி. யைக் கண்ட முதற்காட்சி இதுதான்.

மாணவர் உள்ளத்திற் போலவே, தொழிலாளிகள் உள்ளத்திலும் வ.உ.சி. ஒரு சிறந்த இடத்தைப் பெற்று விட்டனர். இவ்விரு பகுதியினரிடத்தும் இவர் காட்டிய பேராதரவே இதற்குக் காரணமாகும்.

தூத்துக்குடியில் மில் தகராறுகளும், புதிதாக ஸ்தாபிக்கப்பட்ட கப்பல் ஸ்தாபனங்களும், இவ்விரண்டுவகையிலும் வ.உ.சி. எடுத்துக்கொண்ட பேருழைப்பும் இவரை ஒரு தேசபக்த வீரராகக் கருதும்படி செய்தன. இவருடைய அரிய குணங்கள் பலரையும் வசீகரித்தன. கள்ளங்கபடில்லாத சிறந்த உள்ளமும் நேர்மையான பேச்சும் ஆழ்ந்த தேசபக்த உணர்ச்சியும் இவர் சென்ற இடங்களிலெல்லாம் இவருக்குப் பெருஞ் சிறப்பை நல்கின. முக்கியமாகத் தூத்துக்குடியிலும், திருநெல்வேலியிலும்

இவருக்கு அமோகமான செல்வாக்கு இருந்தது. வ.உ.சி.யின் சிறை வாழ்க்கையில் என் மனம் பெரிதும் ஒன்றிவிட்டது.

## வ.உ.சி. எழுதிய கடிதம்

வ.உ.சி.யின் விடுதலையின் பின், அவர் ஒரு புது மனிதராக மாறிவிட்டார் என்றே சொல்ல வேண்டும். **இதுவரையும் தேசிய விஷயங்களில் உழைத்து வந்தவர் இப்பொழுது தமது தாய் மொழியாகிய தமிழின் பொருட்டு உழைக்க முன்வந்து சென்னையிலேயே சில ஆண்டுகள் தங்கினர். அப்பொழுது தொல்காப்பியத்தை இவர் கற்றுக் கொண்டிருந்த சமயம். எந்த நூலை எடுத்தாலும் இவர் முன்பிருந்த நூலாசிரியர்கள் கூறியதனை அலசிப் பார்த்துப் புதிய உரை காணுவதிலே முயன்று வருவார்.** இலக்கணம் முதலிய விலங்குகளை யெல்லாம் இவர் அறவே களைந்து எறிந்துவிடுவார். துணிகரமும் உணர்ச்சி வேகமும், எதனையும் தன்னிலையிலிருந்து நோக்கும் நேர்மையும் இவரது முக்கியமான இயல்புகள். எளிமையாக உரைகளிருத்தல் வேண்டும் என்ற பெருங் கருத்துக் கொண்டவர். தொல்காப்பியத்திற்கு இளம் பூரணர் இயற்றிய உரை எளிதாக இருத்தல்கண்டு அதனை அச்சிடும் தொழிலில் இவர் முயன்றார். இதனைத் தெரிந்த நெல்லை அறிஞர் ஒருவர் இவருக்கெனப் பிரதிகள் சிருஷ்டித்துக்கொடுக்க முன் வந்தனர். என்னிடம் இளம் பூரணர் உரைப் பிரதி இருப்பதாகத் தெரிந்து எனக்கு வ.உ.சி. 1913ல் ஒரு கடிதம் எழுதினர்.

## கடிதப் போக்குவரத்திலேயே எங்கள் நட்பு

இக்காலம் முதல் வ. உ. சி. யும் நானும் நெருங்கிய இலக்கியத் தோழர்களாய் விட்டோம். தொல்காப்பியம் பற்றி எனக்குப் பல விஷயங்களை எழுதி வந்தார்கள். நானும் இவர்களுக்குப் பல கடிதங்கள் எழுதியுள்ளேன். தொல்காப்பியம் எழுத்ததிகாரம் இவர்களால் வெளியிடப் பெற்றது. பொருளதிகாரத்தில் முதல் இரண்டு இயல்களும் இவர்களே பரிசோதனை செய்து வெளியிட்டார்கள். இவ்விஷயத்தில் சென்னையில் இவர்களுக்கு உதவி புரிந்து வந்தவர்கள் திரு. செல்வக்கேசவராய முதலியார் முதலியவர்கள். நாங்கள் இலக்கியத் தோழர்களாயிருந்தும், பல ஆண்டுகளாக ஏகதேசமாகவேனும் சந்தித்து வந்தோம் என்று

கூடக் கூறமுடியாது. கடிதப்போக்குவரத்திலேயே எங்கள் நட்பு அமைவுற்றது.

நெடுங்காலத்திற்குப் பின், 1926ம் ஆண்டு இறுதியில் நான் சென்னைத் தமிழ் லெக்ஸிகன் பதிப்பாசிரியனாக வந்து சேர்ந்தேன். அப்போது வ. உ. சி. அவர்கள் வக்கீலாகத் தொழில் புரியத் தூத்துக்குடிக்குச் சென்று விட்டார்கள். ஒருமுறை சென்னை மயிலாப்பூரில் இந்து மத பரிபாலன சபையின் கமிஷனராக இருந்த டி. கே. சிதம்பரநாத முதலியாரவர்கள் வீட்டிற்கு நானும் எனது நண்பர் பி. ஸ்ரீ . ஆச்சார்யாவும் சென்றிருந்தோம். அப் பொழுது அங்கே வ. உ. சி. இருந்தார்கள். இவர்களோடு வெகு நேரம் பேசிக்கொண்டிருந்தோம்.

## பரிமேலழகர் உரை - வ.உ.சி. வழங்கிய உரைகள்

எங்கள் பேச்சு முக்கியமாகத் திருக்குறளின் உரையைப் பற்றியதாக இருந்தது. பரிமேலழகர் உரை பல இடங்களில் பிழையாயுள்ளது எனவும், முதல் நான்கு அதிகாரங்கள் வள்ளுவர் இயற்றியன அல்ல எனவும், பிள்ளையவர்கள், தங்களுக்கு இயற்கையாயுள்ள ஆவேசத்தோடு, பேசினார்கள். நான் இவர் பேச்சினிடையில் புகுந்து, சிறிதும் உணர்ச்சிக்கு இடங் கொடாதபடி, பரிமேலழகர் உரையின் போக்கைப் பற்றி யும் பொதுப்பட அதன் சிறப்புக்களைப் பற்றியும், முதல் நான்கு அதிகாரங்களின் அமைப்பைப் பற்றியும், சில வார்த்தைகள் பேசினேன். எனது அமைதியும் தருக்க நெறி பிறழாத பேச்சும், ஆழ்ந்த தமிழ் உணர்ச்சியும், பிள்ளையவர்களைப் பிணித்துவிட்டன என்று சொல்லலாம். இதன் காரணமாக, இவர்கள் என்னிடம் மிக்க அன்பும் நம்பிக்கையும் கொண்டு விட்டார்கள். பல்வேறு வகையான எனது இலக்கிய முயற்சிகளைத் தெரிந்து பெரிதும் ஆதரவு காட்டினார்கள். எனக்கு வேண்டிய ஏட்டுப் பிரதிகளை வரவழைத்துக் கொடுப்பதாக வாக்களித்தார்கள். அவ்வாறே இவர்கள் மறையும் வரை உதவி புரிந்தும் வந்தார்கள். மேற்குறித்த நிகழ்ச்சிக்குப் பிறபாடு, அவர்கள் சென்னைக்கு வரும்பொழுதெல்லாம் என்னைக் காணாது திரும்புவதில்லை. என்னோடு சிலபொழுது தங்கியிருத்தலும் வழக்கம்.

## தொல்காப்பிய வெளியீடு

தொல்காப்பியப் பொருளதிகாரத்தில் மற்றை ஏழு இயல்களையும் வெளியிட வேண்டும் என்ற ஆத்திரம் வ.உ.சி. அவர்களுக்கு மிகுதியாயிருந்தது. அவற்றை நான் பதிப்பித்து வெளியிடுதல் வேண்டும் என்று வ. உ. சி. அவர்கள் விரும்பினார்கள். இவர்களிட்ட ஆணையை நானும் மேற்கொண்டு தொல்காப்பியம் பொருளதிகாரம் முழுமையும் பதிப்பித்தேன். அப்பதிப்பு எங்கள் இருவர் பெயராலும், வாவிள்ளா ராமசாமி சாஸ்துருலு பதிப்பகத்திலிருந்து வெளி வந்துள்ளது.

## தாயவலம் தீர்த்தான் கவிராயர்

எனக்கு ஏடுதேடி அளிக்கும் உதவியை எவ்வளவு உள்ளன்போடு இவர்கள் செய்து வந்தார்கள் என்பது ஒரு செய்தியால் தெரியவரும். பல அன்பர்களுக்கும் கடிதம் எழுதி ஏடுகளைப் பெற்று எனக்கு அனுப்பியதோடு, தாமே நேரில் என்னுடன் வந்து ஏடு பெற்றுக் கொடுத்ததும் உண்டு. ஒரு முறை ஆழ்வார் திருநகரியில் தங்களுக்கு நெருங்கிய உறவினரான தாயவலம் தீர்த்தான் கவிராயர் வமிசத்தினர் வீட்டிற்குத் தாம் தூத்துக்குடியிலிருந்து வருவதாகவும், அச்சமயம் என்னை அங்கு வரும்படியாகவும் கடிதம் எழுதியிருந்தார்கள். விடுமுறைக் காலமானதால் எனக்கும் சௌகரியம் இருந்தது. அவர்கள் கடிதத்தின்படியே அங்குச் சென்று ஏட்டுச் சுவடிகளைப் பரிசோதித்து வேண்டிய சுவடிகளை எடுத்து வந்தேன்.

## தமிழாராய்ச்சித் துறைத் தலைவர்

1936ல் சென்னை சர்வ கலாசாலையில் தமிழாராய்ச்சித் துறைத் தலைவரது நியமனம் நடைபெற இருந்தது. அதற்கு நான் முயன்று வந்தேன். எனது உற்ற நண்பர்கள் போல் பாவித்து ஒழுகி, யாதொரு தகுதியுமற்ற தமக்கு அந்த வேலை கிடைக்க வேண்டும் என்று சிலர் முயற்சி செய்ததும் உண்டு. அச்சமயம் வ. உ. சி. அவர்கள் சென்னைக்கு வரநேர்ந்தது. பிறர் செய்யும் முயற்சிகளையெல்லாம் ஒருவாறு தெரிந்து கொண்டு, தாமே என்னிடம் வந்து, இம்முயற்சியில் நான் வெற்றிபெற வேண்டும் என்று எடுத்துக் கூறினார்கள். நாங்கள் இருவரும் பதிப்பித்த

தொல்காப்பியப் பிரதிகள் சில தந்து, அவற்றை நியமனக்கமிட்டி அங்கத்தினர்களுக்கு அனுப்ப வேண்டும் என்று வற்புறுத்திச் சொன்னார்கள். **உள்ளத் தூய்மையோடு கூறிய இந்த மொழிகள் எனக்குப் பெரியதோர் ஊக்கத்தைக் கொடுத்தன. இம்முயற்சியில் நான் வெற்றியும் பெற்றேன்.** இந்நிகழ்ச்சிக்குப் பின்பு விடுமுறைக் காலத்தில் நான் திருநெல்வேலியிலிருந்து தூத்துக்குடிக்கு வந்து வ. உ. சி. அவர்களைச் சந்தித்தேன். நாங்கள் இருவரும் ஒரு நாள் முழுவதும் கலந்து பேசிக் கொண்டிருந்தோம். இதுவே வ. உ. சி. அவர்கள் எனக்கு அளித்த கடைசிக்காட்சி.

## தேசப்பற்றும் மொழிப்பற்றும்

நாட்டுப் பற்றும் மொழிப்பற்றும் நெருங்கிய சம்பந்த முடையன. மொழிப்பற்றிலே தொடங்கி அதிலேயே நான் வாழ்ந்து வருகிறேன். தேசப்பற்று மொழிப்பற்றின் அடுத்தபடியாகத்தான் என் உள்ளத்தில் நிலவுகிறது. நாட்டுப் பற்றில் வ.உ.சி. அவர்கள் முனைந்து நின்று, பிற்காலத்தில் மொழிப்பற்றில் அமைந்து விட்டார்கள். வ.உ.சி. அவர்களை நான் மறக்க முடியாது. அவரது சீரிய குணங்களை நினைக்குந்தோறும் எத்தனை சிறந்த தமிழ்ப் பெரியாரை நாம் இழந்து விட்டோம் என்ற உணர்ச்சி மேலிட்டெழுகின்றது. அவர்களது உள்ளம் அன்பினால் எப்பொழுதும் குழைந்து நின்றது. கொழுந்து விட்டெரியும் அனல் போல, தேசபக்தியும் தாய் மொழிப்பற்றும் அவரது ஆன்மாவில் எப்பொழுதும் கனன்று ஜொலித்துக் கொண்டிருந்தன. இப் பெருமகனாரிடத்து அமைந்து கிடந்த பிள்ளைமையுள்ளம் தனிப்பட்ட வசீகர சக்தி வாய்ந்தது. வ.உ.சி.யின் சரீரம் மறைந்துவிட்டது. ஆனால் அவரது பெரும்புகழ் தமிழ் மக்கள் உள்ளத்தில் என்றும் ஒளிர்ந்து கொண்டிருக்கும் என்று எஸ்.வையாபுரிப்பிள்ளை, வ.உ.சி. குறித்து சீரிய கருத்துக்களைத் தமிழ் உலகத்திற்கு வழங்கியுள்ளார்.

*எஸ்.வையாபுரிப்பிள்ளை தமிழ்ச்சுடர் மணிகள், சென்னை, 1959 பக்கம் 376 - 383.*

## பி.ஸ்ரீ. ஆச்சார்யா (16.4.1886 - 28.10.1981)

பிச்சு அய்யங்கார் - பிச்சு அம்மாள் தம்பதியரின் புதல்வர் பி.ஸ்ரீ. ஆச்சார்யா, நான் அறிந்த தமிழ்மணிகள் நூல் இரு

தொகுதிகள் தந்துள்ளார். முதல் தொகுதி 1971 பக்கங்கள் 364, இரண்டாம் தொகுதி 1988, பக்கங்கள் 470.

முதல் தொகுதியில் பி.ஸ்ரீ., வீரத்தமிழர் சிதம்பரம்பிள்ளை என்ற தலைப்பில் வழங்கியுள்ள புகழுரை இதோ;

## வீரத் தமிழர் சிதம்பரம் பிள்ளை - முடிசூடா மன்னருக்கு ஒரு முடி

இவர் கதை ஒரு காவியம்; உணர்ச்சி ஒரு தேசிய வெள்ளம். கீர்த்தியை மட்டுமா, மூர்த்தியையும் மறப்பதற்கில்லை, நல்ல உடற்கட்டு; ஆள் குட்டை. உருண்டை முகம், திரண்ட புயம். நிமிர்ந்த நேரான நோக்கு. பணிவுடன் துணிவைப் புலப்படுத்தும் மீசை. திருநெல்வேலிக் கறுப்பு நிறம்தான்; ஆனால் அஞ்சன மேனியில்லை, அழகு சற்றுக் கறுத்திருக்கிறது! என்று சொல்லத்தக்க நல்ல கவர்ச்சியான தோற்றம். பிற்காலத் தேசபக்தர்களைப் போல் இல்லாமல், மேல் அங்கியும் அங்க வஸ்திரமும், முடிசூடா மன்னருக்கு ஒரு முடி போலத் தோன்றிய தலைப்பாகையும் வீர சிதம்பரம் பிள்ளையை அறிவித்தன அந்தக் கூட்டத்திலே.

சுமார் அறுபதாண்டுக்கு முன் ஒரு நாள் மாலைப்பொழுதில் நெல்லைக் கலாசாலை ஒன்றில் பாடங்கள் முடிந்ததோ இல்லையோ? மாணாக்கர்கள் வகுப்புகளிலிருந்து வேகமாக வெளியே வந்தனர். பலரும் வழக்கம் போல் வீட்டுக்குப் போகவில்லை; நகரத்துக் கீழ ரத வீதி அம்மன் கோயிலை நோக்கிச் சென்றார்கள். அவர்களுள் நானும் ஒருவன். சந்நிதிக்கு எதிரேபோய்க் காத்திருந்தோம். தெய்வ தரிசனத்துக்கு அன்று அங்கே விரைவில் கூட்டம் அதிகரித்து அவரும் குறித்த நேரத்தில் வந்து பேசத் தொடங்கினார். தமிழில் தான்.

## தமிழில் அழகாக - ஆற்றலுடன்

அக்காலத்தில் பொதுக் கூட்டங்களிலும் கூட வக்கீல்களும் பிறரும் ஆங்கிலத்தில் பேசுவார்கள். தமிழில் அழகாக, ஆற்றலுடன் பேச முடியுமா!" என்று கேட்ட சந்தேகப் பிராணிகளும் உண்டு. ஆனால் சிதம்பரம் பிள்ளை தட்டுத் தடங்கலின்றி அரசியல் கருத்துக்களையும் பொருளாதாரக் கொள்கைகளையும் தெளிவாக, கோவையாக எடுத்துரைத்தார்.

## நரசிங்கம்

பாதி மனிதனும் பாதி சிங்கமுமாகத் தோன்றிய நரசிங்கம் போல் பாதி அரசனும் வணிகனுமாக இருந்த வெள்ளையன் ஏழைகளின் இரத்தத்தை உறிஞ்சுகின்றான்! என்பது போன்ற விஷயங்களை . நேரடியாக உள்ளம் உள்ளத்தைத் தொட்டுப் பேசுவதுபோல் பேசினார். ஏன், உள்ளம் உள்ளத்தைத்தாக்கி உணர்த்தியதாகவும் தோன்றியது. சுமார் ஒரு மணி நேரம் நடந்த அரசியல் காலட்சேபத்திலே சொட்ட நனைந்து உளம் குளிர்ந்து நின்றேன்.

## தேசீய வெள்ளக் காட்சி

விபின சந்திரருடன் திலகர், அரவிந்தர், லஜபதிராய் அவர்களும் சேர்ந்து நான்கு தீவிர தேசபக்த மூர்த்திகளாய் எங்கள் அகக் கண்ணுக்கு இலக்காயினர். இந்த நால்வரின் கொள்கைகளையும் ஒரே தேசியப் புதுவெள்ளமாக நெல்லை மாணாக்கர்களுக்கும் பொது மக்களுக்கும் காட்டியவர்கள் சிதம்பரம் பிள்ளையும், சுப்பிரமணியசிவாவும், சுப்பிரமணிய பாரதியும் ஆகிய மூவருமேயாவர்.

புது வெள்ளம் பார்ப்பதில் பெருமகிழ்ச்சி கொண்டிருந்து நான் திருநெல்வேலி சந்திப்பாகிய வீரராகவபுரத்தில் ஊருக்குச் சமீபமாக ஓடும் தாமிரபரணியில் மேடான கரைப் புறத்திலிருந்தும் உயரமான பாலத்தின் மீதிருந்தும் ஆற்று வெள்ளம் பயங்கரமாய்ச் சுழற்றி ஓடும் அழகைப் பார்த்துப் பார்த்து அனுபவித்திருக்கிறேன். திருநெல்வேலித் தமிழர் களிடையே பொங்கிப் பெருகிய தேசீயப் புது வெள்ளத்தைக் கண்டபோதும். நான் அத்தகைய அனுபவம் அடைந்தேன்; அதிசயித்தேன், ஆனந்தமுற்றேன்; அச்சமும் கொண்டேன்.

## சிதம்பரம் பிள்ளையின் சிம்மக் குரல்

விரைவில் அந்த வெள்ளத்தின் வீர முழக்கமாகிவிட்டது சிதம்பரம் பிள்ளையின் சிம்மக் குரல். அக்காலத்திலே பொதுக் கூட்டம் கூட்டித் தமிழில் உணர்ச்சியுடன் பேசும் முறையைப் பிரசித்தமாக்கியவர் சிதம்பரம் பிள்ளையே. உள்ளொன்று வைத்துப் புறமொன்று பேசத் தெரியாதவர்; அரசியல் பிரச்சினைகளை நேர்மையாகவும், கூர்மையாகவும் அலசிப்

பார்ப்பவர். தொழிலாளிகளின் துயரங்களும் ஏழை மக்களின் இன்னல்களும் கள்ளங்கபடு அறியாத இவர் இதயத்தை வாட்டி வதைத்தன.

## வீர உள்ளம்

ஆயுள் தண்டனை குறைக்கப்பட்டதும், தாம் விரும்பிய படி தமிழ் நூல் எழுத இவருக்கு வசதி கிடைத்ததும் தேச பக்தர்களின் உள்ளத்திற்கு ஒருவாறு ஆறுதல் அளித்தன. தமிழ்க் காதலிலும், சிறப்பாகத் திருக்குறள் ஆராய்ச்சியிலும் இவர்தம் சிறைத் துன்பங்களை மறக்கத் தொடங்கினார்.

பின்னாளில் காங்கிரஸ்காரர் அனுபவித்த சிறைவாசம் வேறு. சிதம்பரம்பிள்ளை அனுபவித்த சிறைவாசம் என்ற நரகவாசம் வேறு. ஆனால் அத்தனை துன்பங்களும் உடலை வருத்தின வேயன்றி, இவரது வீர உள்ளத்தை, ஞானக் குழந்தையுள் ளத்தை அடியோடு கெடுத்துவிடவில்லை.

## இன்னிலை

'இன்னிலை' என்ற ஒரு நூலைப் பதினெண்கீழ்க் கணக்குகளில் ஒன்று என்று சிதம்பரம்பிள்ளை வெளியிட்டிருக்கிறார். அதன் கையெழுத்துப் பிரதியைப் புகையேற்றி பழைய ஏட்டின் பிரதியென்று ஒரு பண்டிதர் இவர் கையில் கொடுத்தார். அவரை நம்பித்தான் சிதம்பரனார் அதை வெளியிடலானார். உண்மையில் அந்தப் பிரதி அப்பண்டிதரின் ஒரு விசுவாமித்திர சிருஷ்டிதான்! அதற்காக அவர் வ.உ.சி.யிடம் பணம் பெற்றுக் கொண்டார். அதே போலிப் புலவர் ஒரு சமயம் வ. வே. சு. ஐயரையும் இவ்விதமாக ஏமாற்றி விட்டார்!

## வெள்ளை உள்ளம்

சிதம்பரனாரின் வெள்ளையுள்ளத்திற்கு மற்றும் ஓர் உதாரணம் நினைவிற்கு வருகிறது. இரசிகமணி டி. கே. சி. கம்பன் பாடல்களைத் திருத்தி வருகிறார் என்று சிதம்பரம் பிள்ளை திருக்குறளையும் திருத்தத் துணிந்துவிட்டார் தம் திருத்தங்களில் சிலவற்றை இவர் சொல்ல , என் நண்பருள் ஒருவர் சீடர்போல் குறித்துக் கொண்டிருந்தார். பிள்ளை விடைபெற்றுச் சென்றபின், அந்த நண்பர் என்னை நோக்கி,

''நான் இந்தப் பாட பேதங்களை ஒப்புக்கொள்ளவில்லை'' என்றார். நான் திகைத்துப் போனேன். நண்பரோ , ''அந்தப் பெரியாரின் பொன்னான உள்ளத்தைப் புண்ணாக்க விரும்பாமல் தான் அத்திருத்தங்களை எழுதி வந்தேன் என்று தொடர்ந்து கூறினார். ஆனால் இந்த உதாரணங்களிலிருந்து சிதம்பரம்பிள்ளையின் தமிழ்ப் புலமையையும் ஆராய்ச்சித் திறனையும் கூட லேசாக மதிப்பிடுவது சரியன்று.

*மி.ஸ்ரீ. ஆச்சார்யா, நான் அறிந்த தமிழ்மணிகள், முதல் பகுதி, சென்னை 1988 பக்கம் 27 – 31.*

## டாக்டர் வரதராஜுலு நாயுடு

தந்தை பெரியாரின் நண்பர் டாக்டர் வரதராஜுலு நாயுடு (4.6.1887 – 23.7.1957) பெருமாள் – குப்பம்மாள் தம்பதியரின் தவப்புதல்வர் 'பிரபஞ்சமித்திரன்', தமிழ்நாடு பத்திரிகைகளின் ஆசிரியர்.

## 1932 இந்தியன் எக்ஸ்பிரஸ் தொடக்கம்

1932 செப்டம்பர் ஐந்தாம் தேதி வ.உ.சி. பிறந்த தினத்தில் இந்தியன் எக்ஸ்பிரஸ் என்ற ஆங்கில இதழை வரதராஜுலு நாயுடு துவங்கினார். அது சென்னையில் தி நியூ இந்தியன் எக்ஸ்பிரஸாக இப்போது உலா வருகிறது.

## வ.உ.சி. வாழ்த்திய வரதராஜுலு மகள் திருமணம்

1932 செப்டம்பர் 9ஆம் நாள் வரதராஜுலுவின் முதல் மகள் லீலாவதியை (19 வயது) செல்வன் இராமசந்திரன் மணந்தார். மண விழாவில் வ.உ. சிதம்பரம் பிள்ளை கலந்துகொண்டு வாழ்த்தினார். அவர் அளித்த வாழ்த்துப்பாவில் இடம்பெற்றிருந்த வரதராஜுலு பற்றிய வரிகள் கீழ்வருவன.

சாற்றரு நோய் தீர்த்திடு மின்சாரரசம் கண்டோன்
ஆற்றார்க்கெல்லாம் அசோகன் ஹாஸ்பிற்றல் ஆக்கினோன்
இந்தியன் எக்ஸ்பிரஸ் எவ்வுலகும் போக்கினோன்
இந்தியர்க் கேற்ற இறை.

காங்கிரஸ் இயக்கம் திலகர் சுயராஜ்ய நிதி திரட்டியது. அதில் பெரும்பங்கு வகித்தவர் வரதராஜுலு நாயுடு.

## 1920 திலகர் சுயராஜ்ய நிதி

காங்கிரஸில் சமூகத்தின் அடித்தள மக்களைப் பங்கு கொள்ளச் செய்வது முக்கியம் என காந்தி நாகபுரி காங்கிரஸ் முடிந்த வேளையில் கருதினார். அதற்கு வசதியாகக் காங்கிரஸின் உறுப்பினர் சந்தாத் தொகையைக் குறைத்தார். ஓராண்டுக்குள் ஒரு கோடி உறுப்பினர்களைச் சேர்க்க முடிவெடுத்தார். ஓராண்டுக்குள் ஒரு கோடி ரூபாய் நிதி சேர்க்க வேண்டும் என்றார். அப்படிச் செய்தால் 1921-ம் ஆண்டு முடிவதற்குள் முழு விடுதலையைப் பெற்றுத் தருவதாக மக்களிடம் காந்தி உறுதி கூறினார். சுயராஜ்யம் எனது பிறப்புரிமை என்ற முழக்கத்தைத் தந்து அப்போதுதான் காலமாகியிருந்த பால கங்காதர திலகர் (1856 – 1920) நினைவாக அந்நிதிக்குத் ‘திலகர் சுயராஜ்ய நிதி’ எனவும் பெயர் சூட்டினார்.

## வரதராஜுலுவுக்குப் பெரும் பங்கு

1921 செப்டம்பரில் தமிழ்நாட்டில் சுற்றுப்பயணம் செய்த காந்தியிடம் சென்னை மாகாண சுயராஜ்ய நிதி ரூ. 23209-0 6-கையளிக்கப்பட்டது. (தமிழ்நாட்டில் காந்தி, ப. 377). இந்த நிதியைத் தமிழகம் முழுவதும் பயணம் செய்து வசூலித்ததில் வரதராஜுலுவுக்குப் பெரும் பங்கு இருந்தது.

வரதராஜுலுவின் தமிழ்நாடு அச்சகத்தில் அச்சிடப் பெற்ற, திலகர் சுயராஜ்ய நிதியின் தமிழ் மாகாண வசூல் பட்டியல் என்ற சிறு பிரசுரம், காங்கிரஸ் செயலாளர் ச.ராஜகோபாலாச்சாரியாரால் தயாரிக்கப்பட்டிருக்கிறது. 10, நவம்பர் 1921இல் வெளியான அப்பிரசுரத்தின் விலை ஓரணா பக்கம் 88 + 8. கொடையாளர் பெயர், வசூல் முறை, வசூல் தொகை ஆகிய விவரங்கள் மாவட்ட வாரியாகத் தரப்பட்டுள்ளன.

பெரியார், வ.வே.சு. ஐயர், டி.எஸ்.எஸ். ராஜன், ராய. சொக்கலிங்கன் எனப் பிரபலமான பெயர்கள் கொடையாளர் பட்டியலில் உள்ளன. தனிநபர், உண்டியல், கல்யாண சம்பாஷணை முறையிலும் மோதிரம், சங்கிலி எனப் பொருள் வகையிலும் நிதி சேகரிக்கப்பட்டுள்ளது. நூலை அச்சிற்குக் கொடுத்த பின் கிடைத்த தொகை விவரம் பின்னிணைப்பாக (எட்டு பக்கம்) அமைந்துள்ளது.

சேலம் மாவட்டக் குறிப்பில் சேலம் ஆதிநாராயண செட்டியார் மனைவி (50), பி.வி. நரசிம்மையார் (50), மின்சார ரசம் கம்பெனி (25), டாக்டர் வரதராஜுலு நாயுடு (100), டாக்டர் வரதராஜுலு நாயுடு காப்பு நிதி (312220), மேற்படி (100) என்னும் விவரம் காணப்படுகிறது.

கம்பெனி மூலமும் தனிப்பட்ட முறையிலும் மட்டுமல்லாமல், தனக்காகச் சேர்ந்த பணத்தையும் வரதராஜுலு சுயராஜ்ய நிதிக்கு அளித்தார் எனத் தெரிகிறது. "எனது மதுரை வழக்குக்காக வசூலான பாதுகாப்பு நிதியில் ரூபாய் 3000 மீதியிருந்தது... முடிவில் மகாத்மா காந்தி ஆரம்பித்த திலகர் சுயராஜ்ய நிதிக்கு மேற்படி மூவாயிரம் ரூபாயையும் கொடுத்தேன்" எனத் தமிழ்நாடு (19 ஏப்ரல் 1935) இதழில் தெரிவித்துள்ளார்.

## டாக்டர் நாயுடுவின் விரதம்

சுயராஜ்ய நிதியின் தமிழ்நாட்டுப் பங்காகக் குறிப்பிட்ட தொகை வர வேண்டும் என காந்தி ஆணை பிறப்பித்திருந்தும் 1923ஆம் ஆண்டு வரை அத்தொகை வசூலாகவில்லை. 1921இல் காந்தியிடம் அளிக்கப்பட்டது ரூ.23 ஆயிரம். இந்நிலை கண்டு வருந்திய வரதராஜுலு சுயராஜ்ய நிதிக்கு தன் சார்பில் மேலும் ரூ.1000 அளித்தார்.

தொண்டர் படையைப் பணம் திரட்டும்படி சுயா காங்கிரஸின் உத்திரவு பிறந்து நான்கு மாதங்களாகியும் தமிழ்நாட்டில் ஒரு காரியமும் ஆகவில்லை . தமிழ் நாட்டிற்கு இஃதோர் பெரிய மானக்கேடாகும். குறைந்தது ரூ.25,000 தமிழ்நாட்டில் சேருகிறவரையில் நான் எனது வீட்டிற்குள் நுழையப் போவதில்லை. பணம் சேர்க்க வேண்டியதன் அவசியத்தையும் அதில் எனக்கிருக்கும் ஊக்கத்தையும் உங்களுக்கும் தமிழ்நாட்டிற்கும் காட்டும் பொருட்டு சுயராஜ்ய நிதிக்கு இன்று நான் ரூ.1000 கொடுக்கிறேன். 1923 மார்ச்சு 22இல் கல்லிடைக்குறிச்சி தேசிய பாட சாலையின் ஆண்டு விழாவில் தலைமை வகித்த வரதராஜுலு மேற்கண்டவாறு பேசியதாக டாக்டர் நாயுடுவின் விரதம்' என்ற தலைப்பில் தமிழ்நாடு செய்தி வெளியீட்டுள்ளது.

பழ. அதியமான், பெரியாரின் நண்பர் வரதராஜுலு நாயுடு, நாகர்கோவில் 2012, பக்கம் 44-45.

சாந்திக்கு மார்க்கம் நூலில் வ.உ.சி. செய் நன்றியறிதல் தலைப்பில் எழுதியதை முன்னரே பார்த்துள்ளோம்.

## சஷ்டி பூர்த்தி நிதி

வ.உ.சி.யின் பொருளாதார நிலையை அறிந்த வரதராஜுலு நாயுடு, சஷ்டிபூர்த்தி நிதி திரட்டி ஆயிரம் ரூபாய்க்கு மேல் அந்தக் காலத்தில் வழங்கியவர்.

சிறந்த தேசாபிமானி, பெரிய ராஜதந்திரி, எனது நண்பர் தமிழ்நாடு ஆசிரியர் பி.வரதராஜுலு நாயுடு என்று வ.உ.சி அவருக்கு புகழாரம் வழங்கியுள்ளார்.

## த.வேதியப்ப பிள்ளை

வ.உ.சி.யின் பல நூல்கள் த.வேதியப்பிள்ளை அவர்களது உதவியால் அச்சிடப்பட்டது என்று முன்னரே பார்த்துள்ளோம். தட்சிணாமூர்த்தி பிள்ளை – சுந்தரதாட்சியின் தவப்பிள்ளை வேதியப் பிள்ளை *1900* இல் இந்தியாவிலிருந்து பிழைக்க வழிதேடிச் சென்ற தில்லையாடி ஊரைச் சேர்ந்தவர்.

## மாதாமாதம் பணம்

வ.உ.சி. சிறையில் வசித்த காலத்தில் மாதமாதம் ஐம்பது ரூபாய் பணம் அனுப்பியவர் த.வேதியப்ப பிள்ளை ரொக்கமாக ரூபாய் *2000* அனுப்பி வைத்தவர். மகாத்மா காந்தியிடம் *1912* இல் வ.உ.சி.யிடம் கொடுக்குமாறு ரூ.*5000*ஐ கொடுத்து அனுப்பியவர் த.வேதியப்ப பிள்ளை.

## கோபாளி

வணிகரான கோபாளி முஸ்லிம். காந்தியடிகள், பம்பாயில் (மும்பை) வாழும் அந்த முஸ்லிம் வணிகரிடம் சென்று *5000* ரூபாயைப் பெற்றுக் கொள்ளுங்கள் என்று காந்தியடிகள் வ.உ.சி.யிடம் கூறினார். அவ்வாறே வ.உ.சியும் தண்டபாணிப்பிள்ளையும், வேதியப்ப பிள்ளையும் சென்றனர். காந்தி ஆணைப்படி *1912* இல் கொடுத்தனுப்பிய பணத்திற்கு வட்டியும் சேர்த்துக் கொடுத்தார் கோபாளி. ஆனால் வட்டித்தொகையை வாங்க வ.உ.சி. மறுத்தார்.

5000 ரூபாய் மட்டும் பெற்றுக் கொண்டார். இதற்கு திலகர் உதவியாக இருந்தார்.

*அனிதா கு.கிருஷ்ணமூர்த்தி, காந்தி கணக்கு, திருப்பூர் 2014, பக்கம் 37 – 38.*

தென் ஆப்பிரிக்காவிலிருந்து த.வேதியப்பபிள்ளை, அண்ணல் காந்தியடிகள் மூலம் 1912 இல் கொடுத்து அனுப்பிய பணம் ரூபாய் 5000. அதனை 1920 இல் பெற்றவர் வ.உ.சி.

## பத்து நாட்கள் தில்லாடியில்

வேதியப்ப பிள்ளை தில்லையாடி வந்ததை அறிந்த வ.உ.சி. 1926இல் கோவில்பட்டியிலிருந்து தில்லையாடி சென்றார். அங்கு தற்போது கிராம பொதுநலச்சங்க திருமண மண்டபம் இருந்த இடத்தில் இருந்த வேதியப்ப பிள்ளையின் வீட்டில் பத்து நாட்கள் தங்கி இருந்தார் வ.உ.சி. இருவரும் தமிழால் இணைந்த நண்பர்கள் ஆவர். வேதியப்பபிள்ளை 15.12.1949இல் மறைந்தார். திலகரின் மறைவிற்குப் பிறகு வ.உ.சிதம்பரம்பிள்ளை, தீவிர அரசியலில் இருந்து ஒதுங்கிவிட்டார் என்று வெ.சாமிநாத சர்மா குறிப்பிடுகிறார்.

*வெ.சாமிநாத சர்மா, நான் கண்ட (நால்வர்) புதுக்கோட்டை, 1959, பக்கம் 170.*

## தந்தை பெரியார்

தந்தை பெரியாருக்கும், வ.உ.சி.க்கும் இடையே நல்ல நட்பு இருந்தது. வ.உ.சி பெரியாருக்கு எழுதிய பல கடிதங்களை ஆ.ரா.வெங்கடாசலபதி தனது வ.உ.சி. கடிதங்கள் நூலில் தெரிவித்துள்ளார்.

## வ.உ.சி.யும் பெரியாரும்

எளியேன் 1996 இல் வ.உ.சி.யும் பெரியாரும் என்ற சிறுநூலை வெளியிட்டேன். 1907 இல் சூரத்தில் நடைபெற்ற காங்கிரஸுக்கு தனது சொந்தப் பணத்தில் 50 பேர்களை அழைத்துச் சென்றவர் வ.உ.சி.

*செ.திவான், வ.உ.சி.யும் பெரியாரும், சுஹைனா பதிப்பகம், பாளையங்கோட்டை 1996, பக்கம் 12.*

## மடத்துப்பட்டி கோபால் நாயக்கர்

தமிழர் தலைவர் வைகோ எம்.பி. அவர்களின் தாத்தா மடத்துப்பட்டி கோபால் நாயக்கர் (மானா கோனா) (*1892 – 28.10.1951*) வ.உ.சி கோவில்பட்டியில் வாழ்ந்தபோது நன்கு பழகியவர்கள். நல்ல நண்பர்கள். வ.உ.சி.யுடன் மடத்துப்பட்டி கோபால் நாயக்கர் இருக்கும் புகைப்படம் கோவில்பட்டி ஒரு சலூன் கடையில் இருந்தது என்பார் முன்னாள் எம்.பி. பி.இராமமூர்த்தி.

*பி.ராமமூர்த்தி, நாம் கடந்து வந்த பாதை, 2019, பக்கம் 86.*

## கோவில்பட்டியில் பள்ளிக்கூடம்

வ.உ.சிதம்பரம் பிள்ளையுடன் நல்ல நட்புடன் இருந்தவர் மடத்துப்பட்டி கோபால் நாயக்கர். வ.உ.சியின் உதவியால் கோவில்பட்டியில் உயர்நிலைப்பள்ளி நிறுவ ஏற்பாடுகள் செய்தார். பள்ளியின் முதல் தலைமை ஆசிரியர் திரு. சிவகொழுந்து முதலியார் M.A., L.itt.

## டி.எஸ். ஆதிமுலம்

முக்கூடல் டி.எஸ். ஆதிமுலம் திருநெல்வேலி ஜில்லா போர்டு தலைவராக இருந்தபோது (*1950 – 1951*) இந்தப் பள்ளிக்கூடம் வ.உ.சி. உயர்நிலைப்பள்ளியாக மாறியது. இதற்கு மடத்துப்பட்டி கோபால் நாயக்கர் காரணமாக இருந்தார்.

*முற்கூறிய நாம் கடந்து வந்த பாதை நூல், பக்கம் 88.*

## அக்கிரகாரத்து அதிசய மனிதர் வ.ரா.

அறிஞர் அண்ணா அவர்களால் *2.9.1951* திராவிட நாடு இதழில் அக்கிரகாரத்து அதிசயப் பிறவி என்று போற்றப்பட்டவர் வ.ராமஸ்வாமி என்ற வ.ரா. (*17.9.1889 – 2.9.1951*)

*சிட்டி, பெ.சு.மணி, அதிசயப்பிறவி வ.ரா. கோவை 1999, பக்கம் 145, 146*

பல்வேறு நூல்கள், நாவல்கள், சிறுகதைகள், கட்டுரைகள் எழுதியவர் வ.ரா. அவரது தமிழ்ப் பெரியார்கள் என்ற நூலினை தமிழ்ப் பண்ணை சென்னை வெளியிட்டது. சக்கரவர்த்தி ராஜகோபாலாச்சாரியார், ஈ.வெ. ராமசாமி நாயக்கர், திரு.வி.

கலியாணசுந்தர முதலியார், டாக்டர் வரதராஜுலு நாயுடு, மதுரை ஜியார்ஜ் ஜோசப், தீரர் சத்தியமூர்த்தி, எஸ்.எஸ்.வாசன், கே.பி.சுந்தராம்பாள், என்.எஸ். கிருஷ்ணன், நாமக்கல் கவிஞர் வெ. ராமலிங்கம் பிள்ளை இவர்களைப் பற்றி எழுதியுள்ள அந்த நூலில் வீரத்தலைவர் வ.உ.சி. பற்றி வ.ரா.குறிப்பிடுவார்.

## உணர்ச்சிக் களஞ்சியம்

“பிள்ளையவர்கள் (வ.உ.சி.) திலகர் கோஷ்டியைச் சேர்ந்தவர். ராஜதந்திரி காந்தியின் சாத்வீக ஒத்துழையாமையில் அவருக்குப் பற்று கிடையாது. நம்பிக்கையும் இல்லை. பிள்ளையவர்கள் உணர்ச்சிக் களஞ்சியம் ரொம்ப யோக்கியம், அற்பத்தனம் சிறிதும் இல்லாதவர். பொய் நடையையும், வஞ் சகப் பேச்சையும் அறவே ஒழித்தவர், வெறுத்தவர். அரசியல் உலகில் சாதாரணமாய் காணப்படும் உபாயங்களைப் பிள்ளையவர்கள் (வஉசி) கைக்கொண்டு வந்திருப்பாரானால் அவர் என்றைக்கும் தலைவர் என்று மதிக்கப்பட்டு பிரசங்க முழக்கத்தில் ஈடுபட்டுக்கொண்டே வந்திருப்பார். வேஷம் போடத்தெரியாததனால் யோக்கியராய் அவர் அஞ்சாத வாழ்வு வாழ்ந்து வர நேர்ந்தது.

*வ.ரா. தமிழ்ப் பெரியார்கள், தமிழ்ப் பண்ணையார், ஜூலை, 1943, பக்கம் 99*

தமிழ்நாட்டில் அக்காலத்தில் அதிகார வர்க்கத்தினர் கண்டு நடுங்கியது யார் என்று நினைக்கிறீர்கள்? சிதம்பரம் பிள்ளைதான் என்பார் வ.ரா.

## மரகத மீனாட்சி ராஜா

வ.உ.சி.யின் குடும்பத்தார் யாரேனும் வ.உ.சி.யின் நூல்களை மறுபதிப்பு செய்துள்ளனரா? என்ற கேள்வி எழும்.

வ.உ.சி. வாலேஸ்வரனின் திருமகளார் மரகத மீனாட்சி ராஜா, M.A., M.Phil (பிரெஞ்). வ.உ.சி.யின் மெய்யறம் நூலை இளைஞர்கள் முன்னேற வ.உ.சி. வழிகாட்டும் நல்வழிகள் என்று 2010 இல் பதிப்பித்துள்ளார். மெய்யற நூலின் சில பக்கங்கள் அவரிடம் இல்லை. அதனை அப்போது அவர்களுக்கு அடியேன் அனுப்பி வைத்தேன்.

## சி.பி.சுப்பையா - வெள்ளிங்கிரி கவுண்டர்

*1919* ல் சென்னையில் வாழந்து வந்த வ.உ.சியை கோவைக்கு அழைத்துச் சென்றவர்கள் சி.பி. சுப்பையா, வெள்ளிங்கிரி கவுண்டர் ஆவார்கள். கோவையில் தொழிலாளர் இயக்கத்தை ஆரம்பிக்க எண்ணி வ.உ.சி. குடிபெயர்ந்தார்.

## சுப்பராய ஆச்சாரி

கோயம்புத்தூர் மால் மில் ரோட்டில் சுப்பராய ஆச்சாரி வீட்டில் வ.உ.சி. குடியமர்ந்தார். ஏற்கனவே கோவையில் வழக்கறிஞர் சி.கே.சுப்பிமரணிய முதலியார், வ.உ.சி.யின் நண்பர்.

## ஜெயில் வார்டன் கே.ராமையக் கவுண்டர்

வ.உ.சி. ஜெயிலில் இருந்து அவருக்கு உறுதுணையாக இருந்த ஜெயில் வார்டன் கே.ராமையக் கவுண்டர் அதன் காரணமாகவே, அவர் தனது வேலையை இழந்தார்.

## C.S. இரத்தின சபாபதி முதலியார்

கோவை நகராட்சியில் *1920 – 1921* இல் தலைவராக சி.எஸ். இரத்தின சபாபதி முதலியார்.

## R.K. சண்முகம் செட்டியார்

சுதந்திர இந்தியாவின் முதல் நிதியமைச்சரான ஆர்.கே. சண்முகம் செட்டியார்.

## N.S. இராமசாமி அய்யங்கார்

ஹோம் ரூல் இயக்கப் பிரமுகர் என்.எஸ். இராமசாமி அய்யங்கார்.

## C.S. இராமச்சந்திரன் செட்டியார்

தமிழ் மேதை C.S. இராமச்சந்திரன் செட்டியார்

## T.A. இராமலிங்கம்

கூட்டுறவுத் தந்தை டி.ஏ. இராமலிங்கம் செட்டியார், கோவையில் வ.உ.சி.யின் நண்பர்கள்.

## கோயமுத்தூர் தொழிலாளர் பேங்க் அண்டு ஸ்டோர்ஸ்

கோயமுத்தூரில், ‘கோயமுத்தூர் தொழிலாளர் பேங்க் அண்டு ஸ்டோர்ஸ் லிமிடெட், கம்பெனி, சட்டப்படி பதிவுசெய்யப்பட்டது. வ.உ.சி. அதில் சிறப்பாகப் பணியாற்றி தொழிலாளர்களுக்கு நன்மைகள் பல வழங்கினார்.

## கோவையில் பிளேக்

கோவையில் வ.உ.சி. வாழ்ந்தபோது கொடிய பிளேக் நோயால் மக்கள் மடிந்தனர். வ.உ.சி. தங்கியிருந்த வீட்டின் சொந்தக்காரரர் சுப்புராய ஆச்சாரி, முதல்நாளில் வ.உ.சி.யுடன் பேசிச் சென்றவர் மறுநாள் பிளேக் நோயால் மடிந்தார்.

## திருப்பேரூர்

உடனே வ.உ.சி. கோவை மால் மில் ரோட்டிலிருந்து மாறி, ஆர்.கே.சண்முகம் செட்டியார் உதவியுடன் கோவை திருப்பேரூர் பட்டிலிங்க சுவாமிகள் ஆசிரமத்திற்கு குடிபெயர்ந்தார்.

## கோவில்பட்டி வாழ்க்கை

*1922 முதல் 1932 வரை வ.உ.சி. கோவில்பட்டியில் வாழ்ந்தார் (ம.பொ.சிவஞானம், கப்பலோட்டிய தமிழன், பக்கம் 93,94)*

*1932* இல் ஆட்சித் துணைத்தலைவரின் தலைமையிடம் கோவில்பட்டியிலிருந்து தூத்துக்குடிக்கு மாற்றப்பட்டது.

## தூத்துக்குடி வாழ்க்கை

அதன் பின் தனது இவ்வுல வாழ்வு நிறைவடையும் வரை, *1936* நவம்பர் *18*, வ.உ.சி. தூத்துக்குடியிலேயே வாழ்ந்தார். இக்காலகட்டத்தில் வ.உ.சி.க்கு வழங்கியவர்கள், வ.உ.சி.யால் வழங்கப்பட்ட அறிவைப் பெற்றவர்கள் ஏராளம் ஏராளம்.

## ஸ்ரீ பால்நாடரர் - 12.11.1936

தூத்துக்குடி வக்கீல் சங்கத்தார் *12.11.1936* வியாழக்கிழமை அன்று ரூ.*75* கொண்ட ஓர் பணமுடிப்பை வ.உ.சி.க்கு தீபாவளிப் பரிசாக அளித்தார்கள். பணப்பையை அளிக்கையில் ஸ்ரீபால்நாடார், ஸ்ரீ பிள்ளையவர்களின் தேசச்சேவையையும், வக்கீல் தொழிலின் சாமர்த்தியத்தையும் வியந்து பேசினார்.

*ஸ்ரீ பிள்ளையவர்கள் வாய்திறந்து பேச சக்தியற்றிருந்ததினால் சந்தோஷ முகத்துடன் பணப்பையை பெற்றுக்கொண்டார். வந்திருந்த வக்கீல்களுக்கு கற்கண்டு, வெற்றிலை பாக்கு வழங்கியபின் கூட்டம் கலைந்தது.*

*தினமணி 17.11.1936 செவ்வாய்க்கிழமை*

## 13.11.1936

*13.11.1936* அன்று வ.உ.சி. பாரதியாரின் சுதந்திர உணர்ச்சி ததும்பிய கவிதைகளைக் கேட்கப் பிரியப்படுவதாக கூறினார்.

## பெ. கந்சதாமிபிள்ளை

*தூத்துக்குடி காங்கிரஸ் கமிட்டி காரியதரிசி ஸ்ரீ.பெ.கந்தசாமி பிள்ளை சில தொண்டர்களை அழைத்து வந்து வ.உ.சிதம்பரம் பிள்ளை முன்னால் நின்று, பாடும்படி செய்தார். வ.உ.சி. பாடல்களை காது குளிரக்கேட்டு வந்தனங் கூறுகையில்* **"என்னை சிறையிலடைத்து துன்புறுத்தியவர்கள் முன்னால் நான் சுதந்திர இந்தியாவில் வாழ முடியவில்லையே"** *என்று கூறினார்.*

*ஸ்ரீவ.உ.சிதம்பரம் பிள்ளை தேகநிலை தண்ணீர்கூட இறங்கவில்லை. பாரதி கீதங்களை தங்களை கேட்க ஆவல் - நமது நிருபர் - தினமணி 17.11.1936*

## 16.11.1936

"தூத்துக்குடி தேசபக்தர் ஸ்ரீ வ.உ.சிதம்பரம் பிள்ளை தேகநிலை வரவர மோசமாகிக் கொண்டே வருகிறது. *16.11.1936* முதல் ஒரு கரண்டி தண்ணீர்கூட இறங்கவில்லை. பேசவும் முடியவில்லை. ஆனால் கை ஜாடை காட்டுகிறார்.

## 18.11.1936

*18.11.1936* வ.உ.சி. இவ்வுலக வாழ்வைத் துறந்தார்.

விரிவாக ஆய்வுசெய்து பல்கலைக்கழகங்கள் செய்திட வேண்டிய பணி அது.

## ராஜாஜி - 9.12.1949 மீண்டும் கப்பல்விட

ராஜாஜி கவர்னர் ஜெனரலாக இருந்தபோது *9.12.1949* இல் தூத்துக்குடி துறைமுகத்தில் வ.உ.சி.யின் திருப்பெயரை இட்டு சிதம்பரம் என்ற கப்பலை மிதக்கவிட்டார். தற்போது

அக்கப்பல் இல்லை. மீண்டும் ஒன்றிய அரசு வ.உ.சி. பெயரால் கப்பல்விட வேண்டும் என்பது எளியேனது அவா.

## வ.உ.சி.யின் நூற்றாண்டு விழா

5.9.1972 இல் வ.உ.சி.யின் நூற்றாண்டு விழா இந்தியப் பிரதமர் இந்திரா காந்தி அம்மையார் பங்கேற்க சிறப்பாக நடைபெற்றது. தூத்துக்குடி துறைமுகத்திற்கு வ.உ.சி. பெயரினை அப்போது சூட்டினார். வ.உ.சி.யின் திருஉருவ வெண்கலச்சிலையைத் திறந்தார். தபால் தந்தி அமைச்சர் பகுகுணா வ.உ.சி.யின் தபால் தலையை வெளியிட்டார். மத்திய தொழிற்துறை அமைச்சர் சி.சுப்பிரமணியம் உரையாற்றினார்.

## கே.கே.ஷா

தமிழக ஆளுநர் கே.கே.ஷா வ.உ.சி. நூற்றாண்டு மலரை வெளியிட்டார்.

## கலைஞர் மு.கருணாநிதி

தமிழக முதல்வர் அண்ணன கலைஞர் மு.கருணாநிதி அரசாங்க செலவில் வ.உ.சியின் வெண்கலச் சிலையை நிறுவி விழாவிற்குத் தலைமை தாங்கினார். சென்னை ஜார்ஜ் டவுன் சிதம்பர நகர் என்று பெயர் சூட்டப்பட்டது. கோவை காரனேஷன் பார்க் சிதம்பரனார் பூங்கா ஆனது.

> *இதற்கு முன்னோடியாக 1952 களில் பாளை நகர்மன்றத் தலைவர் M.S. மகாராச பிள்ளை காலத்திலேயே பாளையங்கோட்டை கர்சன் திடல் வ.உசி. திடலாக மாற்றப்பட்டது.*

கோவையில் என் தந்தை வ.உ.சி ஆறுமுகம் கட்டுரை பக்கம் 91 – 102, விடுதலை வீரர் வ.உ.சி நூற்றாண்டு விழா சிறப்பு மலர், 1972, கோவை.

சென்னையில் துறைமுகத்தில் வ.உ.சி.யின் பெயரால் பிரம்மாண்டமான கட்டிடம் அமைக்கப்பட்டு, சிதம்பரம் என்ற பெயரில் இன்றும் உள்ளது.

## பேராசிரியர் க.அழகேசன்

என் பிரியத்திற்குரிய அண்ணன் நினைவில்வாழும் பேராசிரியர் க.அழகேசன், வ.உ.சி.யின் சுயசரிதையை அடியேனைப் போலவே மறுபதிப்பு செய்தார். வ.உ.சியின்

*தொல்காப்பியம் எழுத்ததிகாரம் இளம்பூரணம் நூலை 2011 இல் மறுபதிப்புச் செய்தார்.*

## சுடர் வ.உ.சி. மலர்

*வ.உ.சி. மலரை சுடர் தில்லித் தமிழ்ச்சங்கம் 1964 இல் வெளியிட்டு மகிழ்ந்தது.*

## கோம்பை அஹமத் சாகிப்

*8.4.1962 இல் கோம்பை அஹமத் சாகிபிற்கு வ.உ.சி. எழுதிய கடிதம் இதோ.*

My dear friend,

*உங்கள் 1.4.1924 கார்டு வரப்பெற்றேன். அதில்கண்டபடி புத்தகம் உடனே வி.பி. போஸ்ட் மூலம் அனுப்பியுள்ளேன். உங்களுக்கு எழுதுவதற்கு அன்று கார்டு இல்லை. நீங்கள் என் மீது கொண்டுள்ள அன்புக்கும், நீங்கள் அப்போதைக்கப்போது எனது நூல்களை விற்றுப் பணம் உதவியதற்கும் நான் உங்களுக்கு நன்றியறிதலுள்ளவனாயிருக்கிறேன்.*

*நான் சிறையிலிருந்தபோது வக்கீல் தொழில்புரியக் கூடாதென்றே கருதியிருந்தேன். வறுமையையும் இவ்வுலகத்து அறிவில்லாருடைய இகழ்ச்சியையும் நீக்குவதற்காகவே நான் மீண்டும் அத்தொழிலைத் தழுவிக் கொண்டேன். மீண்டும் அத்தொழிலைக் கொள்ளாவிடின் நானும் என் குடும்பத்தாரும் வறுமையால் நசுக்கும் நிலைமையை விரைவில் அடைந்துவிடுவோமென்று தோன்றிற்று. அதன் பின்னரே அதனைக் மேற்கொண்டேன்.*

## பேராசிரியர் ஆ. சிவசுப்பிரமணியன்

*எனது பிரியத்திற்குரிய அய்யா வ.உ.சி. வாலேஸ்வரன் அவர்கள் இந்தக் கடிதத்தை, பேராசிரியர் ஆ.சிவசுப்பிரமணியன் அவர்களுக்கு அளித்தார்கள். அவர்கள் அந்தக் கடித விவரத்தை தனது வ.உ.சி. ஓர் அறிமுகம், மக்கள் வெளியீடு நூலின் அட்டையாகவும், சென்னை, பக்கம் 54, வ.உ.சி. வாழ்வும் பணியும், திருநெல்வேலி 2006, பக்கம் 90, 91 லும் வெளியிட்டுள்ளார்கள்.*

## தேடுதல் தொடரத் தொடர

வ.உ.சி.க்கு வழங்கியவர்கள் குறித்த தேடுதல் தொடரத் தொடர செய்திகள் வந்த வண்ணமே உள்ளது. நூல் மிக நீண்டு விடுமாதலால் அத்தகைய நல்ல உள்ளங்களின் பெயர்களை மாத்திரம் குறிப்பிட்டு விட்டு நூலினை நிறைவு செய்து கொள்கிறேன். **திருநெல்வேலி ஜில்லா கோர்ட் வக்கீல் எம்.பாண்டு ரெங்கராயர், வீரவநல்லூர் சப்ரிஜிஸ்ட்ரர் வி.அ. சொக்கலிங்கம்பிள்ளை, திருநெல்வேலி ஜில்லா அஸிஸ்டண்டு சர்ஜன் மிஸ்டர் இடா.பி. ஈவர்ஸ்துரை, திருச்செந்தூர் ரெவின்யூ இன்ஸ்பெக்டர் எ.உலகநாத பிள்ளை, திருச்செந்தூர் ஹாஸ்பிட்டல் சப் அஸிஸ்டெண்ட் சர்ஜன் ஆ.ஏ. பீட்டர் பிள்ளை.**

## பொ.திருகூடசுந்தரம் - பெ.நா. அப்புஸ்வாமி

**பெருங்குளம் நா. அப்புஸ்வாமி, பொ.திருகூட சுந்தரம், கெ.அனந்தராமய்யங்கார், நெல்லை ந.சோமயாஜூலு, பெருந்தலைவர் கு.காமராஜர், திருநெல்வேலி பேட்டை ஹாஸ்பிட்டல் சப் அஸிஸ்டெண்டு சர்ஜன் பி.எட்வர்டு பிள்ளை, பாளையங்கோட்டை வக்கீல் எஸ். பழநியாண்டி முதலியார், அவரது மைத்துனர் எம்.வி. கிருஷ்ணசுவாமி முதலியார், ஒட்டப்பிடாரம் போஸ்ட் மாஸ்டர் கே.இராமசுப்பிரமணிய அய்யர்.**

## கே.எம்.அப்துல் காதர்

திருநெல்வேலி நூருல் இஸ்லாம் பிரஸ் அதிபர் மகா ஸ்ரீ கே.எம். அப்துல் காதர்.

திருநெல்வேலிப் பாலம் இரயில்வே ஸ்டேஷன் சிக்னலராய் இருந்த பாளையங்கோட்டை டி.நாராயணசுவாமி நாயுடு, அ.மு.ம. அறம் வளர்த்த சுந்தரம் பிள்ளை, கோ.க. சுப்பிரமணிய முதலியார், கோ.அ. இலக்குமணப் பிள்ளை, வ.உ. மீனாட்சி சுந்தரம் பிள்ளை, சி.சு.வ., அ.சு.வே, ஈஸ்வரமூர்த்தி பிள்ளை, பா.சி.

## சி.வ. பாப்புபிள்ளை(எ) ஞானதேசிகம்பிள்ளை

வ.உ.சி.யின் முதல் மனைவி வள்ளியம்மை மறைந்ததற்குப் பிறகு வ.உ.சி.யின் வாழ்க்கைத் துணைவியாக வந்தவர் மகராசி மீனாட்சி அம்மாள்.

வ.உ.சி.யின் தந்தை வ.உலகநாத பிள்ளையின் மைத்துனர் ஆழ்வார்திருநகரி மாசிவீதியில் குடியிருந்து வந்த சி.வ.பாப்பு பிள்ளை புதல்வியார் தான் மீனாட்சி அம்மையார் ஆவார். 8.9.1901 இல் வ.உ.சி. – மீனாட்சியம்மையார் திருமணம் நடைபெற்றது. என்.இராமலிங்கம், ஞா.சுப்பிரமணியப்பிள்ளை, வா.திருவரங்கம் பிள்ளை, சுப்பம்மாள், இ.மு.சுப்பிரமணிய பிள்ளை, திருமலைச்சாரி சு.ஞானசிகாமணி.

## கா.மு. அஹமது மீரான்

16.11.1931 இல் கா.மு. அஹமது மீரானுக்கு வ.உ.சி. எழுதிய கடிதம் இதோ; அன்பார்ந்த நண்பர் அவர்களே, இவண் நலம், அவண் நலத்தைக் கோருகிறேன்.

தங்கள் கடிதங்கள் வந்து சேர்ந்தன. **தங்கள் மணியார்டர் சரியான சமயத்தில் வந்து சேர்ந்தது.** அவற்றிற்காக நான் தங்களுக்கு மிக்க வந்தனம் அளிக்கிறேன். தங்கள் நலத்தையும், குடும்ப நலத்தையும் நாடுகிறேன். தங்களன்புள்ள வ.உ.சிதம்பரம் பிள்ளை.

## கா.சி. முகம்மது இஸ்மாயில்

உத்தமபாளையம் இலக்கிய மன்றத் தலைவர் ஜனாப் கா.சி. முகம்மது இஸ்மாயில். இவருடைய பெரிய தகப்பனாரின் புதல்வர் கா.மு. அஹமது மீரான் வ.உ.சி.யை கோவில்பட்டியில் சந்தித்தார்களாம். வ.உ.சி.யின் வீட்டிற்கு வந்து கிடந்த அவருடைய நூற்பிரதிகளில் சிலவற்றை தானே எடுத்துக் கொண்டுபோய் அவற்றை உத்தமபாளையத்திலும்,

## ஐந்நூறு ரூபாய்

அதன் சுற்றுப் புறங்களிலும் விநியோகம் செய்து, அவற்றின் விலையான ரூ.500 ஐ மணியார்டரில் வ.உ.சி.க்கு அனுப்பிவைத்தார்களாம். இந்தத் தொகையை ஏற்றுக் கொண்ட குறிப்பை மேலே உள்ள கடிதத்தில் காணலாம். இத்தகவலையும் இக்கடிதத்தையும் அளித்த ஜனாப் கா.சி.முகமது இஸ்மாயில் அவர்களுக்கு எனது உளங்கனிந்த நன்றி என்பார் பேராசிரியர் அ.சீனிவாசராகவன். (அன்றைய 500 ரூபாய் இன்றைய பல இலட்சங்களுக்கு சமமாகும்.)

*வ.உ.சி. சிதம்பரனார் நூற்றாண்டு விழா மலர் V.O.Chidambaram Centenary Souvenir 1972 ஆ.சீனிவாசராகவன், அமைப்பாளர் வ.உ.சி. நூற்றாண்டு விழா மலர்க்குழு, தூத்துக்குடி வ.உ.சி.யின் சொற்களில், பக்கம் 4*

## வ.உ.சி. இழுத்த செக்கு - கலைஞர் மு.கருணாநிதி

கோவைச் சிறையில் வ.உ.சி. இழுத்த செக்கினை, கோவைச் சிறையில் கேட்பாரற்றுக் கிடந்த அந்தச் செக்கினை தமிழகச் சட்டப்பேரவையில் விடுதலை வெள்ளிவிழா நாள் பொன்னுரையில் நள்ளிரவில் கூடிய சட்டமன்ற உறுப்பினர் கூட்டத்தில் (1972), வ.உ.சிதம்பரனார் இழுத்த செக்கு, அவரது நினைவுச் சின்னமாக கருதப்பட்டு, சென்னை நகரிலே, சிறப்புமிக்க ஓரிடத்திலே வைக்கப்படும் என்று தமிழக முதல்வர் கலைஞர் கருணாநிதி அறிவித்தார். அவ்வாறே அந்தச் செக்கும் வைக்கப்பட்டது. சென்னை அரசினர் தோட்டத்தில் காந்தி இல்லத்துக்குப் பக்கத்தில் காட்சி அளிக்கிறது.

## கப்பலோட்டிய தமிழன்

பத்மினி பிக்சர்ஸ் தயாரித்து பி.ஆர்.பந்துலு டைரக்ஷனில் வெளிந்த திரைப்படம் நடிகர் திலகம் சிவாஜி கணேசன் நடித்து, 1961 ஆம் ஆண்டு அமரகவி பாரதியார் பாடல்களுடன் வெளிவந்தது. திரைக்கதை சித்ரா. கிருஷ்ணாசாமி, வசனம் எஸ்.டி. சுந்தரம், கப்பலோட்டிய தமிழன் கதை ம.பொ. சிவஞானம் எழுதிய நூலையும், சரித்திரத்தையும் தழுவி எழுதப்பட்டது. இந்தத் திரைப்படத்தைத் தந்தது மூலம் தமிழகத்தில் வ.உ.சி.க்கு புகழும் பெருமையும் வழங்கியவர்கள் நடிகர் திலகம் சிவாஜி கணேசனும், பத்மினி பிக்சர் சாரும்.

## வ.உ.சி. மணி மண்டபம்

## 23.6.2005 - செல்வி ஜெ. ஜெயலலிதா

திருநெல்வேலியில் வ.உ.சி. மணி மண்டபம் 15.6.2005 இல் திறக்கப்படுவதாக அறிவிக்கப்பட்டது. பின்னர் தேதி மாற்றப்பட்டது. 23.6.2005 இல் அன்றைய தமிழக முதல்வர் ஜெ.ஜெயலலிதா அவர்கள் வ.உ.சி. மணி மண்படத்தை நாட்டுக்கு அர்ப்பணித்தார்.

## அறிஞர் அண்ணா

*மறைந்த மாவீரர் வ.உ.சி. அவர்களையும், அவர் நாட்டின் விடுதலைக்காக ஆற்றிய அரும் பெரும் தொண்டுகளையும் மக்கள் மறக்கமுடியாது. பேரையும், புகழையும் விரும்பாமல் ஆடம்பரமற்ற வாழ்க்கையை நடத்தி நாட்டுப்பணியாற்றியவர்.*

## வேண்டுகோளும் விருப்பமும்

*ஒப்பற்றசேவை புரிந்தசிதம்பரனாருக்கு நாடு காட்டவேண்டிய நன்றியறிதலையும், செய்யவேண்டிய கடமையையும், இதுவரை மறந்திருந்ததுபோல், இனியும் இருக்கக்கூடாதென்பதையும், இந்தச் சமயத்தில் நினைவூட்டுவதோடு, செய்நன்றி கொல்லாத தமிழர் பண்பாட்டினை, நிலைநாட்டிடவும், சிதம்பரனார் புகழ் என்றும் நிலைக்கவும், அவருடைய குடும்பம் மனவேதனையால் நொந்து போகாதபடி பார்த்துக் கொள்ளவும், இப்போதாவது தமிழ் மக்கள் முன்வந்து ஆவன செய்யவேண்டுமென்பதே எனது வேண்டுகோளும், விருப்பமுமாகும் என்று திராவிட நாடு இதழில் அறிஞர் அண்ணா எழுதிய வரிகளை எண்ணிப்பார்க்கிறேன். (மறுபதிப்பு தமிழரசு 16.10.1986)*

## வென்றிடுவேன் காலால் மிதித்து

எம்மனமும் என் உடம்பும் என் சுகமும் என் அறமும்
என் மனையும் என் மகவும் என் பொருளும் என் மனமுங்
குன்றிடினும் யான் குன்றேன், கூற்றுவனே வந்திடினும்
வென்றிடுவேன் காலால் மிதித்து

*என்று சுதேசிய நாவாய்ச் சங்கக் கடன் கட்டளை வந்தபோது அஞ்சாது பாடிய வ.உ.சி.யின் புகழை அகிலம் உள்ளவரை அழியாது காப்போம்!*

### நாமக்கல் கவிஞர்

கள்ளமற்றுக் கலகலத்த பேச்சு கேட்கும்
கறுப்பெனினும் சிரித்த முகம் கருணை காட்டும்
குள்ளமென்றும் ஒருருவம் இருகை கூப்பிக்
குண்டெடுத்துக் கடைந்ததெனக் குலுங்க நிற்கும்
வெள்ளையன்றி வேறு நிறம் அறியா ஆடை
வேதாந்த சித்தாந்த ஒளியே வீசும்

கொள்ளை கொள்ளை சிறையிருந்த குறிகள் தோன்றும்
குலவு பிள்ளைச் சிதம்பரத்தை நினைவு கூர்ந்தால்...

நாமக்கல் வெ.இராமலிங்கம் பிள்ளை

## கவிமணி தேசிய விநாயகம் பிள்ளை

தேரூர் சிவதாணு பிள்ளை தாமரைக்குளம் ஆதிலட்சுமி தவப்புதல்வர் கவிமணி தேசிய விநாயகம் பிள்ளை *(27.7.1876 – 26.9.1954)*

தமிழறிஞர்கள் வரிசையில் வ.உ.சிதம்பரம் பிள்ளை குறித்து தேசிய விநாயகம் பிள்ளை எழுதிய வரிகள் இதோ;

## உலகம் முழுவதும் பெருமையாய் பரப்ப வேண்டும்

வட நாட்டிலே திலகர் பெருமான் இந்திய மக்கள் இதயத்தில் எப்படி பூஜிக்கப்படுகிறாரோ அப்படி வ.உ.சி.யை அறியாத தமிழர் இல்லை என்று சொல்லலாம். அது போதாது; வ.உ.சி.யை அறியாத இந்தியர்கள் இல்லை ஏன்? அவரை அறியாத மக்களே இல்லை என்று சொல்லும் நிலைமைக்கு நாம் அவரது பெருமையை உலகுக்கு பரப்ப வேண்டும்.

## மனிதன் அறிய வேண்டிய இலட்சிய வாழ்வு

அப்படிச் செய்தால் தான் பிள்ளை அவர்கள் நமக்காகச் செய்த தியாகத்திற்குத் தமிழர்களாகிய நாம் சரியான கைம்மாறு செய்தவர்களாவோம். உலகத்தில் வழங்கும் பல மொழிகளிலும் அவரது வாழ்க்கை வரலாற்றை மொழி பெயர்த்து எல்லோரும் அறியச் செய்ய வேண்டும். இதனால் அவரது வாழ்க்கையிலிருந்து மனிதன் அறிய வேண்டிய இலட்சிய வாழ்வை உணரமுடியும். இதுவே அந்தத் தியாக மூர்த்திக்கு நாம் அன்புடன் அளிக்கும் காணிக்கையாகும்.

## முத்துவேலர் கருணாநிதி ஸ்டாலின்

வ.உ.சி.யின் 150வது பிறந்த நாளின்போது மாண்புமிகு தமிழக முதலமைச்சர் தளபதி மு.க.ஸ்டாலின் அவர்கள் தனது தந்தையார் கலைஞர் மு. கருணாநிதி அவர்கள் 1972இல் வ.உ.சி. நூற்றாண்டு விழாவில் பல்வேறு சிறப்புகளைச் செய்ததுபோல 14 அறிவிப்புகளைத் தந்துள்ளார்கள்.

*1) வ.உ.சி.க்கு மார்பளவு சிலை 2) 'வ.உ.சிதம்பரனார் சாலை' 3) வ.உ.சிதம்பரனார் பூங்கா 4) வ.உ.சிதம்பரனார் வாழ்க்கை வரலாற்றை அறியும் வகையில், ஒலிஒளிக் காட்சி 5) வ.உ.சிதம்பரனார் திரைப்படம் நவீன டிஜிட்டல் முறையில் வெளியிடப்படும். 6) வ.உ.சிதம்பரனார் பெயரில் புதிய ஆய்விருக்கை. 7) வ.உ.சிதம்பரனார் எழுதியுள்ள புத்தகங்கள் மக்களுக்குக் கிடைக்க ஏற்பாடு. 8) வ.உ.சிதம்பரனார் படித்த பள்ளிக்கு 1.05 ஒதுக்கீடு 9) 'கப்பலோட்டிய தமிழன் வ.உ.சி. விருது' 10) வ.உ.சிதம்பரனார் மறைந்த நவம்பர் 18ஆம் தேதி, தியாகத் திருநாளாக கொண்டாடப்படும். 11) இந்த ஆண்டு, செப்டம்பர் 5, 2021 முதல் செப்டம்பர் 5 2022 வரை, தூத்துக்குடியிலும், திருநெல்வேலியிலும் உருவாகும் அரசுக் கட்டிடங்களுக்குக் கப்பலோட்டிய தமிழன் வ.உ.சிதம்பரனார் பெயர் சூட்டப்படும். 12) பேருந்து ஒன்றில் வ.உ.சிதம்பரனார் வாழ்க்கை புகைப்படக் கண்காட்சி 13) வ.உ.சிதம்பரனார் குறித்த இணையவழிக் கருத்தரங்கம். 14) வ.உ.சிதம்பரனார் நூல்கள் கையெழுத்துப் பிரதிகள் முழுவதும் இணையத்திலே மின்மயப்படுத்தி வெளியிடப்படும்.*

அஞ்சுவனோ வெள்ளையரின் ஆட்சியொழிப்பேனென்று
வஞ்சினம் கூறிநின்ற மாவீரன் விஞ்சுபுகழ்
செந்தமிழ் நாட்டுத் திலகன் சிதம்பரத்தைச்
சிந்தையில் கொள்வோம் தினம்.

******

## செ.திவான் எழுதிய, பதிப்பித்த வ.உ.சி.யின் நூல்கள்

1. வ.உ.சியின் அழகும் ஆரோக்கியமும் (1996)
2. வ.உ.சியின் துன்பத்தின் கற்பனை (1996)
3. வ.உ.சியும் பெரியாரும் (1996)
4. வ.உ.சியின் அரசியல் பெருஞ்சொல் (1996)
5. வ.உ.சி பாடல்கள் (1999)
6. வ.உ.சியின் புகழ்பாடிய முன்னோடிகள் (1999)
7. வ.உ.சியின் நூற்கோவை (1999)
8. வ.உ.சியும் பரலி சு.நெல்லையப்பரும் (1999)
9. வ.உ.சி. கண்ட பாரதி (2000)
10. வ.உ.சியின் வள்ளியம்மை சரித்திரம் (2000)
11. வ.உ.சியும் தொல்காப்பியமும் (2001)
12. வ.உ.சியும் திருக்குறளும் (2001)
13. இலக்கியப் புரட்சியாளர் வ.உ.சி. (2002)
14. வ.உ.சியின் உயில் (2003)
15. வ.உ.சியின் சிவஞான போத உரை (2008)
16. வ.உ.சியின் சுயசரிதை (2008)
17. வ.உ.சி வாலேஸ்வரன் (2015)
18. வ.உ.சியும் சைவ சமயமும் (2015)
19. வீர வ.உ.சியும் ஆஷ் கொலையும் (2015)
20. வ.உ.சி. வழங்கியவர்கள் (2021)

வ.உ.சி.தொடர்பான நூல்கள்

21. பாரதியும் காங்கிரசும் (1998)
22. பாரதி செல்லம்மாள் உயில் (2009)
23. மகாகவி பாரதியின் இஸ்லாத்தின் மஹிமை (2011)
24. பரிசு பெறாத பாரதி பாடல் (2011)
25. சுதந்திரச் சங்கநாதம்<br>சுப்பிரமணியசிவா சிறைவாசம் (2012)

ரெகான் சுலைமான் பதிப்பகம்

ரூ.120/-